# பெண்



அ.மு.பரமசிவானந்தம்.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

502

# பெண்

அ. மு. பரமசிவானந்தம், M. A., M. Litt.,
*துணைத் தமிழ்ப் பேராசிரியர்,*
*பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30.*

**தமிழ்க்கலைப் பதிப்பகம்,**
*சென்னை-30.*

முதற்பதிப்பு டிசம்பர்—1955
இரண்டாம் பதிப்பு செப்டம்பர்—1960
உரிமைப்பதிப்பு

விலை ரூ. 1-50

விற்பனை உரிமை
**பாரி நிலையம்**
பிராட்வே, சென்னை-1.

---

ஜெனரல் பிரிண்டர்ஸ்: பெரியமெட், சென்னை - 3

# முன்னுரை

உள்ளத்தைப் பெண்ணாக்கி உருகி உருகிப் பாட்டிசைத்தார் மணி மொழியார். அந்த வழியே என் உள்ளமும் பெண்ணாயது. அப்பெண் உள்ளம் வரலாறு அறிந்த நாள் தொட்டுத் தமிழ்ச் சமுதாயத்தே பெண்கள் வாழ்ந்ததை எல்லாம் எண்ணிற்று. சிறக்க வாழ்ந்த நாட்கள் சில; சரிந்து வீழ்ந்த நாட்கள் சில. அவற்றையெல்லாம் என் உள்ளத்தடத்து, உணர்ச்சித் திரையில் காணக் காண உண்டான சொற்களே இந்நூல் வடிவில் வந்துள்ளன.

புலவர் சிலரும் கவிஞர் சிலரும் போற்றப்படுகின்றனர்; சிலர் பழிக்கப்படுகின்றனர். அப்போற்றலும் பழிப்பும் பெண் உள்ளப் பெருமூச்சின் வழி வந்தனவேயன்றி என் சொந்தமல்ல. தமிழ் நாட்டுப் பெண்ணினம் காலந்தோறும் வாழ்ந்த கதையை ஒரு பெண் உளக்கண்ணால் கண்டு தீட்டும் கற்பனைச் சொல்லோவியமாகிய இந்நூல், தமிழ் நாட்டுக்கு - சிறப்பாகத் தமிழ் மகளிர்க்கு-உணர்ச்சி எழுப்பும் ஒரு கருவூலமாகலாம் என நினைக்கின்றேன்.

இந்நூல் வெளி வர உதவிய அனைவருக்கும் என் நன்றி,

பணிவார்ந்த,

சென்னை-30,
30—9—'60.

அ. மு. பரமசிவானந்தம்

# உள்ளுறை


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| சங்க காலத்தே மங்கையர் நிலை | ... | 5 |
| பெண்மையும் துறவும் | ... | 20 |
| பெண்மையின் பெரும்புரட்சி | ... | 37 |
| சுந்தரர் காலப் பெண்டிர் | ... | 45 |
| கவிஞர் காட்டும் காரிகைமார் | ... | 55 |
| பதினேழாம் நூற்றாண்டில் பாவையர் நிலை | ... | 69 |
| இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் | ... | 83 |
| இன்றைய நிலை | ... | 92 |

# சங்க காலத்தே மங்கையர் நிலை

இதோ நானும் பெண்ணுய்த்தானே வாழ்கின்றேன்! என் அருமைத் தமிழ் நாடே! உன்னிடம் எத்தனை எத்தனை அரும்பெருஞ்செல்விகள் பிறந்து வளர்ந்து வாழ்ந்து, நாட்டுக்கும் உலகுக்கும் வழி காட்டிகளாய் இருந்து மறைந்தார்கள்! அவர்கள் இருந்து அறம் வளர்த்த இந்நாட்டில் நானும் ஒரு பெண்ணுய் உலவி வருகின்றேனே! அறப்பெருஞ் செல்வியர் பலர் வாழ்ந்த தமிழ் நாட்டில் இன்று பெண்கள் நிலை இரங்கத்தக்க தாகத்தானே அமைந்துள்ளது!

அதோ! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் என் அருமைத் தமிழ் நாட்டில் பெண்டிர் வாழ்ந்த காட்சி என் மனக் கண்முன் தோன்றுகின்றதே! அதோ! பெருநெறி உணர்த்திய நரை மூதாட்டிகள் என்னை வாழ்த்து கின்றுர்கள்! ஆகா! அவர் தம் முதுமையும் அறிவின் பெருமையும் எவ்வாறு போட்டியிடுகின்றன! 'பெண்கள் அஞ்சி அஞ்சிச் சாகும் பரம்பரையில் வந்தவர்கள்,' என் பதை அப் பெருமாட்டிகள் எவ்வளவு எளிதில் பொய் யாக்கிவிட்டார்கள்! அவர்தம் அடி பணிந்து, அவருடைய

அறவுரைகளை ஏற்றுக்கொள்ளக் காத்துக்கிடக்கும் கொற்றவர் தாம் எத்தனை பேர்! அதோ! அரசர்க்கிடையில் தூது செல்லும் அந்த அன்னையாரின் பேறும் பீடும் சொல்லில் அமைவனவோ! தொண்டைமான் அருகிலிருந்தும் அவனுக்கு அஞ்சாது அணி பெற்று விளங்கும் அவனது படைக்கலக் கொட்டிலை இகழ்ந்துரைத்த அவர் ஏற்றந்தான் எவ்வளவு உயர்ந்தது! அவர் பாடிய அந்த அறுபது சங்கச் செய்யுட்களும் எவ்வளவு ஏற்றம் பெற்று விளங்குகின்றன! அகமும் புறமும் அழகாக அமைத்துப் பாடும் அப்பெருநெறி, என்றென்றும் அறிஞரால் போற்றப்பட்டு வருகின்ற ஒன்றன்றோ! அரசன் அதிகமானோடு அருகிருந்து, அவன் அரசியற் பணிகளிலெல்லாம் பங்கு கொண்டு, உற்றுழி உதவி, ஒப்பற்ற இராச தந்திரியைப் போல வாழ்ந்த சங்க காலப் பெண் மணியின் பெருந்திறன்—அம்மம்ம;—பேசவும் கூடுமோ! 'ஆடவர் முன் செல்லின் அச்சம் வேண்டும்,' என்று பேசும் பெண்ணினத்திலே அத்தகைய ஒரு பெருஞ் செல்வியார் ஒருசேர முப்பெரு வேந்தரையும் - தமிழ் நாட்டுத் தனி வேந்தர் மூவரையும் - கண்டு. அவர் தம் ஒற்றுமையைவியந்து பாராட்டி யிருக்கும் பெரும்பண்பு வரலாற்றில் நிலைத்த இடம் பெற்ற ஒன்றன்றோ! மண மற்று வாடும் மலரைப் போன்ற **பாரி மகளிரைப்** பரிவுடன் கொணர்ந்து, மாறுபட்ட மூவேந்தர் முன்னிறுத்தி, வேண்டா மன்னரைப் பணிவித்து, மகட்கொடை நேர்ந்து, தம் ஆற்றலை நிறுத்தி அரும்புகழ் பெற்றவரென **ஔவையார்** போற்றப்படுகின்றாரே! இத்துணைக் கலை நலனும், அறிவுத் தெளிவும், அரசியற் பழக்கமும் பெற்ற மூதாட்டியார் ஒருவர், தமிழ் நாடே, உன்னிடத்தில் வாழ்ந்துதானே மறைந்திருக்கின்றார்! இத்தகைய பெண்ணிற் பெருந்தக்காராய செல்வியரைப் பெற்ற நீ, இன்று எவ்வாறிருக்கின்றாய்?

'ஆம்! அவர் மூதாட்டியார். ஆகவே, அனைவரிடத்தும் அட்டியின்றி அளவளாவிப் பழகினார்!' என்று சொல்வார்கள். இள நலங் கனிந்த அணங்கனையார் சிலரும் அரசர்க்கு அறிவுறுத்தியும், பிறவகையில் நாட்டுக்கு நன்மை புரிந்தும் வாழ்ந்த அந்தப் பெருநாள், நல்ல வேளையாக, மறையாது நிலைபெற்ற நாளாகிவிட்டது! வடநாட்டவரும் வணங்கி வாழ்த்த ஒரு தனிக்கோலோச்சிய ஒப்பற்ற **கரிகாலன்** தனது பொய்க்களிப்பை மெய்க்களிப்பாக எண்ணித் தன்னை மறந்திருந்த காலை, அஞ்சாது அவன் முன்னின்று, 'நின்னினும் நல்லன் அன்றே, புறப்புண் நாணி வடக்கிருந்தோனே?' என்று அறிவுறுத்தும் ஆற்றல் யாருக்கு இருந்தது? அந்த **வெண்ணி**யூரில் வாழ்ந்த **குயத்தியார்** என்ற பெண் மணிக்கல்லவா அது பொருந்தியிருந்தது? முதுகில் அம்பு பட்ட காரணத்தால், படைவிட்டுத் தனிப்பட்டுச் சேரலாதன் வடக்கிருக்க, அந்த நிலையில் பகைவர் படையினைத் தோற்கடித்து, அந்த வெண்ணிப் பறந்தலையில் வாகைசூடி, வெற்றிவிழாக் கொண்டாடினான் கரிகால் வளவன். அவன் வெற்றிக் களிப்பில் அருகிருந்த ஆடவர் அனைவருக்கும் அவனுக்கு அறிவுறுத்த வேண்டும் என்ற எண்ணம் பிறக்கவில்லை. அந்த ஊரில் வாழ்ந்த குயத்தியார் என்னும் நல்லியற்புலமை மெல்லியலார் அவன் அருகிற்சென்று, நாடாளும் பெருமன்னன் என்றும் அஞ்சாது, அவன் வெற்றி விழா மதிப்புக் குரியதன்று என்று அறமுரைத்தது வரலாறு கண்ட ஒன்றன்றோ?

இன்னும் **வெள்ளி வீதியார்** போன்ற எத்துணைப் பெருஞ்செல்வியர் கருத்துக்கினிய கவிகள் புனைந்து நாட்டை வளம்படுத்தியுள்ளனர்! 'பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே,' என்று பேசிய இடைக்கால இழிகருத்துச், சங்க காலத்துக் காணாதது போலும்! எப்படியோ இடைக்காலத்தில் ஆணுக்கும் பெண்ணுக்

கும் எல்லா வகையிலும் வேறுபாடு காட்டுங் கருத்துப் புகுந்துவிட்டதே ! ஏன் ? மனிதர்களுக்குள்ளே செல்வத்தாலும், செருக்காலும், பட்டம் பதவியாலும், பிறவற்ருலும் வேறுபாடு காட்டக்கற்ற சமூகம், இதைத்தாஞ செய்யும் ! இன்னும் என்னென்ன கொடுமைகளைச் செய்ததோ, யாரறிவார் ! ஆனால், அந்தப் பழம்பெரு நாளை - அணங்கனையார் எங்கும் சிறப்புற்று விளங்கிய அந்நாளை - நினைக்கும் போது எவ்வளவு உணர்வு நம் உள்ளத்தில் ஊற்றுப்போலப் பெருக்கெடுக்கின்றது !

அந்தப் பாண்டியன் ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டத் தவறிழைத்தான். 'அத்தவற்ருல், கோவலன் கொலையுண்டான் என்பதை அறிந்த கண்ணகிக்குண்டான சீற்றம் செப்புந் திறத்ததோ ! இக்காலத்துப் பெண்டிரைப் போல ஒரு மூலையில் உட்கார்ந்து ஒப்பாரி வைக்கவில்லை அந்நங்கை : ஐந்தாறுபேரைக் கட்டிக் கொண்டு எதுகைமோனை நயம்பட அழுகைப் பாட்டுப் பாடிக்கொண்டிருக்கவில்லை. அவளிடம் பெண்டிற்குரிய பெருங்குணங்கள் அனைத்தும் குடிகொண்டிருந்தன. 'மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே, தேனே.' என்று கோவலன் அவளை அழைக்கும் காலத்து அவளது கற்பின் திட்பமும், அறிவின் செறிவும் நம் மனக்கண்முன் தோன்ருமற் போகவில்லை. தன் கணவன் மாதவியோடு மகிழ்ந்துறைந்த காலத்தும் அவன் மனம் கோணுவகையில் உள்ளவற்றையெல்லாம் உவந்தளித்துப் பின்னர் வழங்கப் பொருள் இன்மையால் விலைமதிக்கக ஒண்ணுத தன் காற்சிலம்பையும் கொடுக்க விழைந்த காரிகை அக்கண்ணகி. அக்கண்ணகியே பாண்டியன் முன் - தவறிழைத்த தமிழ்நாட்டுத் தலைசிறந்த வேந்தன் முன் - கொற்றவையாய்க் காட்சி தருகின்ருள். தவறிழைத்த வேந்தன் தான் இழைத்த தவற்றை உணரச் செய்வதற்காக, ஒற்றைச் சிலம்பைக் கையிலேந்தி,

அவள், அந்த மாடமதுரை மாநகரின் தெருத்தொறும் சென்ற காலத்தில் கொண்ட தோற்றம் மறக்கவியலு வதோ! எத்தனை இடர்வந்தாலும், எண்ணி எண்ணி அடுப்பங்கரையில் அமர்ந்து கண்ணீர் வடிக்கும் இன் றைய நாகரிக நாட்டு மங்கையர் எங்கே! மன்னவனு யினும், தவறிழைப்பானாயின், அவன் குற்றத்தை எடுத்துக் காட்டி நியாயம் பெற வெற்றிச் செல்வியாம் கொற்றவைபோலக் கொற்றவன் அவைக்களம் நண்ணிய அந்தக் கண்ணகி எங்கே!

சென்ற செல்வி செய்ததென்ன? அங்கே அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய்த் தேம்பி நிற்கவில்லை அவள். 'அழுது புரண்டாலும் மாணடார் வாரார்,' என்பது அவள் அறிந்ததே. ஆயினும், தென்னவன் தவறிழைத்ததை மண்ணவர் அறியக் காட்டுவதே அவள் கருத்து. அனைவரும் அடிவணங்கும் பைந்தமிழ் வளர்த்த பாண்டியனைத் 'தேரா மன்னா' என்று வீரத்தோடு விளிக் கின்றாள்; பிறகு தன் கணவன் கள்வன் அல்லன் என்ப தைத்தன் காற்சிலம்பை உடைத்து, அதனின்று தெறித்த மாணிக்கப் பரல் மூலம் நிலைநாட்டுகின்றாள்; தவறிழைத்த பாண்டியனை அறத்தையே கூற்றாக்கிக் கொல்விக் கின்றாள். அந்நிலையில் எந்நாட்டிலும் எடுத்துக் காட்ட வியலாத தமிழ் நாட்டுத் தனிப் பெருஞ்சிறப்பாய் உள்ள கற்பு நெறி நம் மனக்கண் முன் மாட்சியுடன் காட்சி யளிக்கின்றது. தமக்குத் தவறு நேர்ந்த காலை அஞ்சி அலமராது முன் வந்து அறமுரைத்த வீரப்பெண்ணாகிய கண்ணகி நம்முன் காட்சி அளிக்கும் அதே நேரத்தில்; மறு கோடியில் தன் கணவன் தவறிழைக்க அத்தவறே அவன் உயிரைக் கவர்ந்ததைக் கண்ட கற்புச் செல்வி பாண்டிமாதேவி தானும் அவ்வறந் தவறிய நாட்டில், தன் கணவன் பிழைபட்டான் என்று பிறர் பேசக் கேட்கவேண்டாப் பெருந்தகவால், 'கணவனை இழந்

தோர்க்குக் காட்டுவதில்!' எனக் கூறி, அதே அரசு கட்டிலில் கணவனோடு உயிர் விட்ட காட்சியும் நம் மனக்கண்முன் வந்து நிற்கின்றது!

மறக்கோலம் கொண்ட கண்ணகியின் முன் காவற்றெய்வமும் அங்கியங்கடவுளும் கை கட்டி வாய் புதைத்து நின்ற காட்சியும் நம் மனக்கண்ணுக்குப் புலனாகின்றது. கடவுளரையும் தன் வாய்மொழிப்படி ஆட்டி வைத்த அந்நாளைய பெண்மைக் குலம் எங்கே! ஓலையின் சலசலப்புக்கும் அஞ்சி அஞ்சி அகங்குழையும் இன்றைய பெண்மைக் குலம் எங்கே!

அதோ பத்தினித்தேவிக்கு விழா ஆற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் சேரன் செங்குட்டுவன் அனைவரையும் அருகழைத்து ஏதோதோ பேசுகிறானே! யாருக்குக் கோயிலெடுப்பது என்பதல்லவா அவன் கேள்வி? என்ன! அனைவரும் வாய் மூடிக் கிடக்கின்றனரே! அமைச்சரும் கூடவா பேச இயலாது போய்விட்டனர்? என்ன! அப்படிப்பட்ட கேள்வியா அது? இருவருள் எவருக்குச் சிறப்புச் செய்வது என்பதுதானே? 'கோயிலெடுப்பது கணவன் மறைந்தபின் பதினான்கு நாட்கள் சுற்றித்திரிந்து பின் நெடுவேள் குன்றத்து அடிவைத்தேறிய அணங்கு கண்ணகிக்கா, அல்லது கணவனோடு கழிந்த பாண்டிமா தேவிக்கா?' என்னும் கேள்விதானே அது? என்ன! இதற்காக எவரும் பேசவில்லையே! திடீரென அனைவரும் ஊமையர் ஆகிவிட்டனரா? இதற்கா இவ்வளவு ஆழ்ந்த எண்ணம்? ஆம்! அதோ யாரோ எழுந்திருக்கின்றாரே! யார் அரசனுக்கு அவ்வளவு அண்மையில் உள்ளவர்? வானவன் மாதேவியாரே! அரச பத்தினி யாரே! அவர் பேசவா முயல்கிறார்? ஆம்; கேள்விக்குத்தான் விடை தருகின்றார். ஆகவே, ஆடவர் அனைவரும் - அனைத்து நூலுணர்ந்த அமைச்சர் அனைவரும் - தலை தாழ்ந்து, சொல்வதறியாது தடுமாறும்

அந்த வேளையில், இதோ பெண்ணினம் போற்றும் பேரரசியார்—சேரன் தலைவியார் – வேண்மாள் என்னும் விருப்பிற்குரிய பெயரினர் பேசுகின்றார். அவர் பேச்சு எவ்வளவு பொருத்தமாய் அமைகின்றது! கற்பிற்சிறந்த பாண்டிமா தேவியாரினும், கண்ணகிக்குக் கோயி லெடுக்கச் சொல்லுகின்றாரே! அவர் காட்டும் காரணம் எவ்வளவு பொருத்தமாய் அமைகின்றது! 'கணவனோடு அரசு கட்டிலில் வீழ்ந்திறந்த செல்வி சிறந்தவளாயினும் நம் நாடு நோக்கி வந்து, நமது மலையில் கணவனோடு விண்ணிழி விமானத்தில் ஏறிச் சென்ற கண்ணகிக்கே கோயில் எடுக்க வேண்டும்!' என்று அந்த அரசியார் சொல்லும்போது அவையில் எவ்வளவு ஆரவாரம்! அவர் தம் வாய்மொழிப்படிதானே செங்குட்டுவன் கண்ணகியின் கோயிலைச் சமைக்கின்றான்! ஏதோ பெய ருக்கு மட்டும் அரசி என்றும் பட்டமகிஷி என்றும் இராமல், அரச காரியங்கள் அனைத்தினும் அரசனுக்குக் கைகொடுத்து, உற்றுழி உதவி, அமைச்சரின் மேலாக அறிவுரையும் ஆய்வுரையும் வழங்கி, அன்று தமிழ் நாட்டின் பெண் இனத்தின் பெருமையைப் போற்றிப் புரந்த அன்னையர் வழியிலேதான் நானும் வந்துள்ளேன்.

சங்க கால இயக்கியங்கள் இன்னும் எத்தனையோ அன்னையரை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்து கின்றன! கரிகாலன் மகளாராகிய **ஆதிமந்தியார்** தம் கணவனோடு காவிரிக்கரையில் புனலாடிய பொழுது, புனல் வழி அவனை வெள்ளம் ஈர்த்துச் செல்லப் பெரிதும் வருந்தி, தாமும் கரை வழியே சென்று கடலருகே தம் காதற்கணவனை மீண்டும் பெற்றதும் நம் தமிழ் நாட்டு நிகழ்ச்சிகளுள் ஒன்றாகத்தானே அமைந்துள்ளது! நீரும் நெருப்புங்கூட மங்கையர் தம் வாய்மொழி கடவா நெறியில் அன்று இந் நாட்டில் பெண்மை வாழ்ந்து வந்தது. பெண்டிர்தம் ஏவல் கேட்க அனைவரும் முன்

நின்றனர். ஆனால், இன்றைய பெண்டிர் மற்றையோர் ஏவல் வழியேதானே வாழக் கடமைப்பட்டவராகின்றனர்?

'இடைக்குலமாதர்க்கு அடைக்கலம் தந்தேன்!' என்ற வாய்மொழியைத் தாய்மொழியெனக் கொண்டு, தன்னிடம் அடைக்கலமாக வைக்கப்பட்ட கண்ணகியை எவ்வளவு கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றினாள் **மாதரி** என்னும் அந்த மங்கை நல்லாள்! கோவலனைப் பின்பற்றிக் கண்ணகியும் சென்ற பின் அடைக்கலப் பொருளை இழந்த அந்தப் பெரும் துன்பத்தாலேயே தானும் வருந்தியிறந்த அந்தப் பெருநிலைப் பெண்டிர் வாழ்ந்த தமிழ் நாடுதானே இது? 'காமம் பெரிதே! களைஞரோ இலரே!' என்று அன்றைய தமிழர் வாழ்வை எண்ணி எண்ணிப் பாடிய **வெள்ளி வீதியார்** போன்ற பெருநலப் பெண்மணிகள் நம் மனக் கண்முன் காட்சி அளிக்கின்றார்களே! **குறமகள் இள வெயினி**யும், **பேய்மகள் இளவெயினி**யும் பாடிய பாடல்கள் இன்றளவும் நலம் கெடாது வாழ்கின்றனவே! மலையமான் திருமுடிக்காரியையும், மலையமான் சோழிய வேனாதி திருக் கண்ணனையும், சோழன் குலமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனையும் பாடிய பெரும் புலமைச் செல்வியரான **மாறோக்கத்து நப்பசலை**யாருள்ளிட்டுச் சங்கச் செய்யுட்களில் தங்கி வாழும் பெண்டிர் எத்தனை பேர். ஒரு கண்ணகிக்காக—கணவனைப் பிரிந்து கடுந் துயருழந்த பெண்ணுக்காக—பேகன் மனைவிக்காக—எத்தனைப் புலவர் முன்வந்து அவரது துயரத்தை நீக்கி வைத்தனர்! கொடை வள்ளல்களுள் ஒருவனாய் இருந்துங்கூட, பேகன், கொண்ட மனைவியை விட்டுப் பிரிந்த ஒரு காரணத்தால், புலவர் அவனை எவ்வாறு வெறுத்து ஒதுக்குகின்றனர்! புலவர் தம் பெருமுயற்சியாலன்றோ

பேகன் தன் காதற்றலேவியைச் சேர்ந்து களிமகிழ் வெய்தினன்.

**பூதப்பாண்டியன் தேவியார்** தம் வீரவாழ்வு எப்படிப் போற்றப்படுகின்றது! **பாரி மகளிர்** பாடிய பாடலும் நம் காதுகளில் ஒலிக்கின்றனவே! வாழ்வும் தாழ்வும் அவரை ஏற்றியும் இறக்கியும் வந்த அந்த நிலேகளில் அவர்தம் உள்ளத்தமைந்த புலமை நிலே வெள்ளமெனப் பெருக்கெடுத்து வந்துள்ளதை வியவாதார் யார்!

அந்தக் காலத்தே பெண்களுக்கு எவ்வளவு உரிமை இருந்தது! ஒருத்தி தான் விரும்பிய கணவனே மணந்து களவும் கற்பும் கடவாது வாழ்ந்த அந்தப் பெருநெறி தானே அன்றைய இலக்கியங்களிலெல்லாம் பேசப் படுகின்றது! **எட்டுத்தொகை** நூல்களுள் ஆறு நூல்கள் காதல் வாழ்வையே குறிப்பன வல்லவா? ஒருவனும் ஒருத்தியும் ஒத்த நலனும் ஒத்த கல்வியும் கொண்டவர் என்று கூறும்போது – ஆடவரோடு பெண்டிரும் ஒத்த கல்வி நலம் பெற்றிருந்தனர் என்பதை அறியும்போது – எவ்வளவு உணர்ச்சி உண்டாகின்றது! கணவனேடு மனங்கலந்து வாழும் அக்காதல் நெறியிலே எவ்வளவு பெருமை அன்றைய தமிழ் மக்களுக்கு! வீடும் வேண்டா விறலும், அந்தக் காதல் வாழ்வில் முகிழ்த்த ஒன்று அன்ரே? அதனலன்ரே இரண்டறங்களேயும் எண்ணிப் பார்த்த **திருவள்ளுவர்,** இரண்டினும் மேலாயது காத லறம் என்பதைக் கண்டு, 'அறன் எனப்பட்டதே இல் வாழ்க்கை'' என்று தேற்றேகாரம் கொடுத்துக் கூறினர். மனேக்குரியவள் பெண் என்பதையன்ரே **'இல்லாள்'** என்ற சொல்லும், **'மனேவி'** என்னும் சொல்லும், ,**மனேக் கிழத்தி'** என்ற தொடரும் எடுத்துக் காட்டுகின்றன. அந்த இல்லற நெறியில் கணவனது வாழ்வுக்குத் துணே யாய் நின்ற செல்வியர், மனேக்கணிகலனுக மங்கலமா

யன்றோ வாழ்ந்தனர்! அவர்தம் காதல் வாழ்வல்லவா அறிவறிந்த சான்றோரை உலகுக்கு ஈந்தது! ஆம்! தம் மைந்தரையும் மகளிரையும் போற்றிப்புரந்து, அவையில் வல்லரென உலகம் புகழ, அவர்தம் அரும்புகழ் கேட்டு மகிழ்ந்த தாயர் தமிழ் நாட்டில் எத்தனையோ பேர்! ஈன்ற பொழுதினும் அவன் புகழ் கேட்ட பொழுதல்லவா அன்னையின் மகிழ்ச்சி பன்மடங்காய்ப் பொலிந்தது! அந்தோ! அந்தக் குறளுக்கு ஏனோ **பரிமேலழகர்** உரை வகுக்குங்கால் வழுக்கிவீழ்ந்தார்! அவர் மேல் குற்றம் இல்லை; அது காலத்தின் கோளாறு. வள்ளுவர் காலத் தமிழ்நாட்டுக்கும் பரிமேலழகர் காலத்துத் தமிழ்நாட்டுக் கும் எத்துணை வேறுபாடு காணமுடிகின்றது. வள்ளுவர் பெண்களை வாழ்வின் துணையாக-அத்துணையால் பெறும் நலமாக - அமைத்தார். அவர் காலத்துப் பெண்மை அத் துணைப் பெருஞ் சிறப்புடையதாய் இருந்தது. ஆனால், பரிமேலழகர் காலத்திலோ, **'பெண்ணடிமை'** நாட்டில் நிலைபெற்று விட்டது. பெண்டிர் ஆடவரினும் தாழ்ந்த இயல்பினர் என்ற கொள்கை எப்படியோ நிலைபெற்று விட்டது. 'பெண் அறிவென்பது பெரும் பேதைமைத்து,' என்ற கொள்கை நிலைபெற்ற காலம் அது. அந்தக் கால மெனும் கடும்புயலால் தாக்குண்ட பரிமேலழகர், வேறு எவ்வாறு அக்குறளுக்குப் பொருள் காண இயலும்! ஒரு தாய் தன் மகனது பெருஞ் சிறப்பை எவ்வளவுதான் கண் ணுற் கண்ட போதிலும், அவனைப்பற்றி மற்றவர் புகழ்ந் துரைக்கக் கேட்பதுதானே அவளுக்குப் பேரின்பம்? மற்றும் புகழானது கண்டறிவது மட்டுமன்று; மற்றவர் வாய்க் கேட்டறிவதிலேயே நிறைவெய்துவது. பெண்ணும் ஆணும் தத்தம் வாழ்வின் வழிவந்த மக்கள்தம் புகழை மற்றவர் கூறக் கேட்டனர். அவருள் பத்துமாதம் சுமந்து பெற்ற மங்கை நல்லார் தம் மைந்தர் புகழைக் கேட்டு மிகமிக மகிழ்ந்தனர். இந்த நிலையில் 'தன்மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய்' என்றனர் வள்ளுவர்— தந்தையினும் தாய்க்கு உண்டாகும் மகிழ்ச்சி அதிகம் என்பது கருதி. ஆனால், பரிமேலழகர், தம் காலச் சூழலி டைப்பட்டுத் திசை தடுமாறிய காரணத்தால், பெண்களை இழிவு படுத்தும் முறையில் **'மக்கட்பேறு'** என்னும் அதிகாரத்தைப் **'புதல்வரைப் பெறுதல்'** என்று மாற்றி யும், 'கேட்டதாய்' என்பதற்குப் 'பெண்களுக்கு இயல் பாகவே அறியும் அறிவு இன்மையின் கேட்ட தாய் என்று கூறினார்' என்று பொருளெழுதியும் சென்றார். பாவம்! அவர் என்ன செய்வார்! காலம் அவ்வாறு சொல்ல வைத்தது. அதை மாற்றி உண்மையில் வள்ளுவர் உளத்தைக் காணும் - பெண்கள் நலம்பேணும் காலத்தில் நாம் நிற்க முயல்கிறோம்.

அந்தச் சங்க காலத்தில் பெண்டிர் எவ்வாறு கலை களில் வல்லவராய் இருந்தனர் என்பதை எண்ணும் போது உள்ளம் உவக்கின்றது. எத்தனை வகையான இசைக்கருவிகள் இந்நாட்டில் இருந்தன என்பதை எண்ணிக் கூற இயலுமா? ஆடலும் பாடலும் அரிவைய ரிடமே அடைக்கலமாக இருந்தன. கண்ணுக்கினிய கருத்துக்கேற்ற கணவரைத் தாமே தேர்ந்தெடுத்த அக்காரிகைமார், இவ்வருங்கலைகளின் மூலம் எப்படி அவர்தம் உள்ளத்தை உவகைக்கடலில் ஆழ்த்தியிருப்பர். வீணையும் நாதமும் போல அவர்தம் வாழ்வு எவ்வாறு இன்பக்கடலில் மிதந்து சிறந்திருக்கும்! ஆகா! அந்தத் தலை மகட்கு உரிய கிளவியைப்பற்றி விதந்தோத வந்த **ஆசிரியர் தொல்காப்பியனார்**,

> 'அருள்முந் துறுத்த அன்புபொதி கிளவி
> பொருள்பட மொழிதல் கிழவோட் குரித்தே.'

என்று எவ்வளவு சிறப்பாகக் குறிப்பிடுகின்றார்! மக்கள் வாழ்வின் வழிகாட்டிகளாய் அமைந்த அந்த அன்பும்,

அதன் அருங்குழவியாகிய அருளும் தலைவி மாட்டு அமைந்து கிடக்கும் பெருநிலையை யன்றோ அவர் எழுத்துக்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன? இன்னும் தலைவிக்கு உரிய இயல்பாகவும், மரபாகவும் அத்தொல் காப்பியர் காட்டும் சான்றுகள் எவ்வளவு பொருட் செறிவை உடையனவாய் அமைந்துள்ளன!

**‘தாய்போற் கழறித் தழீஇக் கோடல்**
**ஆய்மனைக் கிழத்திக்கு உரித்தென மொழிப.’**

என்ற இயல்பும்,

**‘தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்தல்**
**எத்திறத் தானும் கிழத்திக்கு இல்லை.’**

என்ற மரபும் எண்ணி எண்ணி மகிழத் தக்கன அல்லவா? தலைவன் தவறிழைத்துத் தன்னை மறந்து பிறர் வயப்பட்ட அந்தப் பிழைபாடிடத்தும், தாய் தன் குழந்தையிடம் காட்டும் கருணை நோக்கோடு அன்புடன் தன் கணவனைத் தாங்கி ஆதரிக்கும் தலையன்பு, நினைத்தாலும் நெஞ்சு நெக்குருகும் ஒரு பண்பன்றோ! தான் அமைந்து வாழ்தலே இல்வாழ்வின் ஏற்றம் என்ற பெரு நெறியில் அடக்கமுடைமை ஆய்ந்து அறிந்து கண்ட நெறி வழியே, கொண்ட காதலன்முன் தான் எவ்வளவு சிறந்தவளாயினும் தன்னைப் புகழ்ந்துகொள்ளாத ஒரு பெரு நெறி மறுபடியும் தமிழ் நாட்டுப் பெண்ணுலகத்தில் மலருமா! இல்லாத அழகினை உண்டு எனக் காட்டுதற்காகப் பல துணைப்பொருளை நாடி அலங்கரித்தும், இல்லாத அழகினை எடுத்துப் பேசியும், சொல்லிலும் செயலிலும் தற்புகழ்ச்சி காட்டும் நாகரிகப் பெண் வாழும் சென்னை போன்ற நகரங்களிலே இந்தச் செயல் காண முடியாத ஒன்றன்றோ! இப்படிக் கொண்ட கணவன், அவன் வழி வரும் மக்கள் ஆகிய அவர்தம் நலத்துக்காகத் தன் வாழ்வை, வளத்தை, பெருமையை, பிற செல்வங்களை

வேண்டா என ஒதுக்கும் தியாகமும் அன்றைய பெண் உரிமை நாட்டில் விளைந்த ஒரு பெருஞ்செல்வமன்றே? 'நமக்கு எல்லா உரிமையும் இருக்கின்றது!' என எண்ணி மனம்போன போக்கெல்லாம் போக நினைக்கும் ஒரு நாட்டில் இது போன்ற உரிமையும் தியாகமும் ஒருங்கே அமைந்த ஒரு பெண்மை உருக்காணக் கிடைத்த காலமும் ஒன்று இருந்தது என எண்ணும்போது எந்தத் தமிழ்ப் பெண்தான் மனம் மகிழ மாட்டாள்!

அந்தப் பெருநாளை எண்ணி மகிழும் அதே வேளையில், ஏனோ ஒரு புறம் வருத்தம் வந்து நிற்கின்றது! அந்தக் காட்சி மேடையில் ஓர் அவலக் காட்சியும்கூட அன்றோ தெரிகின்றது! ஆம்! அதோ தெரிகின்றதே, அந்தத் தெரு யாருடையது? பரத்தைய ருடையதா? அப்படியென்றால், அந்த நாளிலேயே இப்படி உடலை விற்கும் ஒரு தொழில், பெண்களுள் ஒரு சிலருக்கென அமைந்து விட்டதா? அஃது எப்படி இயலும்? புலவர் தம் கற்பனையாய் இருக்குமா அது! அன்றன்று! தொல் காப்பியம் தொட்டு எந்த இலக்கியத்திலும் அப்பரத்தையர் பேசப்படுகின்றனரே! தமிழ் நாட்டுத் தலை சிறந்த நாகரிகம் நிறைந்த நாள் என்று பேசப்படும் அந்தக் காலத்திலுங்கூட இதுபோன்ற அநாகரிகமும் கூடவே வாழ்ந்துதான் வந்ததா? இன்று வாழ்கின்ற செல்வருட் சிலர் '**வைப்பாட்டி**' என்று ஒரு பெண்ணை உடன் இருத்திக் கொள்வதுதான் பெருமை என்று எண்ணிப் பொய் வாழ்வு வாழ்கின்றனரே, அதுபோன்று அன்றைக்கும் தமிழ் நாட்டுச் செல்வரும் பிறரும் வாழ்ந்து வந்தனரா? ஆகா! அந்தப் பரத்தையின் பிரிவைப் பற்றிப் பாடும் பாடல்கள் எத்தனை! அப்பிரிவினைச் சரியெனச் சாதிக்க வழிகாணும் சழக்கர்தாம் எத்தனை பேர்! என்றாலும், அச்செயல் ஓர் அநாகரிகச் செயலாகத்தானே அன்றும் கருதப்பட்டு வந்தது? பெருங்கொடை வள்ளல்

பேகன், கொண்ட கண்ணகியைவிட்டு, பரத்தையை நாடிக் கெட்ட காலத்து, அறிவறிந்த புலவர்களெல்லாம் அவன் செயலைக் கண்டித்துத் திருத்தவன்றே முற்பட்டிருக்கின்றனர்! அதுமட்டுமன்றி, எத்தனைப் புலவர்கள் பரத்தையிற் பிரிவைப் பழித்தும் இழித்தும் பேசியிருக்கின்றார்கள்! எவ்வாறு அந்தப் பெருநாளிலும் பெண் இனத்தில் இப்படி ஒரு பெரும் பிரிவை உண்டாக்கினார்களோ தெரியவில்லையே! எவ்வளவு உரிமையை வாரி வழங்கினாலும், அந்த ஆடவர் தம் காமக் களஞ்சியங்களாக ஒரு சிலரை ஒதுக்கி வைத்திருந்தார்கள் போலும்! அவருள்ளேதான் எத்தனை பிரிவு! சேரிப்பரத்தையாம்—காதற் கிழத்தியாம்—இன்னும் என்னென்னவோ! இது ஒன்று மட்டும் இல்லாதிருந்தால், அந்தச் சங்க காலத்தை மகளிரின் பொற்காலம் என்றல்லவோ எழுதத் தோன்றியிருக்கும்!

எப்படியோ பல நன்மைகளுக்கிடையில் இந்த ஒரு தீமையும் அன்றே அருமைத் தமிழ் நாட்டில் புகுந்து விட்டது. என்றாலும், அன்றைய பெண்மை நிலை உலகுக்கு எடுத்துக்காட்டாய் அமையும் உயர்ந்த நிலையிலேதானே அமைந்துள்ளது? பரத்தையர் ஒழுக்கங்கூட அக்காலத்தார் சிலர் ஐயுறுவதுபோன்று—ஒரு வேளை நாடக வழக்காகத்தான் இருக்குமோ! நாடக வழக்கு உலகியல் வழக்கென வழக்கை இரண்டாக்கிக் கண்ட அந்த நெறியில், இந்தப் பரத்தையர் ஒழுக்கம் நாடக வழக்கின்பாற் பட்ட ஒன்றாகத்தான் இருந்திருக்க வேண்டும். இன்றேல், எல்லாவகையினும் ஏற்றமுற்றிருந்த தமிழகம்—அத் தமிழகத்தின் தலையாய பெண்மையறம்—இப்படி உலக வழக்கில் குறையுற்றதாக மாற முடியுமோ? முடியாது! முடியாது!

*அதோ அந்தக் காட்சி மேடை மெதுவாக மறைந்து கொண்டே செல்கின்றது! அஃது என்ன வெட்டவெளி? அஃது ஒன்றும் அவ்வளவு பெரிய வெட்டவெளியாகக் காணவில்லையே! என்றாலும், அதுவும் ஓர் இடைவெளி தானே! இதற்குள்ளாகவா காட்சிகள் மறைந்து விட்டன! அதோ! ஒரு புதுக்காட்சி புலப்படுகின்றதே! தூரத்தே ஏதோ மங்கலாய்த் தெரிகின்றதே! ஆம், வரவர நன்கு புலப்படுகின்றது! சற்று அமைதியோடு காண்போம்!*

# பெண்மையும் துறவும்

*யார் அவள் ?* **மாதவி***யா ? அவள் அருகில் அழகே திரண்டு உருவாகி உள்ள அந்த ஆரணங்கு யார் ? ஆம்.* **மணிமேகலை***தான். என்ன ! காவிரிப்பூம்பட்டினத்தே அழகின் சிகரமாய்த் திகழ்ந்த அந்தத் தெய்வத் திரு மாதவியா இப்படிப் பொலிவிழந்து காண்கின்ருள்? அவள் மகள் இளமை ததும்பும் எழில் பெற்றிருந்தும் ஏன் இப்படித் துறவுக்கோலத்தில் காட்சி அளிக்கின்ருள்? ஆகா ! கடற்கரைப்பாட்டு ஒன்று காரணமாக, தன்னை விட்டுப் பிரிந்த கோவலனை எண்ணி எண்ணி, மாதவி இவ்வாறு துறவுக் கோலத்தை மேற்கொண்டாள் போலும் ! அவள் போனல் போகட்டுமே ! இந்த இளஞ் செல்வி—அழகுத் தெய்வம்—மணிமேகலை—இவளை ஏன் இந்தத் துறவை மேற்கொள்ள வற்புறுத்த வேண்டும் ? வண்டே அனையர் ஆடவர் என்பதைக் கண்ட காரணம் அல்லவா அத்தகைய அழகுச் செல்வியையும் துறவை மேற்கொள்ளச் செய்தது ? ஆனல், மற்ருென்றும் கண் முன் காட்சி அளிக்கின்றதே ! அதோ ஒரு புத்த பிட்சு ! அதோ அறவண அடிகள் ! தமிழ் நாட்டில் புத்த மதம்*

தலை தூக்கி நின்ற காலமல்லவா அது ? ஆம். அச்சமயத் துத் துறவு மனப்பான்மை மகளிரை இவ்வாறு வாட வைத்தது போலும் ! உலகம் நலம் பெற வேண்டுமென விழைந்த போதி நீழல் பொருந்திய புத்த தேவர் இப்படி மகளிரை வதைக்க வேண்டுமென்று சொன்னார் ? இல்லை. 'ஆசை அறுமின்கள்,' என்று வலியுறுத்தி, தான் வாழப் பாடுபடும் கொடுமையைப் போக்கி, ' நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை' என்ற இந்த அறநெறியல்லவா மக்கள் வாழ்வில் மலர வேண்டுமென்று அவர் பாடு பட்டார் ? ஆனால், அவர் பெயரைப் போற்றி அவரது மெய்ச்சமய நெறி நின்று வாழ்கின்றவர்கள் ஏன் அனைத் தையும் பொய் என்று கருதவேண்டும் ? வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, மற்றவரை வாடவைக்காது வாழும் பெருநெறியை அல்லவா அவர் வேண்டினார் ? பெண் டிரைப் பேயென வெறுக்கும் ஒரு கொள்கை பின் ஏன் அவர் பெயரால் நாட்டில் புகுந்துகொண்டது ! ஆகா ! இக் கொள்கைகளைப் புகுத்தியவர்கள் ஆண்கள் மட்டுமா ! இல்லையே. அசோகனுடைய பெண் மக்களே தமிழ் நாட்டுக்கும் ஈழ நாட்டுக்கும் சென்று புத்த சமயத்தைப் பரப்பிய செய்கை என் கண்முன் அகலாது காட்சியளிக்கின்றதே ! தமிழ் நாட்டில் அவர்தம் வரவின் அடிச்சுவடு அறிய முடியாது போயினும், இருபதாம் நூற்றாண்டிலும் அந்த அசோகன் பெண்கள் ஈழ நாட்டில் காணுமிடந்தோறும் கற்சிலையாய்க் காட்சி அளிக் கின்றனரே ! அத்தகைய பெண்களா இந்த இழிவு செய்யும் நிலையினை நாட்டில் வளர்த்தனர் ? இதோ மணி மேகலைதான் என்ன செய்கின்றாள் ! நரைமூதாட்டி ஒருத்தியைக் காட்டி, அவள் ஏதேதோ பேசுகின்றாளே ! என்ன ! அவளது கிழப்பருவம் அவ்வாறு அழகிழந்தால் தான் என்ன ? இளமை ததும்பிய அவள் முகம் எங்கே போவது ? பெண்டிரும் கள்ளும் ஒன்றாக இணைக்கப்படும்

காலமாகிவிட்டதே இது! இருமனப் பெண்டிர் நிலை எல்லாப் பெண்டிருக்கும் பொருந்திய தாகாதே! அரிய நிலையில் வையம் வாழ வேண்டி அரச போகத்தைத் துறந்து, அல்லல் வாழ்வை நீக்க அரும்பாடுபட்ட அண்ணல் புத்ததேவர் இப்படிப் படைப்பின் ஒரு பாக மாக அமைந்த பெண்மை நலத்தைப் பேணவேண்டா என்று எங்குக் கூறினர்? அவர் வாய்மொழிப்படி வையம் வாழ வழி காணுவதை விடுத்து இப்படிப் பெண் களை இழிவுபடுத்தும் இந்த நெறியை வளர்க்க யார்தான் வழி காட்டினர்களோ! 'பெண்டிரும் உண்டியும் இன் றெனில் மக்கட்கு உண்டோ ஞாலத்து உறு பொருள்?' என்று யார் வாயிலாகவோ—இல்லை - ஒரு காமக்களி யாட்டத் தலைவன் வாயிலாகக் கூறி, அதை மறுக்கும் வழியிலேதான் என்னென்ன கொடுமைகள் கூறுகின் றனர்! ஏன் இச்செயல்? உரிமை வாழ்வில் ஆண்களொடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்ந்த இந்த நாட்டிலே, இப்படிப் பெண்கள் காமக்களஞ்சியங் களாகப் பழித்துரைக்கப் படுவானேன்? பரத்தையர் குலத்தில் பிறந்த மாதவி கோவலனல் சிறுமைப் பட்டால்தான் என்ன? ஏன் அவள் தன் மகள் மணி மேகலையை மனை வாழ்வில் புகுத்தக் கூடாது? அம்மம்ம! அந்தத் தொல்காப்பியர் காலத்தில் தொடங்கிய அந்தப் பரத்தைமை விளையாட்டன்றோ இன்று இப்படி அழகரசி யாகிய மணிமேகலையைத் துறவு வாழ்வில் செலுத்தியது?

ஆம்! அதே நிலையில் இதோ இல்வாழ்வின் ஏற்ற மெலாம் உணர்ந்த செல்வியார் எதிரே தெரிகின்றனரே! கற்புக்கணிகலமான பொற்புடைச் செல்வியாகிய அம் மங்கை நல்லார் யார்? **ஆதிரை**யாரல்லரா! எவ்வளவு தான் துறவு நெறியை மேற்கொண்ட போதிலும், மணி மேகலா தெய்வமே அமுதசுரபியைத் தேடித் தந்த போதிலும், அதில் அக்கற்புடைச் செல்வியார் ஆதிரை

யாரிட்ட சோறு அல்லவா பல்கிப் பெருகிப் பாரகமடங்கலும் பசிப்பிணி அறுவதற்கு உதவி செய்தது? மணிமேகலை போன்ற துறவு நிலையில் வாழும் பெண் வாழ்வைக் காட்டிலும் வாழ்வாங்கு வாழ்ந்து வளம் பெருக்கும் இல்லற வாழ்வு ஏற்றமுடைய தென்பதை இச்செயல் காட்ட வில்லையா? எல்லாம் அறிந்திருந்தும் ஏனோ தமிழ் நாட்டில் இப்படிப் பொன்னையும், மண்ணையும், பெண்ணையும் ஒரு சேர வெறுக்கும் ஒரு துறவு குடியேற்றப் பட்டது! பௌத்தமும் சமணமும் உலகை வாழ்விக்க வந்த சமய நெறிகளாயினும், அவற்றைப் பின்பற்ற வந்த ஒரு சிலர் இவ்வாருய துறவு நெறிகளை யெல்லாம் புகுத்தி ஏன் இடர் விளைத்தார்களோ தெரிய வில்லையே! உண்மையில் அவர்தம் சமயத் தலைவர் காட்டிய பெரு நெறியில் வாழ்ந்திருப்பாராயின், இன்று நாட்டில் அவைகள் அருகித்தோன்றும் நிலை உண்டாகியிருக்குமா?

அதோ சீவகன் தோன்றுகின்ருனே! அவன் சமண சமயத்தவனுயினும், பெண்களை எவ்வளவு சிறப்பாகப் போற்றுகின்ருன்! தன் வாழ்வின் வைப்பாகவன்றே தன் மனைவியரை அவன் மதிக்கின்ருன்! அரச போகத்தைக் காட்டிலும் அழியாப் பேரின்ப வாழ்வாகவன்றே அவன் பெண் நலம் பொற்றுகின்ருன்! ஆகா! காதல் இன்பம் அவனிடம் கனிந்து நிற்கின்றதே! அவன் கதை பாடிய அந்தத் திருத்தக்கதேவர் சமண சமயத்தவராயிருந்தும்—அச் சமயத் துறவியராயிருந்தும்—எப்படிப் பெண்களைப் போற்றுகின்றனர்! அந்தச் சமண சமயத்திலேதான் இல்லற வாழ்வு வேண்டாவென்று யார் சொன்ஞர்கள்? இந்தத் துறவிகள் இவ்வாறு பெண் துறவு என்று ஒன்றைக் கற்பித்துக்கொண்டு, வீட்டையும் நாட்டையும் விளக்க வரும் பெண் குலத்தை ஏனோ பழிக்கின்ருர்கள்! அம்மம்ம! அந்த நாலடியாரில், தூய்தன்மை என்று ஒரு அதிகாரத்திக்குப் பெயரிட்டுக்கொண்டு பெண்

களைப் பழிக்க அந்தத் துறவிகள் எவ்வாறு முடிவு செய்தார்களோ! பெண்கள் அழகு அழியக் கூடியது தான். ஆனால், அதைப் பாடும் அந்த ஆடவர் அழகு அப்படியே நிலைபெற்றிருக்குமோ? உலக வளர்ச்சிக்கே உறுதுணையாகிய மக்கட்பேறு என்னும் பெருஞ்செல் வத்தை வாரி வழங்கும் அந்த வள்ளன்மை பெண் களுக்கே உரிய ஒரு பெருநிலையாதலின், அவர்தம் அழகு கெடுவது இயற்கைதான். அதைத் தியாகத்தின் சின்னமாக உணராது, அதைக்கொண்டு அவர்களைப் பேய் என்றும் பிறவென்றும் பழித்துரைத்து, அதற்குத் தூய்தன்மை என்றும் பெயரிட்டுப் பேசும் துறவிகள், வள்ளுவர் வாழ்ந்த இதே நாட்டில் வாழ்ந்துதானே இருக்கிறார்கள்? மனை மாட்சிச் சிறப்பினையும், நன்கல னும் நன்மக்கட் பேற்றினையும் பேசப் பேசப் பெருமை கொள்ளும் அந்தப் பெருநெறி வகுத்த வள்ளுவர் எங்கே! தங்களுக்கு உரிய பேதைமை உணர்வினை மாதர் மேலேற்றி அவர்களைப் பேயெனப் பேசித் தாய்மை யைப் பழிக்கும் இப் போலித் துறவிகள் எங்கே!

**'தக்கோலம் தின்று தலைநிறையப் பூச்சூடிப்**
**பொய்க்கோலஞ் செய்ய ஒழியுமே'**

என்றும்,

**'தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று**
**கண்ணில்புன் மர்க்கள் கவற்ற விடுவேனோ**
**உண்ணீர் களைந்தக்கா னுங்குசூன் றிட்டன்ன**
**கண்ணீர்மை கண்டொழிகு வேன்?**

என்றும்,

**'முல்லை முகைமுறுவல் முத்தென் றிவைபிதற்றும்**
**கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ**
**எல்லாரும் காணப் புறக்காட் டுதிர்ந்துக்க**
**பல்லென்பு கண்டொழுகு வேன்?**

என்றும் இந்த நாக்கில் நரம்பற்ற துறவிகள் பேசுவது பேச்சா? அல்லது பேயாடலா? அந்தச் சங்க காலப் புலவர்தம் வாழ்நாளில் இவர்கள் இருந்திருப்பார்களாயின், இவர்கள் ஒன்று நாடு கடத்தப் பட்டிருப்பார்கள்; அல்லது வெஞ்சிறையில் இட்டு, வாட்டப் பட்டியிப்பார்கள். பூச்சூடலும், வேலை ஒத்த கண்ணைப் போற்றலும், முல்லையையும் பின்னடையச் செய்யும் முறுவலைப் பாடலும் எவ்வளவு சிறப்பு என அன்றைப் புலவர்கள் எண்ணி வாழ்ந்துள்ளார்கள் என்பதை அகமும் பிறவும் காட்டுகின்றனவே! ஆகா! அந்த வள்ளுவர்தாம் பல்லையும் கண்ணையும் எத்தனை கோணங்களிலிருந்து எண்ணி எண்ணிப் பார்க்கின்றூர்! அத்தகைய நல் வாழ்வு வாழ்ந்த நாவலர் பிறந்த நாட்டிலே தான் இந்தப் புல்லுருவிகளும் பிறந்துள்ளார்கள். வள்ளுவரைத் தம் சமயத்திற்கு இழுக்கும் இன்றைய பெருந் தலைவர்கள், இத்தகைய புல்லுருவிகளை அவர்தம் சமயத்திலிருந்து ஒதுக்கவேண்டும்; அன்றேல், அவர் சமயம் என்றென்றும் மாசு படிந்தே மாழ்கவேண்டும். இவர்களைப் போற்றுபவர், ஒன்று இவர்களைப் போலக் காடு சென்று கண் மூடி வாழ்க்கை வாழ வேண்டும்; அல்லது, இவர்களால் தம் சமயத்துக்கு உண்டான மாசுகளைக் கழுவ முற்படல் வேண்டும். செய்வார்களா?

**'காமம் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.'**

என்ற தொல்காப்பியச் சூத்திரம் எவ்வளவு அழகாய் அமைந்துள்ளது! துறவறம் என்ற ஒன்றும் இல்லறத்தின் வழியே அமைவது என்பதை இஃது எடுத்துக் காட்டுகின்றது. இல்வாழ்வில் காதல் மனையாளும் காதலனும் மாறின்றி ஒருமை உணர்வின் வயப்பட்டு வாழ்ந்து,

மற்றவரையும் வாழவைத்து, மனைக்கணிகலனும் மக்களைப் பெற்று, சுற்றமும் தழுவி, உற்றவர் ஓம்பி, இறுதியில் வேட்கை நீங்கிய வழிக் கொண்ட தலைவியுடனே தனித்துச் சென்று பிற பற்றுக்கள் அற முயல்வதற்றே வீடு பேற்றிற்கு வழியாகிய துறவற நெறியென்று கூறுகின்றார் தொல்காப்பியர்? இதை விடுத்து, குழவியிடத்தே, பின் நரைவரும் என்று எண்ணித் துறவு நிலையை மேற்கொண்டு, பெண் இன்பமும் அவர் வழிப் பெறும் பயனும் இன்னவென அறியா முன்னமே அவர்களைப் பேயென்றும் பிறவென்றும் பேசிப் பழித்து வாழும் ஒரு நெறிபற்றி நிற்கின்றார் இந்த நாலடியார் பாடிய துறவிகளுட் சிலர். எப்படி இரண்டுக்கும் இடையில் கழிந்த காலத்தில் இந்த வேறுபாடு தமிழ் நாட்டில் புகுந்துவிட்டதோ, தெரியவில்லையே!

**சீவகன்** தான் சமணசமயத்தைச் சார்ந்தவனாய் இருந்தும், தொல்காப்பியர் காட்டிய அந்தத் தூய வழியையே தன் வாழ்வினது வழியாகக் கொண்டிருக்கின்றான். மனைவியரொடு மகிழ்ந்து, அவர் பிரிவைப் பெருந்துயராகக் கொண்டு, பிரியாது பற்றி வாழ்ந்து, நன்மக்கட்பேறுற்று, பின் காமம் சான்ற கடைக்கோட் காலை, தான் தன் மனைவியரோடு தனியிடம் சென்று துறவை மேற்கொண்டதாகத் துறவியராகிய **திருத்தக்க தேவர்** எவ்வாறு அழகுபட எழுதியுள்ளார். அதே சமயத்தே எப்படிப் பெண்ணைப் பேயெனக் கூறும் பெருங்கூட்டம் உருவாயிற்றோ தெரியவில்லையே! எப்படி ஆராய்ந்தாலும், இந்தப் பௌத்த சமணத் துறவியரே நாட்டில் எங்களை—எம் பெண் இனத்தை—இழிவு படுத்தப் புகுந்தனர் என்பது வெள்ளிடை மலையென விளங்குகின்றது. இவர்கள் அன்று மூட்டிய தீ, இத்தமிழ் நாட்டை, இவர்கள் பெயரால் அல்லாவிட்டாலும், வேறு

எப்படியோ இன்றும் பற்றி எரித்துகொண்டு தானே வருகின்றது!

அந்தச்சமயங்களிலும் இல்வாழ்க்கையை மேற்கொள்ளும் மக்கள் இருக்கின்றார்களே! அவர்தம் வாழ்வில் அன்பு மலர் மலர்ந்துதானே இருக்கின்றது? அவர் தம் சமயத்தலைவர்களும் எங்கும் பெண்மையைப் பழித்ததாகக் காணவில்லையே! புத்தர் காடு நடந்த காலத்து, தம் கண்ணனைய மனைவியின் முகத்தைக்கண்டு கண்டு கசிந்து கசிந்து உருகி நின்ற காட்சி இன்றும் நம் மனக்கண்முன் அகலாக் காட்சியாகவன்றோ விளங்குகின்றது? அவர் தம்மனைவியைப் பேயெனஎண்ணிப் பிரியவில்லையே! அஞ்சி அகலவில்லையே! அன்பு தோய்ந்த அருட் பார்வையில் அவளைக் குளிப்பாட்டி, அவளை எப்படிப் பிரிவதென்று எண்ணி ஏங்கியல்லவா பிரிகின்றார்? அவர் வளர்த்த சமயத்தே இன்று பெண்ணை வெறுக்கும் பெருமாசு இடம் பெற்றுளதே! சமணத்திலும் அவ்வாறுதானே காண்கிறோம்! பாவம்! இந்தத் துறவிகள்மேல் தவறில்லை. இவர்களுக்கு என்ன தெரியும் காதல் வாழ்வைப் பற்றி? ஒன்றை வெறுப்பதன் முன் அதன் இயல்பறிந்து, நன்மை தீமைகளை நாடியுணர்ந்து, பின்பு நல்லதாயின்கொண்டு, அல்லதாயின் தள்ளி ஒதுக்கி வாழக் கற்பதுதான் அறிவுடைமை. அவ்வாறு அல்லாது குழவியிடத்தே துறவு நிலவவேண்டும் என்று பேசி, கற்கண்டின் சுவையையும் விஞ்சும் காதல் வாழ்வையும், அவ்வாழ்வின் விளக்கங்களாகிய பெண்களையும் ஒதுக்குவார்களாயின் அவர்கள்பால் இரக்கங் கொள்வதல்லது வேறு என்ன செய்ய வல்லோம்!

என்றாலும் எங்கள்நிலை சங்ககாலத்தில் வாழ்ந்த பெண்களின் நிலையைக் காட்டிலும் சிறிது தாழ்ந்து தானே காணப்படுகின்றது! பெண்மையும் தாய்மையும் அன்று அறிவறிந்த புலவர்களால் போற்றப்பட்ட பெரு

நெறியினையும், பின்னர் இரண்டொரு நூற்றாண்டுகளுக்குள்ளே அவை ஏசப்பட்ட இழி நிலையையும் எண்ணுதிருக்க முடியவில்லையே! என்செய்வது!

இதில் மற்றென்றை நினைத்தால்தான் மாளாத்துயர் உண்டாகின்றது: காதல் வாழ்வை வெறுத்த ஆடவர் தாம் - துறவியர்தாம் - பெண்களை வெறுத்தனர் என்பதில்லையே! **மணிமேகலை** போன்ற செம்மனச் செல்வியர் கூடத்தானே அத்துறவியர் கூட்டத்தில் கூடியுள்ளனர்! மாதவி தான் துறவுகொண்ட அந்தக் காரணத்தினால் மற்றவரையும் பழிக்க வழி காணும் முறையில் மணிமேகலையைத் துறவுக்கோலத்துக்கு ஏன் இழுத்துச்செல்ல வேண்டும்? அவளது இளமையுள்ளம் காதல் வாழ்வினை நினைந்து நினைந்து எவ்வளவு கரைந்திருக்கும்! **சாத்தனார்** அவள் உள்ளத்தை எவ்வளவு கட்டுப்பாட்டுடன் மறைக்க நினைத்த போதிலும், இரண்டோரிடங்களில் உள்ளம் தெளிவாகின்றதே! மணிமேகலையே தன் உள்ளத்தைத் திறந்து காட்டுமுகத்தான் தன் மனம் அந்த அரசகுமாரன் வழியேசென்றதாக அறிவதை அவரே கூறுகின்றாரே! அவன் இறந்ததும் அவள் கொள்ளும் வருத்தத்தை வேறொரு 'பாவை' வந்தல்லவோ மாற்ற வேண்டியுள்ளது! சீ! அவளது உள்ளத்தூய்மை அவளது காதல் வாழ்வில் சென்றிருந்தால் எவ்வளவு செம்மைப்பட்டிருக்கும்! அவள் வாழ்வின்வழி உண்மையில் வெறுப்புக் கொண்டோ, அன்றிக் காமஞ்சான்ற கடைக்கோள் நிலையிலோ, துறவை மேற்கொண்டிருப்பின், அத்துறவு எவ்வளவு ஏற்றம் பெற்றிருக்கும்!

சாத்தனார் காலம் தமிழ்நாட்டுக்கு ஒரு மாறுபடு தோணக் காலம் போலும்! அறநெறி பேணிய அந்தணாளராகிய போதி நீழற் புண்ணியர் காட்டிய சமய நெறி பரப்ப வந்த சாத்தனார், பெண் இனத்தைப் பழித்தது ஒரு புறம் இருந்தால், பிற சமயத்தவரைப் பழிக்கும்

முறை அதனினும் மேம்பட்டுத் தெரிகின்றது. அதுவரை தமிழ் நாட்டில் காண முடியாத ஒரு சமயவெறி அன்று நாட்டில் புகுத்தப்படுகிறது. எம்மதமும் சம்மதம் என்ற கொள்கைவழி வாழ்ந்த தமிழ் நாட்டு மக்கள் வாழ்வுப் பாதையில் சமய வேறுபாட்டுணர்ச்சியாகிய முள்ளின் விதையைச் சாத்தனார் அறிந்தோ அறியாமலோ தூவி விட்டாரே! அவர் வித்திய விதையினில் முளைத்த பெருமுட்கள் இன்றளவும் தமிழ் நாட்டு மக்கள் வாழ்வில் அல்லலையும், அவதியையும் வளர்த்துக்கொண்டுதானே வருகின்றன! சமயக்கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறி, 'அனைவரும் ஒன்று; எல்லாச் சமயமும் ஒன்றே,' என்று காட்டி **வள்ளுவர்** பிறந்த நாட்டிலேதான், சமயக் கணக்கர்தம் திறம் கேட்டு, அனைத்தும் தீயன என்று வெறுத்து, புத்தசமயத்தைப் போற்றி வளர்த்த கதை கூறப்படுகின்றது. இப்படிப் பெண்ணடிமையும், சமய வேற்றுமையும் அந்தக் காலத்தில் ஏனோ அப்படிப் போற்றி வளர்க்கப்பட்டன! சாதாரண மக்கள் வழி அது வளர்ந்தது என்றாலும் கவலையில்லை; அறிவறிந்த பெரும் புலவர்எனப் பேசும் சாத்தனார் வழியே இக்கொடுமைகள் வேற்றுமையறியாத் தமிழ் மக்கள் வாழ்வில் கால் கொண்டன என்றால், இதை என்னென்று சொல்வது! காலத்தின் கோளாறு? அப்படியும் நினைக்கக்கூடவில்லை. அவர் காலத்தவரான **இளங்கோவடிகள்** சமணராயினும், பிற சமய நெறிகளை எப்படிப் போற்றி புரக்கின்றார்! ஆகவே, வேறு கொடுமையாகத்தான் இருக்க முடியும். எப்படியோ அன்று தூவிய இருபெருங் கொடுமைகள் நாட்டில் இன்னும் நலிவுறுத்துகின்றன! இன்றுதானே 'பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு மண்ணடிமை தீர்ந்து வருதல் முயல் கொம்பே.' என்று பேசக் கூடிய அளவில் மக்கள் முன் வந்துள்ளார்கள்! அவர்தம்

*சொல் செயலில் வந்து என்றுதான் பெண் சிறக்க வாழ்வாளோ!*

*தமிழ் நாட்டுப் பெண்கள் வரலாற்றில் பொற்காலமெனக் குறிக்கப்படும் அந்தச் சங்க காலம், இனித் திரும்பி வாராதோ! தமிழ் நாடு மட்டுமென்ன! அன்று நாகரிகம் பெற்ற உலக நாடுகள் அத்தனையிலும் பெண்கள் ஏற்றமுற்றுதானே இருந்தார்கள்!* **கிளியோபத்திரை** *என்ற மேலைநாட்டுப் பெருஞ்செல்வியின் பேரழகையும், பெருஞ்செல்வாக்கையும், இன்றும் எண்ணாத அறிஞர் உண்டோ? அதே போன்று, பிற நாடுகளிலும் ஆண்களோடு பெண்கள் அறிவும் திறனும் ஒருங்கே அமையப் பெற்று வையக வாழ்வு தன்னில் எந்த வகையிலும் வேறுபாடு இல்லாமல்தானே வாழ்ந்தார்கள்? அல்லாவிட்டால் அன்றைக்கே ஒரு புரட்சிப் புலவன் தோன்றி, 'பெண்ணடிமை தீரவேண்டும்,' என்று விண் முட்டப் பாடியாவது இருக்க மாட்டானா?*

*அந்த நாளில் மைந்தரும் மகளிரும் கலந்து உறைந்த காதல் வாழ்வுதான் எவ்வளவு ஏற்றமுடையதாய் அமைந்தது! வையைப் பெரும் புனலினும், காவிரிப் பெருக்கிலும் பெண்டிர் தம் காதற் கணவரொடு கலந்தாடும் காட்சியைப் பாடாத புலவரும் உண்டோ?*

> **தாம்வேண்டும் காதற் கணவ ரெதிர்ப்படப்**
> **பூமேம்பா டுற்ற புனைசுரும்பிற் சேம**
> **மடநடைப் பாட்டியர்த் தப்பித் தடையிறந்து**
> **தாம்வேண்டும் பட்டினம் எய்திக் கரைசேரும்**
> **ஏமுறு நாவாய் வரவெதிர் கொள்வார்போல்**
> **யாம்வேண்டும் வையைப் புனல்எதிர் கொள்கூடல்'**

*என்று* **கரும்பிள்ளைப் பூதனார்** *பாடும் காலத்துப் பெண்கள் எவ்வளவு பெருமிதம் உற்றிருந்திருப்பார்கள்!*

கானல் வரியும் பிற பாடல்களும் அந்தப் பெண்களை எவ்வளவு ஏற்றமுறச் செய்திருதிக்கும் ! ஆனால்............

ஆனால், ஒரு நூற்றாண்டுக்குள் ஏன் இப்படித் தமிழ் நாடு முழுவதும் ஒரு பிக்குணிக் கோலம் காட்சி அளிக்கின்றது! காமத் தேவன் வறிதே வாளியைப் பூமிமேல் எறிந்து ஏக்கமுற்று வாடும்படி, அழகிய மகளிர் கணவரொடு காதல் வாழ்வைத் துய்ப்பதை விடுத்து, இப்படிப் பிக்குணிக்கோலம் கொண்டு திரிகின்றனரே! அவர்தம் துறவு நெறி ஒருவகையில் போற்றப்பட வேண்டுவதாயினும், ஆராயின், அதனால் விளையும் நன்மையினும், தீமையன்றோ அதிகமாய் இருந்திருக்கும்? அவர்கள் செல்லுமிடமெல்லாம் தம் சிந்தையைப் பறிகொடுக்கும் காளையர் இல்லாமலா ஒழிவர்? என்னதான் பிக்குணிக் கோலம் கொண்டாலும், இயற்கை அழகையும் மறைக்க ஒண்ணுமோ! ஆம்! அவர்கள் தமக்கே உரிய நல்லழகை மறைத்து, பிக்குணிக் கோலம் கொண்டு சுற்றி வரும் அந்த நாட்களில் தமிழ்நாட்டு வரலாறு ஏன் இப்படி இருட்டறையில் கொண்டு தள்ளப்படுகின்றது ? எங்குப் பார்த்தாலும் நாட்டில் பௌத்த விகாரங்களும், அவற்றில் பணியாற்றும் பிட்சுக்களும், பிட்சுணிகளுமே நம் கண் முன் நிற்கின்றனரே ! அது தமிழ்நாட்டு இருட்டடைப்புக் காலம். ஆம்! அதைக் களப்பிரர் ஆண்ட காலமென்றல்லவா வரலாற்று ஆசிரியர்கள் தீட்டிச் சென்றிருக்கிறார்கள். வடக்கே வேங்கடம் தொடங்கித் தெற்கே குமரி வரையில் களப்பிரர் ஆண்ட இந்த நாளில் தமிழ்நாட்டு வேந்தர்கள் வலி குன்றியிருந்தார்கள் போலும்! என்றாலும். 'புத்த மதம் மட்டும் தலைதூக்கி வாழ்ந்து வந்துள்ளதே! ஏன் அத்துடன் அதோ சமணமும் போட்டியிட்டு வளர்கின்றதே ! புத்த சமண சமயங்கள் சங்க காலம் தொடங்கித் தமிழ்நாட்டில் பரவித் தமிழ் மொழியை வளர்த்த போதிலும், இந்தத்

துறவு நெறியை வற்புறுத்திய காரணத்தால் அந்த நூற்றுண்டுகளில் அவை பெண்கள் உயர்வை எத்தனையோ வகையில் தாழ்வுறச் செய்தன என்பது வெள்ளிடை மலையாகத்தானே காண்கின்றது. இந்த நிலையில் களப்பிரர் ஆண்டு வந்த இடைக்காலத்தில் என் தமிழ் நாட்டுப் பெண்கள் எப்படி வாழ்ந்தார்கள்? அவர்தம் வாழ்வும் வளமும் எத்தகையன? இவற்றை அறிய வாய்ப்பில்லையே! என்ன! அனைவரும் பிக்குணிகளாக மாறிவிட்டார்களா? இல்லை. அதோ! நம் கண்முன் காதல் வாழ்வில் திளைக்கும் ஒரு குடும்பம் காட்சி அளிக்கின்றதே! யார் அவர்கள்? ஆம், நமக்குத் தெரிந்தவர்களே.

ஆகா! காரைக்காலன்றோ அது? அதில் வாழ்ந்த மாதரசியார் புனிதவதியாரல்லரா அச் செல்வியார்! இந்த இருபெருஞ் சமயத் தலைவர்களுக்கும் இடையிலே சைவமும் வாழ்ந்து வந்திருக்கின்றதே! அந்தச் சைவக் குடும்பத்தின் செல்வியரல்லவா அவர்? அவர் தம் காதல் வாழ்வு எவ்வளவு இனிய முறையில் இயங்குகின்றது. கொண்ட கணவன் கருத்துக்கு மாறுபடாத பெருநிலையில் அவர்தம் அற வாழ்வு தொடங்குகின்றதே! அவர் கற்பின் திறம் அளக்க ஒண்ணுத ஒன்றன்றே! கணவன் மொழி தவருத காரிகையராய் வாழ்ந்த அவரிடம் எவ்வளவு தெய்வத் தன்மை விளங்குகின்றது!

**ஆங்கவன்றன் இல்வாழ்க்கை அருந்துணையாய் அமர்கின்ற**
**பூங்குழலா ரவர்தாமும் பொருவிடையார் திருவடிக்கீழ்**
**ஓங்கியஅன் புறுகாதல் ஒழிவின்றி மிகப்பெருகப்**
**பாங்கில்வரு மனை அறத்தின் பண்புவழா மையிற்பயில்வார்'**

என்று பின்னர் வந்த **சேக்கிழார்** அந்த அம்மையாரது திறத்தைக் கூறும்போது அவர்தம் இல்வாழ்வின் ஏற்றம் விளங்குகின்றதன்றோ? மனையறப் பண்பு வழுவாத பெருநெறியன்றோ பெண்கள் வேண்டுவது? மண்ணிற்பிறந்து

மொழி பயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்த இல்வாழ்வில் வாழ்வதன்றோ ஏற்றமுடைத்து ? அவ்வாழ்வு எதிர் பாராத பெரு வகைகளால் மாறுபாடினன்றோ பிற வற்றைப் பற்றி எண்ணுவது? இதைத்தானே அம்மை யார்,

**'பிறந்து மொழிபயின்று பின்னெல்லாம் காதல்**
**சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்**
**மைஞான்ற கண்டத்து வானோர் பெருமானே!**
**எஞ்ஞான்று தீர்ப்ப திடர் ?'**

என்று பாடுகின்றார்? அவர் உலகில் வாழ்ந்ததெல்லாம் கணவனுக்காகவே; தம்காதல் வாழ்வுக்காகவே. அவ் வாழ்விற்குத் தடையேற்பட, அவனுக்கென நின்ற ஊனுடம்பை ஒறுத்து வேறுடம்பு பெற்றார் என அறி கின்றோம். அதனால், அவர் கணவன் அவரை அடிமைப் படுத்தி வைத்திருந்தான் என்று சிலர் கூறுவர். அஃது எவ்வாறு பொருந்தும் ? அம்மையாரின் அருள் நெறியை அறிந்தபின் அவரைத் தெய்வமெனத் தெளிந்தன்றோ விலகிவிட்டான் கணவன்? அதற்கு முன் அவன் அம்மை யாரை அடிமைப் படுகுழியில் தள்ளினதாகக் காண வில்லையே! அம்மையார் உரிமையோடுதான் வாழ்ந்தார் ; அவன் தம்மை ஒதுக்கி மற்றொருத்தியை மணந்த காலத் தும் அவனைச் சார்ந்து வாழ விரும்பிச் சென்றார்; ஆனால், அவன் மாறுபட்ட காரணத்தால், அந்த மனிதப் பிறவியே வேண்டாமென்று வெறுத்தொதுக்கினார். 'மண வாழ்வு இருவர் கருத்தும் ஒருமித்து, எழுமையும் பிரிக்க வியலாத பெருவாழ்வு,' என்ற தமிழர் அறநெறியை அறிந்த அம்மையார், மறுபடியும் மண்ணில் தம் அழகுருக் கொண்டு வாழ விரும்பவில்லை. ஆகவே, அந்தக் காலத்தும் தமிழ்நாட்டுப் பெண்கள் காதல் அறத்தைக் கைவிடா நெறியிலேதான் போற்றி வாழ்ந்தார்கள்.

எனினும், ஒரு சிலருக்கே இங்கு ஐயம் எழுவதை நான் அறிகின்றேன்.

**'தெய்வம் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யு மழை.'**

என்ற வள்ளுவர் கூற்றுக்கும், அதனைப். 'பொய்யில் புலவன் பொருளுரை' என்று குறிப்பிட்ட **சாத்தனார்** சொல்லுக்கும் மாறாக அம்மையார் கணவரை விட்டு வேறு கடவுளைத் தொழுதது தமிழ்நாட்டு மரபுக்குத் தவறுதானே என்று சிலர் இன்று பேசுவது என் காதில் விழாமல் போகவில்லை. ஆனால், அவர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சேக்கிழார் எங்காவது அம்மையார் தம்பொருட்டு இறைவனை வேண்டியிருப்பதாகக் காட்டியிருக்கிறாரா என்பதை எண்ணவேண்டும். கணவன் வழிக் காதல் வாழ்வு வாழும் செல்வியார், அக்கணவனுக்கும், அவன் வழித் தோன்றும் மக்களுக்கும், பிற சுற்றத்தாருக்கும் தீங்கு நேராதிருக்கவே இறைவனை வழிபட்டார் என்பதை அறிகின்றோம். அவர் சுயநலம் கொண்டு கண்ட கடவுளரை வழிபட்டிருப்பாராயின், கணவன் மறுத்ததும் பேயாக வேண்டிப் புலம்ப மாட்டார். தம் நலமும் வாழ்வும் வளமும் பிறவும் ஒறுத்து ஒன்றிய தியாகவாழ்விலே வாழ்ந்த அந்தச் செம்மனச் செல்வியார் வாழ்க்கை, அந்த இருண்ட காலத் தமிழகத்திற்கு ஓர் ஒளி விளக்காய் அமைகின்றது என்று கூறுவதைத் தவிர, என்னால் வேறொன்றும் சொல்ல இயலவில்லையே! பொன்னையும் பெண்ணையும், மண்ணையும் வெறுக்கும் துறவு நிலையை நாட்டில் வளர்த்து வந்த பௌத்த சமணத் துறவியர் நாடெங்கும் நிறைந்து தத்தம் சமயத்தை ஒல்லும் வகையான் வளர்த்த அந்த நாளிலே - அரச ஆதிக்கமும் பிற செல்வாக்குகளும் பெற்று அவை வளர்த்த அந்தப் பெருநாளிலே-

மகளிர்க்கு ஏற்ற முடையது இல்லற வாழ்வே என்றும், அவ்வாழ்வு கிட்டாதாயின் வேறு வகையாக உலகில் வாழ்ந்து உலவுவதைக் காட்டிலும் பேயாகித் திரிந்து மாள்வதே மேல் என்றும் தம் கொள்கையை நிலைநாட்டிய அப்பெருஞ் செல்வியாரைப் போற்றாதிருக்க வியலுமா? 'அவர் கணவன் மற்றொருத்தியை மணந்து போன்று, அவரும் மற்றோர் ஆடவனை ஏன் மணந்திருக்கலாகாது?' என்று எண்ணத்தோன்றும் பிற நாட்டுப் பெண்களுக்கு. ஆனால், அந்த மாறாநிலை ஒன்றுதான் தமிழ்நாட்டுப் பெண்களின் தனிப்பெரும் பண்பாயமைந்தது. அவர்தம் கற்பு நெறிதானே இன்றளவும் தமிழ் நாட்டை வாழ வைக்கிறது? எவ்வளவுதான் இந்த ஆண் சமுதாயம் நன்றி கெட்டுப் பெண்களை விலங்கினும் கீழாக நடத்திய போதிலும், கொண்ட கணவனோடு கலந்து வாழும் அந்த இன்ப வாழ்வில் அவர்கள் வாழத் தயங்க வில்லையே! இதுபற்றியன்றோ பிற்காலத்து வந்த **குலசேகரர்**,

> **'கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும்**
> **கொண்டானை அல்லால் அறியாக் குலமகள்'**

என்று தமிழ் நாட்டுப் பெண்களின் பெருந்தகவைப் பேசுகின்றார்? இதை எண்ணித்தான் போலும் இன்றைய கவிஞருங்கூட,

> **'மங்கைய ராகப் பிறப்பதற் கேநல்ல**
> **மாதவம் செய்திட வேண்டும் அம்மா!**

என்று அழகாகப் பாட்டிசைக்கின்றார்.

அன்று கண்ட அந்தக் கற்பு நெறி இன்றளவும் தமிழ் நாட்டில் தளராது வளர்ந்து தானே வருகின்றது! அதோ! அந்தக் காலமும் கழிந்து கொண்டே போகின்றது. இருள்—இருள்—இருளின் கோடியிலே ஒரு சுடர்

தெரிகின்றதே! ஆம், அது என்ன ஊர்! ஏதோ அறி முகமான ஊராகத்தான் தோற்றுகின்றது. ஆம்! காஞ்சி புரந்தான். அதோ பல பௌத்த மடங்கள், சைன விகாரங்கள், பிட்சுணிகள், பிற சமயத் தலைவர்கள் பல்லவ மன்னவன் பலரும் காணப்படுகின்றார்கள். அவர்தம் முகங்கள் கலவரக் குறிப்பைக் காட்டுகின்றனவே! காரணம் என்ன?

# பெண்மையின் பெரும்புரட்சி

காஞ்சியில் பல்லவர் சிறக்க வீற்றிருந்து அரசுபுரி கின்றனர். **மகேந்திரன்** ஆட்சியன்றோ என் கண்முன் நிற்பது! ஆம். அந்தக் காலத்தில் பௌத்தம் அதிகமாக நாட்டில் இல்லை போலும்! அதை அடுத்துத் தமிழகத்தில் வளர்ந்த அந்தச் சமணம் அதைத் தாழ்த்தியிருக்க வேண்டும். வேறு இரண்டு சமயங்கள்—சைவமும் வைண வமும்—பெயரளவிலே நாட்டில் வாழ்கின்றன? ஆகா! தமிழ் நாடு முழுவதும் அந்தச் சமணர்தம் கொள்கை எவ்வளவு ஆழப் பதிந்துள்ளது! தமிழ் நாட்டுத் தென் கோடியில் பாண்டியனும், வடகோடியில் பல்லவனும் அச்சமயத்தை எவ்வளவு பெருவிருப்போடு வளர்கின் றார்கள்! இடைப்பட்ட நாட்டுச் சோழரும் பிறரும் இவர் களின்கீழ்ச் சிற்றரசர்களாகத்தாமே இருக்கிறார்கள்! எனவே, வேங்கடம் குமரி யிடையிலுள்ள இந்தப் பைந் தமிழ் நாட்டுப் பரப்பில் சமணம் உச்ச நிலையிலிருந்த காலம் இது என்றுதானே சொல்லத் தோன்றுகின்றது! ஆனால்......ஆனால் என்னவா?

இதோ வடக்கிலும் தெற்கிலும் சமயப் புரட்சி உண்டாகின்றதே! யார் இந்தப் புரட்சியின் தொடக்க வீரர்? அதோ இரு பெண்களின் உருவங்கள்தாமே காட்சி அளிக்கின்றன! ஒருவர் மங்கலமிழந்தவர்; மற்றவர் மன்னவன் மனைவியார். ஆகா! அந்த இரண்டு பெண்களாலே தமிழ் நாட்டிலே எத்தகைய பெரும்புரட்சி உண்டாகிவிட்டது! அப்பெண்டிர் இருவர்தம் செயல் நாட்டு நிலையையே மாற்றிவிட்டதே! புத்த பிட்சுணிகளும், சமணத் துறவிகளும் எங்கே? என்ன இப்படி ஒரே அடியாக மாறிவிட்டது நாடு! இந்த மாற்றத்திற்குக் காரணம் என்ன? யார் மாற்றினார்? ஆகா! அவர்தம் பெயரைச் சொல்லத்தான் எனக்கென்ன பெருமிதம்! ஒருவர் வடபகுதியில் புரட்சி செய்தவர்—**திலகவதியார்;** மற்றவர் தென்பகுதியில் பெருமாற்றம் கண்டவர்—**மங்கையர்க்கரசியார்.** இந்த இரு பெரும் பெண்மணிகளே நாட்டில் புரட்சித்தீப் பரவிச் சமயநிலை மாறச்செய்துவிட்டனர். எத்தகைய புரட்சி! அமைதிப் பணியிலே புரட்சி! கொண்ட கணவன் கருத்தழிந்த காலத்து, அவனை அருகிருந்தே மாற்றிய அறப்புரட்சி!

அந்தோ! **தருமசேனர்** தம் சமயம் விட்டுப் புறச் சமயம் சார்ந்ததை எண்ணி எண்ணித் தமக்கையார் திலகவதியார் திருவதிகையில் வாடுகின்றனரே! ஆண்டவன்முன் அழுது அழுது புரட்சிக்கனலை மூட்டுகின்றனரே! எப்படியும் தம் தம்பியார் சைவமாம் சமயம் சாரும் ஊழ்தர வேண்டுமென அதிகை அண்ணலின் அடி பணிந்து பாடிப்பரவும் ஒலி நம் காதில் கேட்கின்றதே! ஆம். அதோ! அவர் அறப்புரட்சி பலன் தரத் தொடங்கி விட்டது! தருமசேனர் நாவரசராய் மாறி விட்டாரே! எத்துணை இசைப்பாடல்கள் அவர் வாயிலிருந்து வருகின்றன! அந்தப் புரட்சியின் உச்ச நிலை மேலோங்கிச் சிறக்கின்றதே! தூண்டிவிட்ட

தலைவர்கள் நாட்டில் உல்லாசப் பவனி வந்து உயர்ந்த செல்வ வாழ்க்கை வாழ, காரணம் அறியாது, கதி கலங்கி வேலை நிறுத்தம் செய்த தொழிலாளரைத் தாக்கும் இன்றைய அரசாங்கங்களைப் போன்று, அன்றைய பல்லவனும் அந்த நாவரசரையன்றோ கொடுமைப்படுத்துகின்றான்! ஆனால், அந்த அம்மையாரின் புரட்சிக்கனல் வளர்கின்றதே ! எல்லாக் கொடுமைகளை யும் பொசுக்குகின்றதே! அரசனுமன்றோ புரட்சிக்காரனாய் மாறிவிடுகிறான்! சமணப் பாழிகளைக் கட்டிச் சமணத் துறவிகளைத் தெய்வமெனப் போற்றிச் சிறப்புச் செய்த அந்த மகேந்திரன் எங்கே? இதோ அதே சமண்பாழிகளை இடித்து, திலகவதியாரது புரட்சித்தீ அணையும் வகையில் ஆலயம் அமைக்கும் இந்தக் குணபரன் எங்கே! இதோ சேக்கிழார் அவன் புரட்சிச் செயலை எவ்வளவு அழகாக விளக்கின்றார் !

**'வீடறியாச் சமணர்மொழி பொய்யென்று மெய்யுணர்ந்த**
**காடவனும் திருவதிகை நகரின்கண் கண்ணுதற்குப்**
**பாடலிபுத் திரத்திலமண் பள்ளியொடு பாழிகளும்**
**கூட இடித் துக்கொணர்ந்து குணபரவீச் சுரமெடுத்தான்.'**

என்பது அவர் மொழி. எத்தனை உயர்வான - மனத் திற்கும் எட்டாத - புரட்சி இது. இதற்கு அடிப்படை கோலியவர் யார்? என் அருமைத் தமிழ் அன்னையார் குலத்துதித்த செல்வியார் திலகவதியார் அல்லரோ!

திலகவதியாரது மனத்திட்பமே தருமசேனரைச் சைவ சமயம் சாரச் செய்தது; அத்துடன் அவருக்கு உண்டான அல்லலையும் நீக்கிற்று. பேரரசன் பல்லவன் மகேந்திரவர்மனையே தன் சமயம் விட்டுச் சைவ சமயம் சார வைத்தது. நாட்டிலே ஒரு பெருஞ்சமயப் புரட் உண்டாக்கி, நான்கைந்து நூற்றாண்டுகளாகக் கால் கொண்டு ஆணை செலுத்திய ஒரு பெருஞ் சமயத்தை

மண்ணெடு மன்னகை மாய்த்தது. ஆ! இந்தச் செயல் சிந்திக்கச் சிந்திக்கப் பெரிதாகித் தெரிகின்றதே!

அதோ பாண்டியநாட்டின் அரசியார் தம் கணவ ளெடு கருத்தொருமித்த காதல் வாழ்வில் திளைத்திருந்த போதிலும், கடவுள் நெறியில் தம் உரிமை உணர்வோடு தானே காட்சியளிக்கின்றனர்! நாடெல்லாம் தன் நாவின் படி நடக்க ஆணையிட்ட அந்த நெடுமாறன், தன் மனைவி யாருக்கு உரிமை வழங்கித்தானே இருக்கிருன்! அன் றைய பெண்பாலார் இந்த அளவில் சமயவுரிமை பெற் றிருந்தார் என்ருல், பிற உரிமைகள் தாமாகவே அவரிடம் பொருந்தியிருந்தன என்று கூறுவதற்கும் ஐயமுண்டோ! அனைத்து உரிமைகளும் பெற்ற அந்த அரசியார் தம் நாட்டில் செய்த புரட்சியை நினைத்தாலும் உள்ளத்தில் உணர்வோடு கலந்த வீரவுணர்ச்சி உருப்பெற்று எழுகின்றதே!

அரசன் ஆணைக்கும் அஞ்சாது, தம் உரிமை வாழ் வினையும் உருக்குலைக்காது, மங்கையர்க்கரசியார் நாட்டில் செய்த பெரும் புரட்சியை வியவாதார் யார்? மன்னனும் மற்றவரும் சமணசமயத்தைச் சார்ந்து ஒழுகிய காலத்தே தாம் மட்டும் தனியாய் இருந்து, ஞானசம்பந்தரை வர வழைத்து, அஞ்சாது உண்மையைப் பல்வேறு செயல் களால் பாரறியக் காட்டி வெற்றி பெற்ற தண்டமிழ்ச் செல்வியார் அல்லரா அவர்! அவர் கொள்கையை நாட்டில் பரப்ப அவருக்கு உரிமை இருந்தது, அரசன் தனது கொள்கையை நாட்டில் பரப்ப உரிமை பெற்றிருந் தான். ஆணையும் அவன்பால் அமைந்திருந்தது. ஆனல், அம்மையாரிடம் புரட்சி உள்ளமும் உணர்ச்சி வேகமுமே ஒன்றியிருந்தன, ஓடி ஆடிப் பணி செய்யக் **குலச்சிறை யார்** என்னும் அமைச்சர் உடனிருந்தார். காழியில் பிறந்த இளைஞராகிய சம்பந்தரை 'வருக'வென்று வர வேற்று, தம் உள்ளத்திடத்தால், அவருக்கு உற்ற இடர்

களை இல்லையாக்கி, தம் கொள்கையை நிலைநாட்டிய பெருமை யாரைச் சார்ந்தது? பல சோதனைகளைக் கண்ட பின் தான் கொண்ட கருத்தை மாற்றிக்கொண்டு, கொற்றவன் **நின்ற சீர் நெடுமாறனாய்** வாழ்ந்த காட்சி வரலாறு ஏற்றுக்கொண்ட ஒன்றுதானே! அரசனும், அவன் வழி அந்நாட்டு மைந்தரும் மகளிரும் ஒரு சேரச் சைவமாம் சமயம் சாரச்செய்த அந்த மங்கையர்க்கரசியாரின் உளத்திட்பமும், செயலாற்றும் செப்பமும் இன்றைய தமிழ் பெண்களிடம் காணமுடியுமா? நாடும் சுற்றமும் நாளும் துயருறுத்துமென அறிந்தும், கொண்ட கருத்தை நேரிய முறையினில் நிறைவேறச் செய்த அந்த அரசியார் செயலாலன்றோ இன்று நாட்டில் சைவம் வாழ்கின்றது? உண்மை யறியாது, திலகவதியாரும் மங்கையர்க்கரசியாரும் வளர்த்த சைவத்தை அப்பரும், சம்பந்தரும் வளர்த்தார்கள் என்று இந்தத் தமிழ் நாடு பேசிக் கொண்டு வருகிறது. ஏன்? அந்த ஏற்றத்தை எங்கள் பெண் இனத்துக்குக் கொடுத்தால் வரும் இழுக்குத் தான் என்னவோ!

பல்லவர் ஆட்சிக் காலத்தே எங்கள் பெண் இனம் பலவகையில் ஏற்றம் பெற்றிருந்தது என்பதை என்றும் எடுத்துக்காட்ட அழியாத கற்சிலைகள்-சிற்பங்கள்—இன்றும் பல ஊர்களில் காட்சி அளித்துக்கொண்டிருக்கின்றன. அடுப்பூதும் பெண்களாய் அமையாமல், ஆடல் அரங்குகளிலும், பாடல் அரங்குகளிலும், கலை உணர்ச்சி வளர்க்கும் காரிகைகளாய் அவர்கள் விளங்கினார்கள் என்பதைக் காண எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகின்றது உளத்துக்கு! பல்லவர்தம் குகைக் கோயில்களிலும், காஞ்சியில் உள்ள கைலாசநாதர் கோயிலிலும், வைகுண்டப் பெருமாள் கோயிலிலும் உள்ள சிற்பங்கள் எதை விளக்குகின்றன? **சித்தன்னவாசல்** கோயிலில் மகேந்திர வர்மன் செதுக்கியுள்ள இரண்டு பெண் உருவங்கள்

பெண்கள் நாட்டியக் கலையைப் போற்றி வளர்த்த பெருமையை விளக்கவில்லையா? அவர்தம் சிற்பங்களிற் காணப்படும் மெய்ப்பாடுகளைக் கண்டு அப்படியே இன்னும் எத்தனையோ ஆராய்ச்சியினரும் பிறரும் மயங்கித் தம்வசம் இழந்து நிற்கின்றனரே! பெண்டிர்தம் ஆடலையும் பாடலையும் கண்டு பாமர மக்கள் மட்டுமின்றி, ஆண்டவனைப் பாடிய அப்பர் சம்பந்தர் போன்ற மெய்யுணர்வாளர்கள்கூடப் போற்றி உள்ளனரே! பெண்ணின் பெருமை எவ்வளவு சிறப்பாகத் தேவாரத்தில் பேசப்படுகின்றது என்பதை அறிந்து ஒவ்வொரு பெண்ணும் மகிழ வேண்டுமென்றோ? ஆம்! இந்தப் பல்லவர் காலப் பெண்மை நலத்தை நல்ல முறையில் ஆய்ந்து இன்று வெளிக்கொணர்ந்த பெருமையும் ஒரு பெண்ணிற்கே உண்டு.

கோயில்களிலே தனிப்பட்ட முறையிலே பெண்கள் இந்தப் பாடலையும் ஆடலையும் பயின்று வந்தார்கள் எனவும் அறிகின்றோம். அவர்களைப் பற்றி எல்லாம் தேவாரம் நமக்கு அறிவிக்கின்றது. பல்லவப் பெருவேந்தர் ஊர்தோறும் கலைக் கழகங்கள் பல அமைத்து, அக்கழகங்களில் பெண்களைப் பெரும் பங்கு கொள்ளச் செய்து, அவர்களை நாட்டில் கலைவல்லுனராகச் செய்த பெருமையை எண்ணின், வியவாதிருக்க முடியுமா! ஏழிசை வல்லபியராகப் பல செல்வியர் இருந்தனர். கடவுளைப் பாடிக் கசிந்துருகும் அடியவர்களெல்லாங்கூட அவர்தம் ஆடலும் பாடலும் பற்றிப் பாடினார்கள் என்றால், அவர்தம் கலைத்திறனை என் சொல்வது!

**'தேனார் மொழியார் திளைத்தங்காடித் திகழும் குடமூக்கு** என்பதும்,

**'வலம்வந்த மடவார்கள் நடமாட**
**முழுவதிர மழைஎன் றஞ்சிச்**
**சிலமந்தி அலமந்து மரமேறி**
**முகில்பார்க்கும் திருவை யாறே.'**

என்பதும் சம்பந்தர் வாக்கு. இவை எவற்றைக் காட்டுகின்றன? அந்த மங்கை நல்லாரது மதிப்பையன்றோ விளக்குகின்றன?

இக்கலையில் மட்டுமன்றிச் சாதாரண வாழ்க்கைமுறையிலுங்கூட அக்காலப் பெண்கள் ஏற்றமுற்றுத்தாமே இருந்தார்கள்? பல்வேறு பந்துகளை அவர்கள் ஆடிப் பாடி விளையாடுங் காட்சி விளக்க முடியாத காட்சியன்றோ? பந்தும், அம்மனையும், பிறவும் அவர்தம் விளையாடல்கள். சுனையாடலும், மலர் கொய்தலும் அவர்கள் விரும்பிய செயல்கள்.

**'கழல்மல்கு பந்தொடு அம்மானை முன்றில்**
**கற்றவர் சிற்றிடைக் கன்னிமார்கள்'** (1-4:2)

**'ஏல மலிகுழலார் இவைபாடி எழுந்தருளாற் சென்று**
**சோலை மலிசுனையிற் குடைந்தாடி** (1-184:2)

என்னும் தேவாரப் பாடலடிகள் அவர்தம் செயல்களை விளக்குவன அல்லவா?

அவர்தம் இன்னொலியை வியந்து போற்றும் சம்பந்தர் கூறுவதைக் கேளுங்கள்:

**'வாரிசைமென் முலைமடவார் மாளிகையின் சூளிகை மேல்**
**மகப்பா ராட்டக்**
**காரிசையும் விசும்பியங்கும் கணக்கேட்டு மகிழ் வெய்தும்**
**கழுமலமே'**

என்று அவர் தாம் பிறந்த ஊரை எவ்வளவு பெருமையோடு பாராட்டுகின்றார்! அந்த ஊர்ப்பெண்கள் தம் மாளிகையில் மகாதேவனைப் பாராட்டும் அந்தப் பண்ணார் பாடல்கள் வான் வழிச் செல்லும் தெய்வ கணங்களையும்

மகிழ்விக்கின்றன என்றால், அதனிலும் வேறு சிறப்பும் உண்டோ!

**'பண்ணமரும் மென்மொழியார் பாலகரைப்**
**பாராட்டும் ஓசை கேட்டு**
**விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தோடும்**
**இழியும் மிழலை யாமே.'**

என்ற பாடலும் இது போன்ற தொன்றுதானே!

ஆம்! சங்க காலத்தே தலை தூக்கி நின்ற அந்தத் தமிழ் நாட்டுப் பெண் இனம், இடைக்காலத்தே-தமிழ் நாட்டு வரலாறே இருட்டில் அடைபட்ட அந்த இடைக்காலத்தே- சற்றுத் தாழ்ந்த நிலையில் இருந்தது என்றுதான் கூறவேண்டும். என்றாலும், பின்பு ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர்தம் கலைகளும் வாழ்வும், வளமும் பிறவும் நலம் பெற்றன என்பதைக் காண்கின்றோம். தமிழ் நாட்டுச் சமய நிலையும், அரசு நிலையும் மாறிய அந்தக்காலத்தே பெண்கள் நிலையும் மாறி உயரலாயிற்று. அந்த நூற்றாண்டு தொடங்கி ஆண்ட பல்லவ மன்னர், மகளிர் ஏற்றத்தை மதித்து வந்ததாகவே வரலாறு வகுத்துரைக்கின்றது. அரசர் தம் மனைவியர், மகளிர் பேரால் பல அறச்செயல்கள் செய்ததையும் காண்கின்றோம் நாம். எனவே, சங்க காலத்துக்கு அடுத்தடி பெண்கள் ஏற்றம் பெற்று வாழ்ந்த காலம் பல்லவர் காலம் என்பது தேற்றம்.

# சுந்தரர் காலப் பெண்டிர்

காலம் செல்லச் செல்லத் தமிழ் நாட்டு நாகரிகத்தில் பிற நாகரிகங்கள் வந்து கலக்க ஆரம்பித்துவிட்டன. தமிழ் நாட்டவரோடு பல நாட்டு மக்கள் படை எடுத்து வந்தும், வேறு வகையில் பழகியும் ஒன்றிக் கலந்து விட்டனர். அவரவர்தம் பழக்கவழக்கங்களும் தமிழ் நாட்டில் நிலைபெற ஆரம்பித்துவிட்டன. யாதொரு வேறுபாடும் இன்றி ஒன்றிக் கலந்து வாழ்வின் வளம் பெருக்கிய தமிழ் நாட்டில் எத்தனையோ வேறுபாடுகள் இடம் பெறலாயின. இப்படியே நூற்றாண்டு தோறும் கலப்பும், வளர்ச்சியும், பிறவும் நாட்டில் பெருகிக் கொண்டு வருகின்றன. பெண்களது நிலையும் அது போன்றே திரிந்தும், மாறுபட்டும், கெட்டும், உயர்ந்தும் கால நிலைக்கு ஏற்பச் சென்றுகொண்டே இருக்கின்றது.

இதோ! பல்லவர் காலத்து இறுதியிற் பல காட்சிகள் மனக்கண் முன் வருகின்றன. முன்கண்ட காட்சிக்கும் இவற்றிற்கும் இடையில் இரண்டு நூற்றாண்டுகள்

கழிந்திருக்க வேண்டும். அவர் யார்? சுந்தரரா? ஆம். அதோ **நந்திப்போத்தரையன்**—தமிழ் வெறி பிடித்து மாண்ட பெரும்பல்லவன்—காட்சி அளிக்கிறன். அந்தக் காலத்திலும் பெண்கள் கலை நலம் கொண்டவாகளாகத் தாமே காண்கின்றார்கள்! அவர்தம் ஆடலும் பாடலும் எவ்வாறு கோயில் தோறும் நடைபெறுகின்றன என்பதைக் காணும்போது எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகின்றது! ஆயினும், அந்த ஒரு குலம்—பதியிலார் குலம் என்று சேக்கிழார் சொன்னரே அந்தக் குலம்—நன்கு வளர்ந்து வந்ததாகவன்றோ தெரிகின்றது! புலவரது கற்பனையில் தோன்றிய அந்தப் பரத்தையர் குலம், இப்படியும் வாழ்விடை வந்து இன்னல் தரும் என்று யார்தான் கனவு கண்டிருப்பார்! ஆகா! எண்ணிப் பார்க்கவும் இயலவில்லையே! சேக்கிழார் சிறப்பு வாய்ந்த **பரவையாரைப்** பற்றிக் கூறும்போது 'பதியிலாக் குலத்து வந்தார்' எனக்குறிப்பிடுவது எவ்வளவு நடுக்கத்தை உண்டாக்குகின்றது! அந்தக் குலத்தில் பரவையார் ஏன் வந்து பிறக்கவேண்டும்? அது பழுதற்ற குலம் என்பதற்காகத்தானே? ஆடவர் கைப்பொம்மையாக இந்தப் பெண்கள் ஆட்டிவைக்கப்பட்ட நாட்கள் தமிழ் நாட்டில் எத்தனையோ கழிந்துள்ளன! ஏன்? இன்றுங்கூடப் பல பெண்கள் அப்படித்தானே வாழ்விக்கப்படுகிறார்கள்? வளமார் செல்வமும் பிற நலமும் பெற்ற பெருநிலையில் பெண்கள் இருந்த போதிலும், அவர்களைப் பள்ளத் தாழ்த்திவைத்திருந்தார்கள் என்பது தெரிகின்றதே! அல்லாவிட்டால், இந்தப் பரத்தையர் குலம் வழி வழியாக வந்துகொண்டிருக்குமா?

அந்த நாளில் பெண்கள் கலைச் செல்விகளாய்த் திகழ்ந்தார்கள் என்பதைச் சுந்தரர் வாக்கே பல இடங்களில் மெய்ப்பிக்கின்றது. அக்காலத்தில் ஆடவரிலும் பெண்கள் ஆண்டவனிடத்தில் மாரு அன்பும் பத்தி

யும் கொண்டு வழிபட்டார்கள் என்பது நன்கு விளங்குகின்றதே! **சங்கிலியார்** தம் உள உரத்தால், பெற்றோர் அவரை யாருக்கும் மணம் செய்து வையாது, அவர் விருப்பப்படி ஒற்றியூரில் இருக்கவழிசெய்தனர் என்பதையும், அவர்தம் வேளாண் வாழ்க்கையையும் எண்ணும் போது, பெண்கள் அக்குலத்தில் எவ்வாறு போற்றப்பட்டார்கள் என்பது தெரிகின்றதே! மற்றும் அவரவர் தத்தம் கருத்துக்கேற்ற கணவரை, சாதி வேறுபாடுகளையும் பாராட்டாமற் பெற்றார்கள் என்பதைக் காட்டும் செயலன்றோ அவர் செயல்? 'பெண் ஒருத்தி மனைவியாய் இருக்கும் போது மற்றொருத்தியை மணத்தலாகாது; மணந்தால், துயர் பெருகும்,' என்பதையேயன்றோ சுந்தரர் தம் இரண்டாம் மணமும் பின் நடந்த பிற நிகழ்ச்சிகளும் காட்டுகின்றன ?

'கொண்ட மனைவிக்குக் கொடுத்த வாக்குறுதி தவறின், அவர் கடவுளுக்கே தோழராயினும், தக்க தண்டனை பெற்றுத்தான் ஆகவேண்டும்,' என்பதையன்றோ சுந்தரர்தம் கண் இழப்புக் காட்டுகின்றது! அவர் கண் இழந்தபின் கதறும் நிலை, அவர் பெண்கள் சொல்லுக்கு எவ்வளவு அஞ்சுகிறார் என்பதை நினைப்பூட்டுகின்றதன்றோ? "அகத்தில் பெண்டுகள் நான் ஒன்று சொன்னால், 'அழையேல், போ குருடா,' எனத் தறியேன்," என்று அவர் பாடும் போது, வீட்டு மகளிரின் சொல்லுக்கும் பழிக்கும் அவர் எவ்வளவு அஞ்சினார் என்பது தெரிகின்றதே!

சுந்தரர் காலமாகிய பிற்காலப் பல்லவர் காலத்துப் பெண்கள் பெருங்கலாவல்லிகளாய் விளங்கினார்கள் என்பதை அக்கால வரலாறுகள் நம் கண்முன் கொண்டு வந்து காட்டுகின்றனவே! பல்லவர் காலந்தானே நாட்டில் சமயத்தையும் கலையையும் ஒருசேர ஓம்பிய காலம்! ஆனால், அதற்காக ஒரு குலம் உண்டு என்று கூறுகின்றார்

களே, அதை எண்ணும் போதுதான் நடுக்கம் உண்டா கின்றது! எனினும், அந்தக் காலத்தில் அந்த ஒரு குலந் தான் அக்கலைகளைப் போற்றிற்று என்று எழுதவில்லை. தமிழ் நாட்டுப் பெண் இனமே கலை மயமாகக் காட்சி அளித்ததைத்தான் அக்கால இலக்கியங்கள், கல்வெட்டு கள், பிற நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன. தமிழ் நாட்டுப் பெண்கள் வரலாற்றில் சிறந்த காலம் சங்க காலம் என்ருல், அதற்கு அடுத்தபடியாக, ஏற்றமும் எழி லும் பெற்று, கலை மலிந்த காரிகையார் வாழ்ந்து வளம் பெற்ற காலம் பல்லவர் காலம் என்றுதான் சொல்ல வேண்டும்! சமயம் வாழ்வோடு இணைய, அவற்ருேடு காதல் கலக்க, அந்த இன்ப வாழ்வில் பெண்ணினம் அக் காலத்தில் தலைதூக்கி நின்றது காண மகிழ்ச்சி உண்டா கின்றது!

அடுத்துத் தெரிகின்ற அந்தக் காட்சியில் கடவுள் நெறியும் காதல் நெறியும் ஒன்ருகத்தானே பேசப்படு கின்றன! 'உலக வாழ்வு நிலையற்றது' என்று கூறும் அடி யவர், ஆண்டவனைத் தலைவனுகவும் தம்மைத் தலைவிய ராகவும் பாவித்துப் பாடுகின்ற பல பாடல்கள் எழுந் துள்ளனவே! கடவுள் நெறி மிக உயர்ந்திருந்த அந்தக் காலத்தில் வாழ்ந்த **மாணிக்க வாசகரும்**; துறவு வாழ் வினை மேற்கொண்ட போதிலும், கடவுள் நெறியைக் காதல் நெறியோடு ஒப்பிட்டுப் பாடுகின்ருரே! அவர் தம்மை ஒரு தலைவியாக்கிக் கொண்டு, பல தோழியரை யும் கற்பனை செய்து கொண்டு அந்தக் கற்பனை உலகில் பாடிக்கொள்ளும் களவு கற்பு ஒழுக்கங்கள் என்றென்றும் மறக்க முடியாதன அல்லவா? அவர் தம் பாடல்கள் ஒருவாறு தமிழ்நாட்டுப் பெண்களது வாழ்வினையே எடுத் துக் காட்டுகின்றன. சைவத்தில் ஆழ்ந்த பற்றுள்ள மணிவாசகர் அக்குலப் பெண்கள் ஆண்டவனை வேண்டு

வதாக அமைத்துப்பாடும் அந்தப் பாடல்கள் எவ்வளவு இனிமை உடையனவாய்க் காண்கின்றன !

**'எங்கள் பெருமான்! உனக்கொன் றுரைப்போம்கேள் :**
**எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க!**
**எங்கை நினக்கல்லாது எப்பணியும் செய்யற்க !**
**கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க'**

என்னும் அடிகள் அவர் காட்டும் பெண் குலம் எப்படிப் பட்டது என்பதை விளக்குகின்றன அல்லவா ! அவர்தம் **திருவாசகம்** முழுதும் பெண்ணினம் பேசப்படும் சிறப்பை அறியாதார் யார்? **திருவெம்பாவை, திருத் தெள்ளேணம், ஊசல், சாழல்,** என்னும் இவைபோன்ற எத்தனையோ பிரிவுகளில் பெண்கள் பேசப்படுகின்றார் களே! அவர் தம் பாடல்களெல்லாம் ஆண்டவனைப் பற்றிய பாடல்களாய் அமையினும், அவற்றிலிருந்து அக்காலப் பெண்கள் வாழ்வினையும் ஒருவாறு அறுதியிட முடிகின்றதே! அதுமட்டுமின்றித் தமிழ் நாட்டு விழாக் களையும் வேடிக்கைகளையும் ஆடவரினும் பெண்டிரே ஆர்வங்கொண்டு பேணி வளர்த்தவர் என்பது நன்கு புலப்படவில்லையா ? அப்பெண்கள் கடுங் குளிரில் காலைப் பொழுதில் பொய்கையில் நீராடிப் போற்றிப் பாடும் பாடல்கள் நெஞ்சை உருக்குவனவா யல்லவா இருக்கின்றன !

**'மொய்யார் தடம்பொய்கைப் புக்கு முகேரென்னக்**
**கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி**
**ஐயா ! வழியடியோம் வாழ்ந்தோங் காண்.'**

என்று தாம் வாழும் வகையினைப் பாடுவதிலே இந்தப் பெண்களுக்கு எவ்வளவு பேரின்பம் உண்டாகிறது ! ஆம்! தமிழ் நாட்டு அழியாத விளையாடல்களையும் வேடிக் கைகளையும் அன்றும் இன்றும் போற்றி வளர்ப்பவர் தமிழ் நாட்டுப் பெண் இனத்தவரேயாவர். அவற்றை

அவ்வளவு கண்ணுங்கருத்துமாக வளர்த்துங்கூட, இதோ காணும் திருவெம்பாவைத் திருவிழா ஏட்டளவில் அன்றே இன்று தமிழ் நாட்டில் நின்றுவிட்டது!

மணமாகாத தமிழ் நாட்டு இளம் பெண்கள் மார்கழித் திங்கள் விடியற்காலையில் எழுந்து ஊர் தோறும் அனைவரும் ஒருங்கு கூடி, அருகில் உள்ள அருவிக்கோ குளத்துக்கோ சென்று, குடைந்து நீராடித் தம் வழிபடுகடவுளை வணங்கி, தம் வாழ்வு நலம் பெறத் தக்க வழியில் நல்ல கணவனைத் தந்தருளுமாறு இறைவனை வேண்டிக் கொள்ளும் அந்த **மார்கழி நோன்பு** இப்போது எங்கே உள்ளது? அந்த மார்கழிக்கு முன் திங்களின் **கார்த்திகை விளக்கீடு**, 'தளர்ந்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும் விளக்கீடு' என்று ஞானசம்பந்தரால் கண்டு போற்றப் பட்ட அந்தக்காட்சி, இன்று எங்கு உள்ளது? நம் நாட்டுப் பெண்கள் கொண்டாடிய நலமார் விழாக்கள் பல வீழ்ந்து விட்டனவே! எனினும், அவற்றுள் ஒரு சில, நம் அண்டை நாடாய் இன்று ஆக்கப்பட்டிருப்பினும், அன்று நம் அருந்தமிழ் நாடாகவே இருந்த மலையாள நாட்டிலே இன்றும் வாழ்வது கண்டு நாம் ஆறுதல் பெற வேண்டியவர்களா யிருக்கிறோம்.

மறைந்தன போக, வாழ்கின்ற இரண்டொரு விழாக்களும் இன்றளவும் பெண்களாலேயே வாழ்கின்றன என்பதை மறுப்பார் யார்? திருவெம்பாவையும், அம்மானையும், பொற்சுண்ணம் இடித்தலும், தெள்ளேணம் கொட்டலும், சாழலும், தோணுக்கமும், ஊசலும், இவை போன்ற பிறவும் அந்தக் காலத்தில் வாழ்ந்த தமிழ் நாட்டு பெண்களது உணர்வு கலந்த உள்ள நெகிழ்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன அல்லவா? ஆண்குலத்தவராகிய மணிவாசகர் தம்மைப் பெண்ணுகக்கண்டு அன்றைய பெண்களின் நிலைகளையெல்லாம் கண்டு கண்டு

பேசுவது பெருவியப்பன்றோ? இதே நிலையில் ஆழ்வாருள் ஒருவராய் அமைந்த ஆண்டாள் பாடிய பாடல்களும் அன்றைய தமிழ் நாட்டுப் பெண்டிர் தம் தன்மைகளை விளக்குகின்றனவே! எனினும், ஒரு பெண் தன்னைப் பற்றியும் தன் பெண் குலம் பற்றியும் பெருமை பாராட்டு வதைவிட, ஆடவரும் தம்மை ஆர்வத்தால் பெண்ணாக்கிப் பேசும் பெருநிலைதானே போற்றற்குரியதாகும்! அன்று முதல் அடியவர் பலர் ஆடவராயினும் தம்மைப் பெண் ணாக்கிக்கொண்டு பலப்பல விதமாகக் காதல் நெறியைக் கடவுள் நெறியோடு பொருத்திப் பாடும் பாடல்கள் நாட் டில் வளர்ந்துகொண்டே வருவதைக் காண்கிறோம். எனவே, வீட்டுலக வாழ்வாகிய தெய்வ நெறியாயினும், மண்ணுலக வாழ்வாகிய காதல் நெறியாயினும், பெண்மை யின் பெருநலம் இன்றேல், ஒன்றும் இன்றாம் என்பது தான் அவர்கள் கண்ட முடிவு என்பதில் ஐயமும் உண்டோ!

இந்தப் பெருங்காட்சிகளுக்கிடையில் வேறு சில சிறு சிறு காட்சிகளும் அதோ வந்து வந்து போகின்றனவே! **சீவகன்** வாழ்வுச் சித்திரங்கள்தாம் என்று திட்டமாகச் சொல்ல இயலாவிட்டாலும், அந்த வரலாறு போன்ற இரண்டொரு காட்சிகள் எதிர்ப்படுகின்றன. காலத்தால் அவை முன்னே பின்னே என்று ஆராய்ச்சியாளர்கள் ஐயுறுவதற்கு ஏற்றபடி அன்றோ அந்தக் காட்சிகளும் திட்டமாகத் தெரியாமல் வந்து வந்து போகின்றன; அதோ **யசோதரன்** ஆட்சியும் காட்சியும் தெரிகின்றன. ஒருபுறம் பெண் இன்பம் பெரிதெனப் போற்றி அம் மங்கையர் குலத்தை மதிக்கும் மாபெருங் காட்சி தெரி கின்றது. அதே வேளையில் மற்றொரு புறத்தில் மங்கை ஒருத்தி காமக்களியாட்டில் கண்டவனோடு நின்று, உற்ற வர்களுக்கும் மற்றவர்களுக்கும் பெருங் கொடுமை இழைக்கும் காட்சிகளும் தெரிகின்றனவே! ‘பெண்

இனத்தும் பேய் உண்டோ' என்று பேசக்கூடிய அள வில் அதோ இரண்டொரு கோரக் காட்சிகள் தென்படு கின்றனவே! அரசியாக வாழப் பிறந்தும், அல்லல் வாழ்வை விரும்பிக் காமக் குட்டையைக் கலக்கும் எருமை மாடாக மாறும் ஒரு பெண் வடிவைத் தாங்கிய பேய் உருவமும் தோற்றுமல் இல்லை. இவையெல்லாம் காவி யத்தும் நாடகத்தும் காணும் காட்சிகளாய் அமையினும், அக்காலப் பெண்ணினப் போக்கைச் சித்திரிக்கும் பெருஞ் சித்திரங்களாயன்றோ தோன்றுகின்றன! நாட்டில் கலப் புக்கும் பிறவற்றிற்கும் ஏற்பத் தமிழ் நாட்டுப் பெண் ணினம் வளைந்து கொடாவிட்டாலும், பாடும் புலவரும் கற்பனைக் கவிஞருமாகிய அவர்கட்கும் தன் கருத்துக் கேற்ற உருவத்தையும் குணத்தையும் காட்டித் தரு கின்றதே! என்னவோ, திட்டமாகத் தோன்றாத அக் காட்சிகளைப்பற்றி நாம் எண்ணிக் கவலைப்படுவானேன்!

இவற்றையெல்லாம் எண்ணும்போது வேறு சில காட்சிகளும் மனக்கண்முன் வந்து வந்து செல்கின் றனவே! பெண் நிலையில் நின்றுதான் இறைவனோடு இரண்டறக் கலக்க இயலும் என்பதைக் கண்டு அந் நிலையைத் தம் வாழ்விலும் மேற்கொண்டு, மற்றவர்கட்கும் அறிவுறுத்திய மாணிக்க வாசகர், அதே பெண் இனத்தைப் பழிக்கும் காட்சி என் கண் முன் வந்து கவலச் செய் கின்றதே! உலகில் மிக உயர்ந்தவள் தாய் என்பதை, 'பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்பரிந்து' என்ற அடியில் ஆண்டவனோடு ஒப்பிட்டுக் காணும் அம்மாணிக்க வாசகரே, சில இடங்களில் பெண்களைப் பழித்துரைப் பதைக் கண்டால் பதைபதைக்க வேண்டியுள்ளதே!

'தைய லாரெனும் சுழித்தலைப் பட்டுநான் தலைதடு
மாறுமே'

'கருங்குழலினர் கண்களா லேறுண்டு கலங்கியே
கிடப்பேனே!'

'மங்கையர் தம்மோடும்,
பிணைந்து வாயிதழ்ப் பெருவெள்ளத் தழுந்திநான்
பித்தனுய்த் திரிவேன்'

'செப்பு நேர்முலை மடவரரியர் தங்கள் திறத்திடை
நைவேன்.'

என்பன போன்ற அடிகளும் திருவாசகத்தில் இடம் பெற்றிருப்பதை அறியாதார் யார்? 'இறையருளுக்கே பெண் தன்மைதான் ஏற்றது என்று பதிகந்தோறும் பாராட்டிய மணிமொழியாரா இப்படிப் பெண்ணினத்தைப் பழித்துப் பேசுகிறார்!' என்றுகூட எண்ணத் தோன்றுகிறதல்லவா? ஆம், இது ஒரு புரியாத புதிரே. அவரைத் துறவியர் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அவரோ, பெண்களோடியைந்து பீடழிந்த வரலாற்றைப் பேசுகின்றார். இரண்டில் எது சரி என்பதே ஆராய்ச்சிக்குரியதாய் உள்ளது. என்றாலும், அமுதடி அடைந்த அந்த மணிமொழியார்மேல் அத்தகைய குற்றம் சாட்டுதல் சற்றும் பொருந்தாத ஒன்றாகும். பின்பு ஏன் அவர் பெண் இனத்தை அப்படி இழிவுறுத்தியிருக்க வேண்டும்? தாமே பெண்ணாகும் தன்மை விழையும் மணிமொழியார் இப்படிப் பெண்களைச் 'சுழி' என்றும் 'வலை' என்றும், 'பித்தராக்குபவர்' என்றும் பேசுகிறாரே! ஆம். இஃது ஒரு வேளை காலத்தின் கோலத்தால் நிகழ்ந்த செயல் போலும்! அவர் காலத்தில் அவர் புத்தரொடு வாதிட்டதை அறிகிறோம்: அப்போது வாழ்ந்ததாகவும் அறிகின்றோம். யசோதர சரிதையில் காணும் பேய்த் தன்மைப் பெண்டிர் சிலரை ஒருவேளை மணிமொழியார் கண்டிருக்கவும் கூடும். அதுபற்றித்தான் இப்படிக் கூறினாரோ என்ற ஐயப்பாட்டில் அவர் சொற்கள் மட்டுமின்றி. ஆராய்ச்சியும் நம்மைக் கொண்டு சேர்க்கின்றது. எப்படி இருந்தாலும், அவர் பெண்ணினத்தை அவ்வாறு பழித்தது தவறு என்றுதான் நான் கூறுவேன்! ஒரு

துறவியார் எங்கள் இனத்தைப் பழிக்க எப்படி உரிமை பெற இயலும்? எங்கள் வாழ்வினை—இன்பத்தை—ஏற்றத்தை அறிந்து கொள்ளாது, இன்ப துன்பங்களில் நாங்கள் ஆடவரைத் தாங்கும் தகவையும் அறியாது, ஒருவர் பாடுவது என்றால், அது மன்னிக்க முடியாத குற்றந்தானே? நெற்றிக் கண்ணைக் கண்டும் அஞ்சாத அற வழியில் வாழ்ந்த செந்தமிழ் நாட்டுப் பெண் என்ற காரணத்தால் கூறுகின்றேன்! மணி மொழியார் என் மதிப்புக்குரியவரானாலும், தம்மையே பெண் தன்மைக்கு மாற்றும் அவர், இப்படிப் பெண்களைப் பழித்தல் குற்றந்தான். ஆம். அவரும்அவரைச் சேர்ந்த ஒரு சிலரும் தூவிச் சென்ற அந்த விதையே பிற்காலத்தில் வாழ்ந்த **பட்டினத்தார்** போன்ற பிறரும் எங்களை மேலும் ஏளனமாக இழித்துப் பேசவும் தாழ்த்தவும் வழி செய்து விட்டது!

# கவிஞர் காட்டும் காரிகைமார்

சங்க காலம் தொடங்கி இதுவரையிற் பலப்பல காட்சிகள் தோன்றி மறைந்துவிட்டன. அவற்றுளெல் லாம், இரண்டொன்றைத் தவிர, பெண்மை சிறப்பாகத் தானே காட்சியளிக்கிறது? வாழ்வே ஒரு கலையென்று வாழ்ந்த அந்த முதற்காலம் தொடங்கி, வாழ்வும் பிறவும் மாயை என்று பேசும் இடைக்காலத்தும் பிற்காலத்தும் பெண்கள் நிலை பேசப்பட்டுத்தான் வருகின்றது. அவர் தம் வாழ்வு நாட்டு மக்களது வளம் ஓம்பும் வாழ்வாகத் தானே உள்ளது? எங்கோ இரண்டொரு காட்சிகள்— யாரோ இரண்டொருவர் பாட்டு—பெண்களைத் துச்சமாக எண்ணச் செய்தாலும், திரண்ட தமிழ்ச் சமுதாயம், பெண்களைத் தெய்வமாகப் பேசுகின்ற காட்சிகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றிக் கொண்டுதாமே இருக்கின்றன? இதோ தெரிகின்ற காட்சிகள், சங்க காலத்துக்குப் பின்னும் இன்று வரையினும் இடைப்பட்ட நாட்களில், சங்க காலத்தை ஒட்டிய வகையில் பெண் களுக்கு ஏற்றமளித்த ஒரு காலத்தைத்தானே படம் பிடித்துக் காட்டுகின்றன?

கடவுள் நெறியைக் கைப்பற்றி வாழ்ந்த அடிய வரைப் பாட வந்த சேக்கிழார், அந்தப் பெரிய புராணத் திலேதான் பெண்மைக்கு எவ்வளவு ஏற்றம் தந்திருக் கிருர் ! முன்னே ஒரு காட்சியில் கண்ட திலகவதியாரும், மங்கையர்க்கரசியாரும், காரைக்காலம்மையாரும் மட்டு மன்றி, வேறு எத்தனைக் காரிகைமார் மூலம் பெண்மையின் ஏற்றம் எடுத்துக் காட்டப்படுகிறது ! திருநீலகண்டர் தம் வாழ்க்கைத் துணைவியார், இளையான்குடி மாறனர் தம் மனைவியார், கலிக்காமரின் காதல் துணைவியார் ஆகிய இவர் போன்ற எத்தனையோ பெண்மணிகள் மூலம், அவர் காலத்தும் நிகழ்ச்சி நடந்த காலத்தும் வாழ்ந்த தமிழ் நாட்டுப் பெண்மை நலத்தைப் பெரிதும் சேக்கிழார் விளக்கிக் காட்டுகின்ருரல்லரோ !

காவியப் புலவர் கற்பனையில் நாட்டுக்கு நஞ்செனத் தோன்றிய பரத்தை வாழ்வினைத்தான் எவ்வளவு திண்மையாகக் கண்டிக்கிருர் சேக்கிழார் ! பரத்தையை நண்ணிய காரணத்தாலன்ருே திருநீலகண்டர்தம் வாழ் வரசியர், ‘எம்மைத் தீண்டுவிராயின் திருநீலகண்டம் !’ என்றனர் ? அவர் திருநீலகண்டமென்றிட்ட ஆணையே யன்ருே அந்த நாயனருக்குப் பெயராய் அமைந்தது ! அவருக்கு அவர் பெற்ருேர் இட்ட பெயர் எங்கே ? யார் அறிவார் அதை ! தமிழ் நாட்டுப் பெண் உலகுக்கே ஒரு பெருமை தேடித் தந்த பெயர் அல்லவா அவர் பின்னே பெற்றது ? முன் பெற்ற பிள்ளைமைப் பெயர், பிறர் என்றும் மறக்கக் கூடிய வகையில், அவர் பரத்தைமை ஒழுக்கத்தைப் பாரறியக் காட்டி, திருநீலகண்டமே ஆணையென் ருேதி, அந்த ஆணை வழி வழுவாது வாழ்ந்து, தம் கணவனுருக்கு அப் பெயரை நிலை நிறுத்திய மாதரசி யாரின் வழி வந்தவர்கள்தாமே இந்நாட்டுப் பெண்மணி கள்? அந்த அம்மையர்தம் அருளறத்தின் வழித் தத்தம் கணவரைப் பெண்டிர் திருத்த முற்பட்டிருப்பாராயின்,

இந்த நாட்டில் அப்பரத்தையரைப் பற்றிப் பேச எந்தப் புலவனுவது எண்ணியிருப்பானு? அவர் வழி 'எம்மை' என்றதனுல் மற்றை மாதரார் தம்மை மனத்தினும் தீண்டா நெறியில் ஆடவர் வாழ வழி வகுத்த அப் பெண்மை வாழ்க என்று கூத்தாடத் தோன்றுகிறதே !

பெரிய புராணத்தே கடவுள் நெறிக்குப் பெண்கள் அப்பாற்பட்டவர் அல்லர் என்பதை எடுத்துக் காட்டும் நெறியன்றே எண்ணற்பாலது ! தெய்வ நெறிக்குப் பெண்கள் ஒரு முட்டுக்கட்டை என்று யாரோ பொய் வேதாந்தம் பேசும் பேச்சுகளை யெல்லாம் பொய்யென்று காட்டும் வகையில் எத்தனை இல்லறத்தாரை இறையுலகுக்கு அனுப்பியிருக்கிருர் சேக்கிழார்! மனைவி மக்களோடு மட்டற்ற இன்ப வாழ்வில் வாழ்ந்த நாயன்மார் எத்துணை பேர் இறையொடு ஒன்றி வாழும் இறவாப் பேறு பெற்றனர்! எனவே, பெண்மை வீரத்துக்கும், வாழ்வுக்கும், மறுமையின் வீட்டு நெறிக்கும் வழிகாட்டியாய் அமைவதைக் காட்டும் இப் பெரியபுராணம் தமிழ் நாட்டுப் பெண்களின் பெருமையை விளக்கும் பெருநூல் என்பது நன்கு அறிய முடிகின்றதன்றே ?

அதோ பல காட்சிகள் ஒன்றன் பின் ஒன்ருக விரைந்து வருகின்றன. ஆம். அவை எல்லாம் **கம்பர்** காட்டும் காட்சிகளாகவன்றே தொடர்ந்து வருகின்றன ! இராமாயணம் வடநாட்டில் நிகழ்ந்த கதையாயினும், அதைத் தமிழ் நாட்டுக் கண்களுக்குக் காட்டும் கம்பர் எவ்வளவு அழகாகச் சித்திரிக்கின்ருர்! இராமாயணமே பெண்களின் ஏற்றம் பாடும் நூல் என்ருல்தான் என் மனம் அமைதி பெறும் என எண்ணுகிறேன். நான் மட்டுமா எண்ணுகிறேன்? 'சிறையிருந்த செல்வியின் ஏற்றம் சொல்லுகிறது இராமாயணம்' என்று ஸ்ரீவசனபூஷணமுடையாரும் செப்புகின்றனரே! கதைகளுக்குப் பெண்களே காரணமாகின்ருர்கள். அப்

பெண்களைச் சித்திரிக்கும்போது கம்பர் எவ்வளவு பெருந்தன்மையாக எத்தகைய முறையில் ஏற்றம் கொடுத்து எழுதுகிறார்! தமிழ் நாட்டுக் கற்பின் முறைக் கேற்ப ஆடவரையும் பெண்டிரையும் கம்பர் சித்திரத்துக் காட்டும் காட்சி மறக்க இயல்வதோ! வால்மீகியாரையும் கம்பரையும் ஒப்பு நோக்கிப் படித்தவர்கள், பெண்மை யின் பெருமையைப் பேசுவதில் வால்மீகியாரினும் கம்பரைத்தானே மேலாகப் பேசுகிறார்கள்? ஆகா! அந்தக் கற்புச் செல்வியைத்தான் அவர் எப்படிச் சித்திரித்துக் காட்டுகிறார்! ஒரு கையால் தலையையும் ஒரு கையால் இடுப்பையும் இராவணன் தாங்க, வான் வழிச்சென்ற வால்மீகியாரின் சீதைக்கும், கற்புடைப் பெண்டிரைத் தீண்டினும் தீச்சுடும் என்று அஞ்சி மண்ணொடும் கொண்டுபோகப்பெற்ற அந்தக் கம்பரின் சீதைக்கும் வேறுபாடு எத்தனை பெரிது! பிற நாட்டுக் கதா பாத்திரங்களை நம் நாட்டு முறைக்கும் வாழ்வுக்கும் ஏற்ற வகையில் போற்றி அமைக்கும் அக்கம்பர் கருத் தின் உயர்வே உயர்வு! எங்கள் பெண் இனத்தை இடையே எத்தனையோ பேர் பழித்தாலும், கம்பர் அந்தக் கரும் புள்ளிகளையெல்லாம் துடைத்துவிட்டனரே! பெண்மை கற்பின் திருவுரு எனக் காட்டும் அவர் பாடல் களை எண்ண எண்ண இதயம் இன்ப வெள்ளத்திலாழ் கிறதே! பெண் உருவாய சீதையை அவர் வாயால் பெண் என்று கூறவில்லையே! 'கற்பினுக் கணி' என்றும், 'இற்பிறப்பு' என்றும், 'இரும்பொறை' என்றும், 'கற்பெ னும் பெயரது' என்றும், 'தவம் செய்த தவமாம் தையல்' என்றும் அவர் அனுமன் வாக்கில் வைத்துச் சீதையைப் போற்றும் நெறி தமிழ் நாட்டுப் பெண்மை நெறியைப் பாராட்டுவது அன்றோ?

இந்தக் கற்பு நெறியை மக்களுக்கு மட்டுமன்றி, விலங்கிடத்தும் வைத்துப் போற்றும் நிலையை யாரால்

மறக்க முடியும்! வாலி இறந்ததும் வனப் பிழந்து கைம்மைக் கோலம் கொண்டு வாடும் **தாரையின்** தோற்றத்தில் எப்படித் தமிழ் நாட்டு விலங்குகளும் கற்பு நெறி கடவா வாழ்க்கையில் வாழ்கின்றன என்பதை அவர் விளக்குகின்றாரே!

**"மங்கல அணியை நீக்கி, மணியணி துறந்து, வாசக்**
**கொங்கலர் கோதை மாற்றி, குங்குமம் சாந்தம்**
**கொட்டாப்**
**பொங்குவெம் முலைகள் பூகக் கழுதொடு மறையப்**
**போர்த்த**
**நங்கை'**

என்று தாரையை அவர் கருத்தால் கண்டு எழுதும் போது எவ்வளவு உணர்ச்சி உண்டாகின்றது! தாரை அவ்வாறு இருந்தது உண்டோ இல்லையோ, கம்பர் அன்றைய-ஏன்-என்றைக்கும் வாழுந் தமிழ் நாட்டுப் பெண்களது பெருங்கற்புநிலையை-'கணவனை இழந் தோர்க்குக் காட்டுவது இல்' என எண்ணும் பெரு நிலையை-நன்கு விளக்கிக் காட்டினர். அது போதாதா தமிழ் மகளிர் உள்ளத்தை உலகு அறிந்து கொள்ள?

'பெண்மை தியாகத்தின் சின்னம்,' என்பதும் கம்பர் காட்டும் மற்றொரு காட்சியால் விளங்குகிறதே! அதோ **கைகேயியின்** குரல் கேட்கின்றது. அறியா உலகம் அவளை இகழ்ந்து பேசுகின்றது. அப்படிப் பேசச் செய்தார் கம்பர், தம் வாக்கிலும் பரதன் வாக்கிலும் அவளை வைத்து. ஆனால், அவர் அவளது தியாகச் சிந்தையை அறிவார். அறியாவிட்டால், அவள் சிந்தை திரிந்தமைக்குத் தேவர்கள் தவந்தான் காரணம் என்று சொல்வாரா? கைகேயியை உண்மையில் உணரா மக்கள் பலவகையில் அவளைப் பழித்துரைக்க அஞ்சுவதில்லை. ஆனால், ஆய்ந்து பார்ப்பின், அதோ தெரியும் அந்த

நாடகத்தில் அவளது தியாகச்சின்னம் முழுவதும் நன்கு விளங்குகின்றதே!

இராமனுக்குப்பட்டம் என்றதும் எவ்வளவு மகிழ்ந்தாள் கைகேயி! எத்தனைச் சிறப்புச்செய்தாள் செய்தி கொணர்ந்த கூனிக்கு! பின்பு ஏன் அவள் மனம் அவ்வளவு விரைவில் மாறியது? ஆம்! அதுதான் எண்ணவேண்டுவது கைகேயியைத் தசரதன் மணக்கும் போது அவளுக்குக் 'கன்யா சுல்க'மாகத் தன் நாட்டையே அளித்துவிடுகிறான். அந்த வாக்கை மீறி இராமனுக்குப் பட்டம் கட்டுவதற்காக, முன் கூட்டியே பரதனைப் பாட்டி வீட்டிற்கு அனுப்பிவிடுகின்றான். அவன் சூழ்ச்சி, செயல் அனைத்தும் உலகுக்குப் புலப்படாதபடி செய்து, அனைத்தையும் தன் மேல் ஏற்றிக் கொண்டு என்றென்றும் 'அழியாப் பழி' என்னும் புகழ் பெற்ற அந்தச் செம்மனச் செல்வியைத் 'தீயள்' என்ற நா வாழுமா? கம்பர் அவளை நினைத்து, அவள் தியாகத்தை மறைத்து, மன்னனைச் செவ்வியனாக்க முயன்றதிறத்தில் அவளை வாய் கூசாது வைகின்றார். என்றாலும், கைகேயி தன் தூய உள்ளமும் பிறவும் அவர் மொழி வழி அங்கங்கே புலப்படாமலில்லை. மற்றும் அந்தப் பாசகவியின் நாடகங்களும் இவற்றை வலியுறுத்துகிறன. இறுதியாகக் கைகேயியைப் பற்றியும், அவள் மனமாற்றம் பற்றியும் இதோ கம்பரே ஏதேதோ சொல்கிறாரே! இவற்றைக் கேட்போம்:

**'தீய மந்தரை அவ்வுரை செப்பலும் தேவி**
**தூய சிந்தையும் திரிந்தது! சூழ்ச்சியின் இமையோர்**
**மாயை யும்அவர் பெற்றநல் வரம்உண்மை யானும்**
**ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத் தானும்'**

என்பதும்,

**'அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்**
**துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்;**
**இரக்க மின்மையன் றோஇன்றிவ் வுலகங்கள் இராமன்**
**பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின்றனவே'**

என்பதும் அவரது உள்ளத்தையும் உணர்வையும் ஒருங்கே காட்ட வில்லையா!

அதோ, மற்றொருத்தியின் அழுகுரல் காதில் விழுகின்றதே! அவள் யார்? ஆ! மண்டோதரியா! ஆகா! என்ன அருமையான பெண் அவள்! அரக்கர் குலப் பெண்களிலும் அமுதமனையவர் உள்ளனர் என்பதைக் காட்டுவதற்காக இவளும் திரிசடையும் இலங்குகின்றனர்களே! ஏன் சூர்ப்பணகைதான் என்ன! தான் கொண்டவனைக் கணவனாகப்பெறாத காரணத்தாலல்லவா அவள் பல வகையில் சீதைக்குத் தீங்கு நினைத்தாள்? போகட்டும்! அந்த மண்டோதரி என்ன சொல்லிப்புலம்புகிறாள்? இராவணன் உடம்பில் பட்ட அம்பையெல்லாம் கண்டு கண்டு கதறுகின்றாளே!

**‘ கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை**
**மனச்சிறையில் கரந்த காதல்**
**உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து**
**தடவியதோ ஒருவன் வாளி !’**

என்றல்லவா புலம்புகிறாள்! எவ்வளவு ஏற்றமான கருத்து! கற்பு உடலால் மட்டும் காக்கப் படுவதன்று; உள்ளத்தாலும், அவ்வுள்ளத்து உணர்வாலும் காக்கப் படுகின்ற ஒன்று என்பதைக் கம்பர் தம் கண் முன் நின்ற தமிழ் நாட்டுப் பெண்ணை நினைத்துப்பாடியது மறக்க முடியுமா! வால்மீகியில் இந்தச் சொற்கள் உண்டா? ‘கற்புடைப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார்,’ என்ற பழந் தமிழ்ப்பா அடியின்படி இருபாலாரும் மற்றவர் உள்ளங்களில் புகாதபடி, கொண்டாரோடு கூடிவாழும் சுற்றம் எத்தனை வகையாகக் கண் முன் காட்டுகின்றது! ஆ! அதோ ஒரு காட்சி! எத்தனையோ நாள் உடன் இருந்தும், அண்ணியை நிமிர்ந்து நோக்காத ஆண்மையுடைய தெளிவுடைச் செம்மல் இலக்குவன், கிட்கிந்தையின் அவளுடைய அணிகளை அறியாது அலமருங்காட்சி அது! இப்-

படியே காட்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக விரைந்து வருகின்றன.. அனைத்தையும் எண்ணக்கூட முடிய வில்லையே ! ஆகா! இப்படிப் பிறநாட்டுக் காவியங் களிலும் தமிழ் நாட்டுப் பெண்களின் பண்பையே காட்டும் கம்பரை வியவாதிருக்க முடியுமோ !

அதோ ஒரு கிழ உருவம்—ஆம்—பெண் உருவந்தான். தூரத்தே வருகின்றதே ! யார் அவர் ! ஔவையார் ; முன்னே ஓர் ஔவையாரைக் கண்டோமே ! ஆம் ! இவர் அவரினும் வேறாயவர் போலும்! வயதிலும் ஒழுக்கத்திலும் பிறநெறியிலும் ஓர் ஆயிரம் ஆண்டுக்குமுன் கண்ட ஔவை யாரை இவர் ஒத்திருப்பினும், அந்த அதிகனின் நெல்லிக் கனி உண்ட ஔவையாரல்லர் இவர். அவரினும் இவர் திட்டமாக வேறுபட்டவரே. என்றாலும் இவரும் பெண் இனத்தை வாழ வைக்க வந்த பெருஞ்செல்வியார் என் பதில் ஐயமுண்டோ ; இதோ ! இவர் கையிலே எத்தனை நூல்கள்! ஆம்! **ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி**-இன்னும் என்னென்னவோ தெரிகின் றனவே! இவற்றையெல்லாம் எழுதிய செல்வியரா இவர்! இந்த மூதாட்டியார் எழுதிய பாடல்கள் இன்று இளைஞர் உள்ளங்களிலெல்லாம் இடம் பெற்றுள்ளனவே ! தமிழ் படிக்கத் தொடங்கி எழுத்தறிந்த உடனே ஆத்திசூடியும் கொன்றைவேந்தனுந்தாமே படிக்கின்றார்கள் நம் நாட்டுச் சிறுவர்கள் ? இவர் பாடல்கள் எவ்வளவு எளிமையாய் உள்ளன! சிறு சிறு தொடர்களாலே எத்தனை உயர்ந்த பொருள்களை யெல்லாம் அடக்கிக் கூறிவிட்டார்! இவரைப் பற்றி எத்தனையோ கதைகள் நாட்டிலும் ஏட் டிலும் வழங்குகின்றனவே ! அவற்றுள் எது உண்மை, எது பொய் என்பது அறியக் கூடவில்லை என்றாலும், இவர் நம்மைப் போலச் சாதாரணமாய்ப் பிறந்து வளர்ந்து, பெருமூதாட்டியாராகிய பின்னரே சில நீதி நூல்களை இயற்றினர் என்பது மட்டும் மறுக்க முடியாத

உண்மைதானே? இவரது கடவுள் அன்பும் பிறவும் இவர் தம் காப்புச் செய்யுட்களினாலேயே விளங்குகின்றனவே!

ஆம்! ஏன் இவர் பெண்களையே பழிக்கின்றார்? 'தையல் சொற் கேளேல்,' என்று இவர் சொன்னதாக வன்றோ இருக்கிறது? ஏன் இப்படி ஒரு நங்கையாரே தன் இனத்தை நலிவுபடுத்த வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லையே! 'மெல்லிநல்லாள் தோள் சேர்' என்று மங்கையரோடு கலந்து வாழும் காதல் வாழ்வை வற்புறுத்திய இவர், அந்த வாழ்வில் கருத்தொருமித்த செயல் இன்றியமையாதது என்பதை எண்ண மறுத்ததேனோ! தையலர் சொல்லை ஆடவரும், ஆடவர் சொல்லைத் தையலரும் கேட்டுக் கருத்தைப் பரிமாறிக் கொண்டு, தமக்கும் தம் வாழ்வுக்கும் உலகுக்கும் பயன் படும் வகையில் ஒல்லும் வகையாற் பாடுபடுவதுதானே இல்லறம்? 'இல்லறமல்லது நல்லறமன்று,' என்று கூறிய இந்த ஔவையாரே, 'தையல் சொல் கேளேல்,' என்று கூறுவானேன்? இஃது அறியக் கூடாத ஓர் உண்மைதான். என்றாலும், இவர் அதில் தவறினார் என்றுதான் சொல்ல வேண்டும்! கணவனுக்கியையாத மனைவியையும், கற்புடையாருக்கு ஒவ்வாத கணவனையும் இவர் கண்டதாகக் கதைகளும், இவர் பாடிய பாடல்களும் உள்ளன. என்றாலும், அவற்றுள் ஒவ்வொன்றிலும் தனித்தனி ஆணையும் பெண்ணையும் பற்றி உயர்த்தியும் பழிந்துந் தானே கூறுகின்றார்?

இருந்து முகந்திருத்தி ஈரொடுபேன் வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப—வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத் தான்.'

என்ற பாடலும்,

**'அற்றதலை போக அறுததலை நான்கினையும்**
**பற்றித் திருகிப் பறியேனோ—வற்றும்**
**மரமனையா னுக்கிந்த மானை வகுத்த**
**பிரமனையான் காணப் பெறின் ?'**

என்ற பாடலும் சாதாரண வழக்கிலே ஒளவையார் பாட்டாகக் கூறப்படுவனதாமே? இவற்றுள் பின்னதில் ஆடவன் கொடுமையை விளக்கும் அந்த வேகம், முன்னதில் பெண்ணின் கொடுமையில் இல்லையே! இருப்பின் என்? இந்த முறை அன்றும் இன்றும் வாழ்வில் காணும் நிகழ்ச்சிதான். இதற்காகத் 'தையல் சொற்கேளேல்,' என்றல் எவ்வாறு பொருந்தும்? பொருந்தாக் குடும்பங்களின் அடிப்படைச் செயல்கள் இருவரிடத்தும் உள்ளன என்று இவரே சொல்லியிருக்கிறாரே! பின்பு ஏன் இவ்வாறு பேசுகிறார்? இதுவும் புரியாத ஒரு புதிர்தான்.

'மைவிழியார் மனையகல்,' என்றும், 'மைவிழியார் தம் மனையகன்றொழுகு,' என்றும் இவர் கூறுவதில் கருத்து உண்டு என்று கற்றோர் கூறுகின்றனர். எந்தப் பரத்தைமைச் செயல் கண்டு திருநீலகண்டத்தை ஆணையிட ஒரு பெண் அமைந்தாளோ, அந்தப் பரத்தைமையைக் கண்டுதான் ஒளவையார் இவ்வாறு கூறினார் போலும்! இந்த ஒளவையாரின் நீதியினைப் போன்றே **'நறுந்தொகை'** என்னும் நீதி நூல் ஆக்கிய **அதிவீரராம பாண்டியரும்** இந்தப் பரத்தையரையும், குலத்தவரையும் என்ன வேடிக்கையாகப் பிரிக்கின்றார்! ஒரு வேளை இந்தப் பரத்தையர் குலம் பொருள் பெருக்கும் ஒரு குலமாக, மேனி மினுக்கி, உள்ளத்தைக் கண்டவர் பின் ஓட விட்டு, உடலை விற்று வாழ்ந்ததோ என்பதுதானே அவர் கூற்று விளங்குவது? குலமகள் கணவனோடு ஒழுகி இல்லறத்தில் வாழ, விலைமகளுக்கு மேனி மினுக்குதலே ஓர் அழகு என்றே கூறிவிட்டாரே! ஆம்! பெண் இனத்தில் ஒருத்தி விலை மகள் என்றே பேசம்படுகிறாளே!

எங்கோ கடவுளையும் காஞ்சியையும் பாட வந்த முனிவர் கூட, இவர்கள் விலை கூறி வாணிபம் செய்யும் கொடுமையை எழுத மறக்கவில்லையே! அதிவீரராமர் என்ன கூறுகின்றார்?

**'விலைமகட் கழகுதன் மேனி மினுக்குதல்'**

அம்மம்ம! எத்தகைய கொடுஞ்சொற்கள்! பெண் இனத்தில் ஒரு விலை மகள் இனம் பிரித்து, அவ்வினத்தவரைப் பரத்தையராக்கி, அவருக்கு அழகாக மேனி மினுக்குதலையும் சொல்லிய இந்த ஆடவர் சமூகம் என்று திருந்திப் பரத்தைமை வாழ்வினைப் பாரில் இல்லையாகச் செய்யுமோ!

ஔவையார் தம் காலத்தில் இந்தக் கொடுமைகளையெல்லாம் கண்டிருக்கக் கூடும். இவ்வளவு வெளிப்படையாக அவருக்குச் சொல்ல முடியவில்லை. அவரும் பெண்தானே? தம் இனம் பழிக்கப்படுவதில் அவருக்கு வெறுப்பு இராதா என்ன! என்றாலும், ஒரு வேளை ஒரு சில பெண்கள் காமக் களஞ்சியங்களாய்த் தம் உடலை விற்கும் காட்சியை ஊர் பல சுற்றிய அவர் கண்டும் கேட்டும் அறிந்திருப்பார். அந்த வேகத்தில்தான் 'மைவிழியார் மனையகல்,' என்ற சொற்கள் வந்திருக்கும். மேனி மினுக்குகின்ற அந்த மை தீட்டும் பரத்தையர் வழிச் செல்லலாகாது என்பது அவர் கருத்துப் போலும்! ஆ! என்ன கொடுமை இது!

என்றாலும், ஔவையார் தாய்மையின் பெருமையைத் தலைமேல் வைத்துப் போற்றும் அந்தப் பெருநெறியை மறக்க முடியுமா? பெண்மையின் தியாகத்திடையில் பிறந்து, பெண்களைத் தாயரெனப் பேணிப்போற்றும் பெருநெறி விட்டு, அவர்களைப் பரத்தையராக்கி, 'அவரை வேண்டா' என்று கூறும் அந்த நன்றியற்ற ஆடவர் சமூகத்துக்கு அவர் அறிவுறுத்த விரும்பினார் போலும்!

அதனாலே உலகில் பிறந்த உயிர்களுக்குத் தாயே முதற் கடவுள் என்பதை வற்புறுத்துகின்றார். ஒரு வேளை அவர் சொற்குப் பிறகுதான் அறிஞர்கள் வள்ளுவர்தம் '**ஆதி பகவன்**' என்ற சொற்றொடருக்குத் 'தாய் தந்தையர்' என்ற பொருள் கண்டார்களோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

'**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**,' என்பதும், '**தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை**,' என்பதும் இந்த உண்மையை வற்புறுத்துவன அல்லவோ? எனவே, அவர் காலத்தில் வாழ்ந்த சில ஒழுக்கங்கெட்ட பெண்களை எச்சரித்த போதிலும், அவர் தாய்மையின் பெருமையை இறையின் பெருமையினும் மேலாக வைத்துப் பேசும் அந்தப் பெருநெறி என்றென்றும் போற்றப் பட வேண்டுவதொன்றாகும்.

பெண்கள் தங்களைக் காத்துக்கொள்ளும் பெருமையை அவர் பேசாது விடவில்லை. 'காவல்தானே பாவையர்க் கழகு,' என்ற சொற்கள் எவ்வளவு அழகாகப் பெண்ணுக்குத் தற்காப்பு இன்றியமையாதது என்பதை விளக்குகின்றன!

> **'சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும்? மகளிர்**
> **நிறைகாக்கும் காப்பே தலை.'**

என்ற திருக்குறள், எவ்வளவு குறைந்த அடியில் நிறைந்த அளவில் ஔவையாரால் பேசப்படுகின்றது! தனது கற்பில் குறைவு வராது காத்து, கொண்ட கணவனைப் பேணி, மனைக்கணிகலனும் மக்களைப் பெற்று, ஒல்லும் வகையான் உற்றார்க்கும் மற்றார்க்கும் உதவி, உலகம் வாழத் தான் வாழும் இப்பெண் இனத்திற்கு எத்தனை பெருமை! இப் பெருமையைப் போற்றாது நாடுகள் நாகரிகம் பேசி வருகின்றனவே! தாய்மையில் வாழும் தனிப் பெருந் தியாகத்தின் சின்னமாகிய பெண், இடைக்காலத்தில் ஓர் இயந்திரம் போன்று அல்லவா கருதப்பட்டு

வந்தாள்! கடமை உணர்ச்சி கொண்ட அவளை வேலைக் காரியென எண்ணி நடத்தும் கணவர் நிறைந்த காலமல்லவா அது! அது மட்டுமா? கொண்டானை அன்றிப் பிறரை அறியாத பெருங் கற்பின் நெறி தவறாத் தமிழ் நாட்டுப் பெண் இனத்தை உலாக்களில் வலிய அழைத்து, ஊராளுவோனைக் கண்டு உருகுவதாகக் காட்டும் இலக்கியங்கள்தாம் நாட்டில் எத்தனை தோன்ற ஆரம்பித்து விட்டன!

ஒட்டக்கூத்தர் ஏதோ எழுதுகின்றாரே! அதோ அவர் முடித்துவிட்டார் எழுத்தினை! என்ன அது! **மூவர் உலா**வா! ஆம்! விக்கிரமனும், குலோத்துங்கனும், இராசராசனும் தம் அரச வீதியில் பவனிவரும் காட்சியைத்தான் அவர் எழுதியிருக்கிறார். அது பற்றி எழுதினால் யாருக்கும் கவலை இல்லை. ஆனால், அந்த ஊர்ப் பெண்களையெல்லாம் பேதை முதல் பேரிளம் பெண் ஈறாகப் பலவகைப் படுத்தி அம்மன்னரைக் கண்டு கருத்தழிந்து உருத்திரிந்து விட்டதாகஅன்றோ கூறுகின்றார்! பொதுவாகப் பெண்கள் இனத்தையே முதலாகச் சுட்டிக் காட்டிப் பிறகு ஒவ்வொருத்தியாகப் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்று வரிசையாக நிறுத்தி, வகை கெட்டு அவர்கள் வாடுவதாக அவர் குறிக்கின்றாரே! இது பெண் இனத்தை இழிவுப்படுத்துவதன்றி வேறு யாது? அரசனது அந்தப் புரத்திலே உள்ள அரசி அரசனைக் கண்டு கருத்தழிந்தால் நாம் கவலையுற வேண்டுவதில்லை. ஆனால், பவனி விழாவிலே, பத்துப்பேர் இடையில், ஒரு பெண் அரசனைக் கண்டு, தன்னை மறந்து, நிலை மறந்து, கலை மறந்து, கருத்தும் மறந்து நிற்கின்றாள்! இஃது என்ன, கேலிக்கூத்தா, அல்லது கெடுதற் பாட்டா! ஏதோ இலக்கியம் இயற்ற வேண்டும் என்று நினைத்தால், அதற்கெல்லாம் பெண் இனத்தவராகிய நாங்கள்தாமா

அகப்பட்டோம்? சங்ககாலத்தே ஒருவனும் ஒருத்தியு மாகப் பூத்த அந்த இல்லற வாழ்வு பிற்காலத்தில் இவ் வாறு பிரிக்கப்படுவானேன்? இல்லாத பிரபந்தங்களை உண்டாக்கி, அவற்றைத் தொண்ணூற்ருறு என வகைப் படுத்தி, அவற்றை அழகுறப்பாடுவதற்காக எங்கள் பெண் இனத்தைப் பணயம் வைத்துப் பாடுவது என்ருல், அதை நாங்கள் எப்படிப் பொறுக்க முடியும்? என்ருலும், இன்றளவும் அது போன்ற இலக்கியங்கள் வாழ்ந்துதாமே வழிகின்றன? எப்படி எப்படிப் பெண் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்ட வேண்டுமோ, அப் படியெல்லாம் சொல்லோவியம் காட்ட இந்தப் புலவர் கள் கற்றுத் தீட்டி ஏனோ எங்கள் இனத்தை இழிவுப் படுத்துகின்ருர்கள்! இன்றைய நாகரிக உலகில் படக் காட்சி என்று பாவையரைப் பல்வேறு கோணங்களில் படம் பிடித்துச் சுவரில் ஒட்டிப் பொருள் பறிக்கும் இந்த வழிக்கும், அன்று உலாவெனும் இலக்கியத்தின் சொல் லோவியத்தில் பல கோணங்களில் படம் பிடித்துக் காட்டி யதற்கும் என்ன வேறுபாடு? அழகனையினும் ஏறிட்டுப் பார்க்காத இல்வாழ்வுச் செல்வியர் எங்கே! நாட்டு மன்னன் உலா வருவதைக் கண்டு கருத்தழியும் காரிகை யர் எங்கே! ஆம்! ஒரு வேளை அவர்களைப் பரத்தையர் குலமெனக் கூறலாம்; மணமாகா மங்கையர் என்னலாம். எப்படியிருந்தாலும், ஒருவனும் ஒருத்தியும் காதல் இரு வர் கருத்தொருமித்து ஆதரவுபட்ட அந்த இன்பத்தின் எல்லையை இவர்கள் எட்டிப் பார்க்கவும் வழியற்றவர் களே! அதோ! அந்தக் காட்சியும் மறைகின்றது. சேக்கிழாரும், கம்பரும், ஔவையாரும், கூத்தரும் அதோ, அகன்றுகொண்டிருக்கின்றனர். அடுத்துவரும் காலத்தே தமிழ் நாட்டு அன்னையர் எப்படி வாழ்ந்த னரோ! அதையும் பொறுத்திருந்து காண்போம்,

# பதினேழாம் நூற்றாண்டில் பாவையர் நிலை

ஒரு தலைவன் தலைவியைக் களவு ஒழுக்கத்திற் கலந்து, பின்பு அவர்தம் மணத்துக்குத் தலைவியின் பெற்றோர் இசையாத காரணத்தால் அவன் அவளை உடன் கொண்டு செல்ல விரும்புகிறான். தலைவியும், 'கொண்டானிற் றுன்னிய கேளிர் பிறர் இல்லை,' என்பதை உணர்ந்து, பிறந்த மனையையும், ஆடிடங்களையும், அருமைத் தோழியரையும் விட்டுப் பிரிய உடன்படு கின்றாள். உடன்போக்கு நிகழ்கின்றது; சுரத்திடைச் செல்கின்றார்கள் அவர்கள். தன் மகளைக் காணாது அலமந்த செவிலி, அவர்கள் சென்ற திசை நோக்கித் தானும் தேடிச் செல்கின்றாள்; நெடுநேரம் நடந்து விட்டாள். களைப்பு மேலிடுகிறது. அதே வேளையில் ஒரு கன்னியும் ஒரு காளையும் தனக்கு எதிரில் வரக்கண்டாள்; ஒரு வேளை தன் மகளுடன் மருமகன்தான் திரும்பி வந்து விட்டாரோ என்று எண்ணினாள். ஆனால்,

அருகில் வரவர அவர்கள் யாரோ வேற்று மக்கள் என்பது தெரிந்தது. என்ருலும், அவர்கள் எதிர்த்திசையிலிருந்து வருவதால் அவர்கள் ஒரு வேளை தன் மகளையும் மருமகனையும் கண்டிருக்கக் கூடும் என எண்ணுகிருள். 'நும்போல் இளையர் இருவரைக் கண்டீர்களோ?' என்று கேட்கின்ருள் செவிலி. தலைவன் பதில் சொல்லுகின்ருன்; தான் ஓர் ஆடவனைக் கண்டதாகச் சொல்லுகிருன். அவனுக்கு அயலில் இருந்தவர் யார் என்பதை அவனல் சொல்ல முடியவில்லை. அவன் பேராண்மை, எதிரில் வந்த காளையை நோக்கி நின்றதன்றி, அவன் மனைவியாகிய பெண்ணை நோக்கவில்லை. ஒரு வேளை அவன் காதலி அந்தப்பெண்ணைப் பார்த்திருக்கக் கூடும். ஆகவே, அவள் அறிவாள் அயலில் சென்ற பெண்ணின் தன்மையை. இக்குறிப்புத் தோன்ற அவன் அவளை நோக்கினன். தமிழன் மறந்தும் மற்றவன் மனைவியை நோக்காத பேராண்மை அந்தச் சங்க காலத்திலிருந்து மாறுபாடுகள் உண்டான இடைக்காலம் வரையில் எவ்வாறு பேசப்பட்டு வந்தது என்பதை நோக்கப் பெண்மை பெருமகிழ்ச்சியன்ருே கொள்ள வேண்டியுள்ளது!

**'மீண்டாரென உவந்தேன் கண்டுநும்மை; இம்மேதகவே**
**பூண்டார் இருவர்முன் போயினரோ?' 'புலியூர்**
**[எனை நின்று**
**ஆண்டான் அருவரை ஆளியன் ஞனைக்கண் டேன்;**
**அயலே**
**தூண்டா விளக்கனை யாய்! என்னை யோ அன்னை**
**சொல்லியதே?'**

என்ற மணிமொழியாரின் திருக்கோவைப் பாட்டும்;

**'யான் கண்ட அண்ணலும் என் அருங் காதலின்**
**மான்கண் டனகண் மயிலனை யாளும்' [ஏகியவென்**

என்ற பொய்யா மொழியாரது தஞ்சைவாணன் கோவை அடிகளும் இப்பேரறத்தை எவ்வளவு சிறப்பாக வற்புறுத்

துகின்றன! இந்தப் பேரறம் வளர்ந்த நாட்டிலேதான் உலாக்களும் பிற பிரபந்தங்களும் தோன்ற, பெண்களை அவ்விலக்கியங்களில் வைத்துப் பிழைபட்டவராகப் பேசும் நெறியையும் காண்கின்றோம். 'பெண்மை இன்றேல், இலக்கியம் இன்று,' என்னும் அளவுக்கு வந்த புலவர்கள், அப்பெண்மையின் நிலைமையை இழித்துக் கூறுவானேன்? தற்காத்து வாழும் பெண்ணின் பெருநெறி வாழ்வைப் போற்றுவதை விடுத்து, அவருள் பலபிரிவுகளை ஏற்படுத்திக்கொண்டு, வெற்று இயந்திரங்களென அப்பெண்டிரை இருத்தி, அவரைக் கற்பிழந்தவராகவும், கண்டவரைக் கண்டு காதல் கொண்டு கலங்குபவராகவும் காட்டிக் கொடுமைப்படுத்துவானேன்? எந்நாட்டுக்கும் இல்லாத கற்பின் திட்பமாகிய தமிழ் நாட்டு உரிமைச் சொத்து இவ்வாறு பறிகொள்ளப்படுவானேன்? அவ்வுரிமையைப் பறித்தவர் பிற நாட்டவரல்லரே! இந்தத் தமிழ் மண்ணிற்பிறந்து, இந்தப் பண்பாடுகளை மறவாது கொள்ள வேண்டிய தமிழன்-ஆம்-கலைஞனே பறிக்கின்றான். அதை நினைத்தால்தான் அவலம் பிறக்கிறது!

பிற்காலப் பெரும்புலவர்களெல்லாருங்கூடப் பெண்களை எவ்வளவு இழிவாகப் பேசத் தொடங்கி விட்டார்கள்! விலங்குகளினும் கேடாகவன்றோ பெண்கள் மதிக்கப்படுகின்றார்கள்! பிறநாட்டுக் கொள்கைகள் தமிழ் நாட்டில் அதிகமாகப் பரவியது காரணமோ என்னவோ, தமிழ் நாட்டில் எங்கள் இனத்துக்குப் பெருமை எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாய் இருந்ததோ, அவ்வளவுக் கவ்வளவு இழி நிலைமை அதே நாட்டில் எங்களுக்கு உண்டாகி விட்டது! பல புராணங்களும் பிற இலக்கியங்களும் பிற மொழிகளிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து எழுதப்பட்டன. அவற்றிலெல்லாம் பெண் இனம் பிழைபடத்தான் பேசப்படு

கிறது. அரச அவையில் அரசருடன் ஒருங்கு வீற்றிருந்து அறவுரையும் ஆய்வுரையும் கூறிய அதே பெண் இனம், அரசியற் சூழ்ச்சி ஆய்வுக்கும் பிறவற்றிற்கும் சேர்க்கப்படாத இனம் என்ற அளவில் எழுத்து வளர்ந்து விட்டது. பெண்டிரையும் அஃறிணைப் பொருள்களையும் ஒன்றாக மதிக்கும் அந்த நிலையும் நாட்டில் உண்டாகி விட்டது. நான்காம் ஐந்தாம் நூற்றாண்டுகளிலும் பெண்கள் வெறுக்கப்பட்டார்கள். ஆனால், பிற்காலத்தில் இழித்துப் பேசப்பட்ட அத்தனை கொடுமை அன்று அவர்கள் பெறவில்லையே! அம்மம்ம! எத்தனை வகையான கொடுமைகள்! எண்ணவும் மனம் நாணுகிறதே! எழுதவும் கை கூசுகின்றதே!

**'நுண்ணறி வுடைய ராகி நூலொடு பழகி னாலும்**
**பெண்ணறி வென்ப தெல்லாம் பேதைமைத்து'**

என்றும்.

**'பேதைமை என்பது மாதர்க் கணிகலம்'**

என்றும், பேசும் அளவிற்குத் தமிழ்நாடு முன்னேறி விட்டது! முன்னுள்ள அடிகள் எங்குள்ளவை என்பதை அறியின் மிக வியப்படையத்தான் நேரிடும். **திருவிளையாடல்** ஒரு கதை நூல். அது எங்கிருந்தோ, மொழி பெயர்க்கப்பட்ட நூலாம். அதில் ஒரு பன்றி ஒரு பாண்டிய மன்னனோடு போருக்குப் புறப்படுகின்றதாம். பெண் பன்றியும் உடன் போகின்றதாம். போரில் தோல்வி உண்டாகவே, 'நாம் திரும்பிச் செல்வோம்,' என்றதாம் பெண் பன்றி. அதைக் கேட்ட ஆண் பன்றி கூறிய கூற்றும் அவை. 'பெண் அறிவு பேதைமைத்து ஆதலின், நீ இவ்வாறு பேசினாய்,' என்று ஆண் பன்றி கூறிற்று என்று கூசாது எழுதுகின்றார் **பரஞ்சோதியார்**. இல்லாத ஒன்றை எடுத்துரைத்து எங்களைப் பன்றியாக்கி அங்கும் பெண்ணினத்திற்கு அறிவில்லை என்று கூறத்தானே இந்தக் கதை

எழுந்திருக்க வேண்டும்? பன்றி பேசுவதோ, போருக்குப் பாண்டியனுடன் புறப்படுவதோ உலகம் நகைக்கும் ஒரு செயல். அதற்கெல்லாம் மேலாக, எங்கள் பெண் இனத்தைப் பழிக்கும் அப்பாவலர் செயல் அமைவதை நோக்கப் பிறநாட்டாரெல்லாம் நம்மைக் கண்டு அழுவதா அன்றிச் சிரிப்பதா என்று தானே ஏளனம் செய்வார்கள்? பெண் அறிவைப் பேதைமைப்படுத்தும் பேதைமை என்று நாட்டில் ஆடவர் உள்ளத்தில் குடி கொண்டதோ, அன்று முதலே தமிழ் நாடு அன்னியர் கையிற் சிக்குண்டு அவதிப்பட்டுத்தானே கிடக்கின்றது! அதனாலேதானே இன்றைய சீர்திருத்தக் கவிஞர்,

**'பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு**
**மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே.**

எனக் கூறினர்?

பரத்தையர் குலம் உண்டாக்கப்பட்டதைப் பல இடங்களில் அறிந்தோம். அப்படி அவர்களைத் தமக்குக் களியாட்டப் பொருளாக அமைத்த அதே சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் அப்பெண் இனத்தைப் பழிப்பது காணின் வருத்தம் மிகுகின்றது.

**'செம்மையில் அறம்செய் யாதார் திரவியம்**
**[சிதற வேண்டி**
**நம்மையும் கள்ளும் சூதும் நான்முகன்**
**[படைத்த வாறே.'**

என்று அப்பரத்தையரில் ஒரு தாய் தன் மகளுக்குக் கூறுவதாக உள்ள அடிகள் எழுத்தாலாய அடிகளா! மயிர்க்கால்தோறும் மாட்டி வைத்து மல்லுக்கு இழுக்கும் கூரிய ஊசிகளல்லவோ அவைகள்! கள்ளுக்கும் சூதுக்கும் பெண்மையை ஒப்பிடும் பேடியரும் நாட்டில் வாழ்ந்து தானே இருக்கின்றனர்! திருவள்ளுவர் 'இருமனப் பெண்டிர்' எனச் செயல் வேறுபட்ட ஒரு சிலரைக் கூறி

யதைத் தவறி எண்ணிய இந்தத் தமிழ்ச் சமுதாயம், ஒரு குலத்தையே கள்ளுக்கும் சூதுக்கும் சமமாகக் கூறு மாயின், இது வாழினும் வீழினும் என்! எங்கும் குறையும் குற்றமும் இருப்பது இயற்கை. அது போன்று ஒரு வேளை பெண் இனத்தில் 'இருமனப் பெண்டிர்' ஒரு சிலர் இருந்திருப்பர். அவர்களைப் பற்றிய எண்ணம் வள்ளுவருக்கு எழுந்திருக்கும். ஆகவே அவர்,

> 'இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
> திருநீக்கப் பட்டார் தொடர்பு.'

என்று கூறிவிட்டார். ஆனால், அவர்கள் ஒரு சாதியா ராவரோ? ஒரு சாதியில் பிறந்த எல்லோரும் அப்படிப் பட்டவர்களென்று அவர் எங்கே சொன்னார்? இருமனப் பட்ட பெண்டிர் சிலர் என்றால், பலமனப்பட்ட ஆடவர் பலர் இருக்கும் நாட்டில் இதைத் தவறாகக் கருதி ஒரு சமுதாயத்தினை இழிவு படுத்தும் நிலை ஏன் ஏற் பட்டது?

மற்றும், பெண்கள் கொடிய விடத்தைக் காட்டிலும், வேங்கையிலும் இயமன் தூதுவரிலும் மிகக் கொடியவ ராகப் பேசப்படும் கொடுமை நாட்டில் தலைவிரித்தாடிய காலத்தை எண்ணின், அஞ்சவேண்டி உள்ளது!

> 'ஆல கால விடத்தையும் நம்பலாம்
> ஆற்றை யும்பெருங் காற்றையும் நம்பலாம்
> கோல மாமத யானையை நம்பலாம்
> கொல்லும் வேங்கைப் புலியையும் நம்பலாம்
> கால னார்விடு தூதரை நம்பலாம்
> கள்ளர் வேடர் மறவரை நம்பலாம்
> சேலை கட்டிய மாதரை நம்பினால்
> தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே!'

என்ற பாடலும்,

**'நடைகு லுக்கிய முகமி னுக்கிய நகைந கைத்திடு மாதரை நம்பொ ணுதுமெய் நம்பொ ணுதுமெய் நம்பொ ணுதுமெய் [காணுமே.'**

*என்ற அடிகளும் எவற்றை விளக்குகின்றன? தெய்வத் தன்மை வாய்ந்த பெண்மையைப் படுபாதாளத்தில் தள்ளி வைக்கும் பாதகர்தம் வாய்ச்சொற்களல்லவா இவைகள்? கொடியரினும் கொடியவராய் ஏன் பெண்கள் ஆக்கப்பட வேண்டும்? தோற்றம் கருதிக் கொடியர் என்றும் கொடி போன்றார் என்றும் சங்ககாலச் சான் றோரால் பேசப்பட்ட செல்வியர், பிற்காலத்திலே செய லில் கொடியரிற் கொடியராய்ப் பேசப்படுதல் வருந்தத் தகுவதொன்றாகும்! இது போன்று இன்னும் எத்தனை எத்தனை பாடல்கள்!*

*'பார் அனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆரும் துறத்தல் அரிதரிது!' என்ற சிறப்பைப் பெற்றவர் ஒரு பெரியவர். இப் பெயரோடு இருவர் இருந்திருக்க வேண்டும்.* **மும்மணிக்கோவை** *முதலியவற்றைப் பாடிய அந்தப் பெரியவர் எங்கே, எங்கள் இனத்தையே பழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்ட இந்த மனிதர் எங்கே! தம் தாயாரிடம் தளரா அன்புடையவராம் இவர்! அவர்பொருட்டு இறக்கும் வரையில் அருகே இருந்தாராம். இறந்த பிறகு வாழை மட்டைகளை அடுக்கி,*

**'முன்னை இட்டதீ முப்பு ரத்திலே
பின்னை இட்டதீ தென்னி லங்கையில்
அன்னை இட்டதீ அடிவ யிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே.'**

*என்று பாடினாராம். சிதை பற்றியதாம். அது பற்றி யதோ இல்லையோ, அன்று பற்றிய பெண்கள் உள்ளத் துப் பெருந்தீ இன்றும் அணைந்தபாடில்லையே! தாய்மை*

யைப் போற்றிய அவர் பெண்மையை பழித்தார் என்றால், அது முன்னுக்குப்பின் முரண் தானே? என்றாலும், அவர் பாடிய பாடல்கள் அத்தனையும் எங்களைச் சந்தியில் இழுத்து வைக்கத்தானே அமைகின்றன? அத்தனை கொடுமை நாங்கள் அவருக்கு என்ன செய்தோம்? வழி வழியாக வரும் எங்கள் இனத்தை ஏன் அவர் இவ்வாறு பழித்துரைத்தார்? அவருடைய பாடல்களைச் சொல்லாது செல்லலாம் என்றாலும், அவருடைய கொடுமையைக் கண்டும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. எந்தப் பெண்மையால் அவர் பெற்றெடுக்கப்பட்டு, பாலூட்டிச் சீராட்டப்பெற்று வளர்ந்து, எந்தப் பெண்மையை எண்ணி எண்ணி ஏங்கினாரோ, அந்தப் பெண்மையைப் பற்றியே அவர் பேசுவதை அவர் வாக்காலேயே கேளுங்கள்; கேட்டுச் சரிதானா என்று சொல்லுங்கள்.

**'பெண்ணாகியதொரு மாயப் பிசாசம் பிடித்திட்டெனைக்**
**கண்ணால் மயக்கி முலையால் வெருட்டிக் கடிதடத்துப்**
**புண்ணாங் குழியிடைத் தள்ளிஎன் போதப் பொருள்பறிக்க**
**எண்ணாதுனைமறந் தேன்இறை வா!கச்சி ஏகம்பனே!'**

என்பதும்,

**'நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம் தேடி**
**நலமொன்றும் அறியாத நாரியரைக் கூடிப்**
**பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்**
**புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்!**

என்பதும், இன்னும் இவை போன்ற பாடல்களும் அவர் பாடியனவாக அன்றோ உள்ளன? ஏன் இவ்வளவு கொடுமை எங்களினத்தின்மேல்? எப்போதோ ஒரு வேளை யாரையோ நினைத்துக் கூப்பிட்டு, அவள் அருகில் வாராக் காரணத்தால், பின்பு, 'உன்னைத் தேடினவர் போய்விட்டார்,' என்று பாடி அதனால் உண்டான ஆயாசம் தீரத்தான் இப்படிப் பழித்துரைத்தாரா எங்கள் பெண் இனத்தை?

இவர் மட்டுமன்றி இவர் மைந்தர் என்று பேசப் படுகின்ற அந்த அருணகிரி நாதர்தான் என்ன சாதித்து விட்டார்? அவரும் எங்கள் பெண் இனத்தைப் பழித்துப் பேசும் கொடுமையை எழுதவும் முடியுமோ! அவர் இளமையில் எப்படியோ இருந்து பிறகுதான் துறவிய ரானார் என்பது கதை. ஆகவே, எப்படியோ ஆடிக்கெட்டு, பின்னே அறிவு வந்த பிறகு தம் கேட்டுக்கெல்லாம் தாமே காரணர் என்பதை மறந்து, மற்றவர்மேல் சாமர்த்திய மாகப் பழியைச் சுமத்தித் தாம் என்றென்றும் உலகில் நற்பெயரோடு வாழலாம் என்ற நினைப்பாலேதான் இப் படிப் பாடியிருப்பரோ என்றுதானே நினைக்க வேண்டி யுள்ளது.

என்றாலும், இதுபோன்ற வாழ்வோடு தொடர்பற்ற இலக்கியங்கள் நிச்சயம் வழக்கிழந்து ஒழிவதையும் உலகம் கண்டுகொண்டுதான் இருக்கிறது. பட்டினத்தார் தம் பண்டாரப் பாட்டு இன்று எங்கே பேசப்படுகின்றது? பாவையரைப் பழிக்கும் அந்தப் பழிகாரப் பாட்டு ஏன் நாட்டில் அதிகமாக வழங்கப்படுவதில்லை? எப்போதோ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், எங்கோ மூலை முடுக்குகளிலெல்லாம் பாடப்பட்ட அந்தப் பழம் பாடல் கள் இன்று நாட்டில் ஆட்சி செலுத்துவதைப் போன்று இந்தப்பாடல்கள் ஏன் இடம்பெற்று ஆட்சிசெய்வதில்லை? எந்த இலக்கியமும் மக்கள் வாழ்வோடு பிணையாததாகி வேறுபட்டு, ஏதோ இல்லாததையும் பொல்லாததையும் கற்பனை செய்துகொண்டு செல்லுமேயானால், அந்த இலக் கியம் நிச்சயம் காலவழக்கில் அழிந்தொழிதல் ஒருதலை. உலகமும், உயிரும், ஒன்றான இறைவனும் உண்டு என்ற உணர்வுடன் உலக இன்பம் துய்த்து, மக்களை எந்த வேறுபாடும் கருதாது மக்களாகவே மதித்துப் போற்றி வாழும் எந்த இலக்கியமும் என்றென்றும் வாழும். கடவுள் உணர்வும் சமயநெறியும் போற்றப்பட்ட அந்தச்

சங்க காலத்தே மக்களொடு கலந்து வாழும் மனையறத்தையும் நன்கு ஓம்பி, மனையறமே பிறவறங்களுக்கு வழி காட்டியாக அமைவது என்பதை விளக்கி அன்றைய புலவர்கள் இலக்கியங்களை வாழ்வோடு கலந்து கலந்து இயற்றினார்கள். அவை இன்றும் - இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்தும்-வாழ்கின்றன. என்றும் வாழவும் வாழும். ஆனால், அதற்கு நேர்மாறாக, காணாத ஒன்றைக் கற்பனை செய்துகொண்டு கண்டவற்றை மித்தை என்று பேசி மாறுபட்ட வாழ்வு நடத்தி, அந்த மாறுபாட்டையெல்லாம் மறைக்கும் வழிகளில் வாய்க்கு வந்தவற்றையெல்லாம் பாட்டாகப்பாடும் பிற்காலப் பாடல்களெல்லாம் காலமெனும் கடும் புனலில் மூழ்கடிக்கப்படும். இருநூறு ஆண்டுகளுக்குள் அவை இல்லாது ஒழியும் என்பது ஒரு தலை. 'வாழ்க வாழ்க்கை இலக்கியம்!' என்று வாழ்த்துகின்றேன்!

ஒரு புறத்தே இந்த முறையில் பெண்களை வைதும் வாட்டியும் வரும் அதே நேரத்தில், தமிழ் நாட்டில் தெய்வங்களையெல்லாம் பெண்களாக்கிக் காணும் காட்சியுந்தான் புலப்படுகிறது. படிப்பைக் கலைமகளாக்கியும், செல்வத்தை அலைமகளாக்கியும் போற்றக் காண்கிறோம் தமிழ் நாட்டில். இன்னும் வீர இலக்குமி முதலிய இலக்குமியர் எண்மரை ஏற்படுத்தி வணங்குவதும், நிலத்தை 'நிலமகள்' என்று போற்றி வணங்குவதும் நாட்டு வழக்கங்களாய் அமைந்துள்ளதை எண்ண வியப்புத்தான் மேலிடுகிறது. பெண்களைப் பேயென்றும் நாயென்றும் பேசிப் பழித்த அதே சமுதாயம், தெய்வங்களையும், பொன்னையும், பொருளையும், கல்வியையும் வீரத்தையும் பெண் உருவங்களாகக் கண்டு போற்றும் தன்மை எவருக்குத்தான் வியப்பை உண்டாக்காது!

**'வெண்டா மரைக்கன்றி நின்பதம் தாங்களென் வெள்ளை [உள்ளத்**
**தண்டாமரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்**
**துண்டான் உறங்க ஒழித்தான்பித் தாகஉண் டாக்கும் [வண்ணம்**
**கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே !**

என்று குமரகுருபரர் கலைச்செல்வியின் திருமுன் நின்று வேண்டும்போது, 'தமிழர் பெண் இனத்திற்கு எவ்வளவு பெருமை தந்து போற்றுகின்றனர்!' என்றல்லவா எண்ணத் தோன்றுகின்றது? வாழ்வுக்குத் தேவையான பொருள்களிலெல்லாம் பெண் தன்மையினைக் கண்டு அப்பெண் தன்மையினைப் போற்றும் முறையில் தமிழ் நாட்டுப் பெண்களுக்கே பெரிய ஏற்றம் தருகின்றவர்கள் அந்நாட்டு மக்கள் என்றுதானே அயலவர் எண்ணுவர்! ஆனால், அதே வேளையில் அந்தப் பட்டினத்தார் பாடல்களை நினைத்தால்.........!

மற்றும், கால வேகத்தில் எத்தனையோ இலக்கண நூல்கள் உண்டாகின்றன. இலக்கணத்திற்கெல்லாம் இலக்கியம் கற்பிக்க முற்படுகின்றார்கள் புலவர்கள். அந்த இலக்கியமெல்லால் அழகும் செறிவும் அமைந்தனவாகக் காணவேண்டுமென்பது அவர் தம் அவா! அதற்காகவும் இந்தப் பெண்ணினந்தான் முன்வந்து நிற்கின்றது. பெண்ணை யார் வேண்டுமானாலும், எந்த வகையிலானாலும் பேசலாம் எழுதலாம் என்ற வரையறை யில்லாக் காலமாகத்தான் அது இருக்க வேண்டும். இல்லையேல், இப்படி எடுத்ததற்கெல்லாம் பெண்ணைப் பற்றிப் பாடி உதாரணம் காட்ட வருவார்களா? **தண்டியலங்காரம்** காலத்தால் பிந்திய ஒரு நூல். **தொல்காப்பியம்** உவமம் என்னும் ஒரே அணியைக்கூற, அதைத் தம் மனம்போன வகையில் பெருக்கிக் கொண்டு, அலங்கார சாத்திரமாக்கினர் பின் வந்தவர். அந்த அலங்காரங்களுக்கு

வருகின்ற அத்தனை மேற்கோட் பாடல்களும் எங்களைப் பற்றித்தானா இருக்க வேண்டும்? கண்டதும் காணுததுமாக எங்கள் ஒவ்வோர் அங்க அமைப்பையும் எப்படி எப்படிப் பேசுகிறது நெஞ்சில் ஈரமற்ற வஞ்ச ஆடவர் கூட்டம்! தட்டிக் கேட்க ஆள் இல்லையானால், இப்படி விருப்பம் போல் மனோவேகத் தேர் ஏறி எங்கள் மங்கையர்தம் மாண்பையும் பிறவற்றையும் ஏன் குறைக்க வேண்டும் அவர்கள்?

இதோ மற்றொரு காட்சியும் கண்முன் தெரிகின்றது. சிவப்பிரகாசர் போன்ற பெருந்துறவிகளும், தாங்கள் பாடும் பாடல்களை மகடூஉ முன்னிலையாகப் பாடியிருக்கின்றனரே! பெண்களைப் பற்பல வகையாக விளித்து 'இதைக் கேள், அதைக் கேள்' என்று வற்புறுத்தும் வகையிலன்றோ அவர்தம் பாடல்கள் அமைகின்றன? ஏன் அவர்கள் பெண்களை முன்னிலைப்படுத்திப் பாட வேண்டும்? பெண் இனத்துக்கு ஏற்றம் தரவா? அப்படியானால் நல்ல முறையில் அதை ஏற்க நாங்கள் முன்னிற்போம். ஆனால், பின்னாளில் ஒருவர், 'பெண்களுக்கு இயல்பாக அறியும் அறிவு இன்மையானும், மற்றவர் சொல்லக் கேட்டுத்தான் புரிந்துகொள்ள முடியும் என்ற நிலையிருப்பதனுந்தான் சிவப்பிரகாசர் போன்ற பெருந் துறவியரெல்லாருங்கூடப் பெண்களை முன்னிலையாக்கி, அவர்களுக்கு விளங்குமாறு கூறுகின்றனர்,' என எழுதினால் என்ன செய்வது என்பதை நினைக்கும் போதுதான் நடுங்க வேண்டியுள்ளது! துறவு மனம் படைத்த தூய உள்ளமுடைய பல அறிஞர்கள்கூடத் தாங்கள் எழுதும் தலபுராணங்களிலும், பிற இலக்கியங்களிலும் பெண்களைப் பற்றி பேசாதிருந்ததில்லையே! பெண்ணை, மாயை என்றும், 'பேயின் மாற்று வடிவம்' என்றுங் கூடச் சில துறவிகள் பேசுகின்றார்களே! அவற்றிற்கெல்லாம் காரணம் அக்காலத்தில் அவர்களைத் தடுத்து

அறமுரைக்கும் பெண் புலவர் இல்லாததே என் எண்ணு கின்றேன்.

ஆம்! சங்ககாலத்து ஔவையும் பிறரும் இருந்தது போன்றும், பின் காலத்து ஓர் ஔவை வாழ்ந்தது போன்றும், அக்காலத்தும் ஓர் ஔவை வாழ்ந்திருந் தால், இத்தனைக் கொடிய அம்புகள் எங்கள் மேல் எய்யப்பட்டிருக்கமாட்டா. எப்படி ஒரு பெண் புலவர் முன்னுக்குவர முடியும் இவர்களைப் போன்ற கொடி யர்கள் இடையிலே? தமிழ் நாட்டு வரலாற்றிலேயே பெண்புலவரற்ற காலமல்லவா அது? பெண் அடிமையை நிலை நாட்டி வேரூன்றச் செய்த கால மல்லவா அது? நல்ல வேளை அந்தக் கொடுங்காலம் அகன்றதே!

ஆனால், அதே நிலையில் உலகத்தின் பிற அரங்கங் களிலே பெண்கள் எவ்வாறு நடத்தப் படுகின்றார்கள் என்பதைக் காணும் வாய்ப்பினைப் பெற்ற நமக்கு அந்தக் காட்சிகள் ஒருவாறு ஆறுதல் தருகின்றன. ஆங்கில நாட்டிலே அந்தக் காலத்து நாட்டு நடப்பையும் பிறவற்றையும் உள்ளடக்கியே பேராசிரியன் செகப் பிரியன் (Shakespeare) எழுதியவைதாமே அவன் நாடகங் கள் அத்தனையும்? அவற்றுள் அவன் பெண்களுக்குத் தரும் ஏற்றமும் தோற்றமும் அறியின் மனமகிழ்கின்றது! இங்கே பெண்டிரைப் பேயெனப் போற்றும் புலவர்கள் வாழ்ந்த அந்நாளிலே, அங்கே பெண்ணினம் போற்றப் பட வேண்டிய வகையில் வைத்துப் போற்றும் நிலை கண்டு இரண்டிடத்துக்கும் உள்ள வேறுபாட்டை எண்ணாதிருக்க முடியவில்லையே! பலப்பல நாகரிகங் களும், கலாசாரங்களும், பிறவும் நாட்டில் குடி புகுந்த போதிலும், தமிழ் நாட்டுப் பெண்மை தன் நிலை கெடாது தான் வாழ்ந்து வந்துள்ளது. ஆயினும், அவருடன்

பிறந்த அண்ணன் தம்பியரே துறவு மனப்பான்மையில் கூறிய அந்தக்கொடுஞ்சொற்கள்தாம் அவர்தம் நிலையைத் தாழ்த்தின. எனினும், வரும் காலமெல்லாம் நல்ல காலமாக வாராதா என்ற எண்ணத்தாலேதான் தமிழ்ப் பெண் ஆற்றியிருக்கின்ருள்! அதோ! அவளது அமைதியோடு அறிவும் பொருந்திய முகந்தானே எனக்கு ஆறுதல் தருகின்றது!

# இருபதாம் நூற்ருண்டின் தொடக்கம்

'நோய்கொண்டா லும்கொள்ளலாம் நூறு வயதளவும்
பேய்கொண்டாலும் கொள்ளலாம் பெண்கொள்ள
[லாகாதே!'

என்று பாடினவன் யாரோ ஒரு காமப்பித்தனுகத்தான் இருக்க வேண்டும். கண்டவரோடு காமச் சேற்றில் புரண்டு அதன் பயனை அனுபவித்தவனே இப்படிப் பாட முடியும். பெண்மையையும் தாய்மையையும் உச்சியில் வைத்துப் போற்றிய ஒப்பற்ற தமிழ் நாட்டில் ஒருவன் இப்படிப் பாடத் தொடங்கினன் என்ருல், அவனை மனிதன் என்று சொல்ல முடியுமோ? தமிழ் நாட்டில் பெண்கள் நிலை மிகத் தாழ்ந்திருந்தது என்ருல், அக்காலம் சென்ற இரண்டொரு நூற்ருண்டுகள் என்று தானே சொல்ல வேண்டும்? எங்கோ இரண்டொரு பெண்மணிகள் தமிழ் நாட்டிலும், இந்தியமண்ணிலும்

வீரமும் தயையும் கொண்டு பேரும் புகழும் பெற்று விளங்கி வந்தார்கள் என்றாலும், பெரும்பாலோர் கண்மூடி வழக்கங்களில் காலம் கழிக்கத்தான் செய்தார்கள். கருத்தொருமித்த காதலனைக் கணவனாகப் பெற்றுக் காரிகையார் வாழ்ந்த நாட்டில், பெற்றோர் பார்த்து மணம் செய்துகொடுக்கும் வழக்கம் குடியேறிவிட்டது. மங்கையர் கற்புப் பொற்புடன் விளங்கிய நாட்டில், கற்புத் தெய்வங்கள் பல வாழ்ந்த தமிழ் நாட்டில், பிற நாட்டுப் பெண் தெய்வங்கள் குடிபுகுந்தன. தமிழ் நாட்டின் முழுப்பகுதியில் அல்லாவிட்டாலும், ஒரு சில பகுதிகளிலாயினும் எப்படி இந்தத் துரோபதியின் கோயில் இடம் பெற்றது என்று எண்ணும் போது வருந்தாதிருக்க முடியவில்லை. இலக்கிய நெறியில் வட நாட்டு இருபெருங் காவியங்கள் இங்குக் குடியேறின. ஒன்று, 'இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடாது' வாழ்ந்த உயர்ந்த வாழ்வின் இலட்சியம் கொண்ட இராமன் வரலாறு. மற்றொன்று, ஐவருக்கும் மனைவியாகி, மற்றொருவனையும் மனத்தால் நினைத்ததாகக் கூறப்படும் துரோபதியின் கதையான பாரதம். துரோபதி இங்குத் தெய்வமாகப் போற்றப்படுகின்றாள் என்றால், அது தமிழ் நாட்டுப் பெண் குலத்துக்கே வரும் இழிவுதானே? பின்பு எப்படி இக்கண்மூடி வழக்கத்தைத் தமிழ் நாட்டு மக்கள் மேற்கொண்டார்கள்? வெளி நாட்டான் ஒருவன் இந்த வழிபாட்டைக் கண்டால், தமிழ் நாட்டுப் பெண்கள் எல்லாம் இப்படிப் பலரை மணக்கும் வழக்கத்தாலேதான் அவளை வணங்குகின்றார்களோ என எண்ண மாட்டானா? ஆனால், அது உண்மையாகுமா? 'உயிரினும் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று,' என்று போற்றிய—போற்றி வரும்—தமிழ் நாட்டில், எப்படி இந்தப் புதுப் பத்தினியின் வழிபாடு குடி புகுந்தது?

ஆம் ; ஆய்ந்தால் ஒருவாறு காரணம் உருவாகின்றது. நம்மை அக்காரணம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அழைத்துச் செல்கிறது, **சேரன் செங்குட்டுவன்** அன்று கண்ணகிக்குச் செய்த கோயிலே இன்று தமிழ் நாட்டின் பல பகுதிகளில் துரோபதிக் கோயிலாக மாறியிருக்கின்றது என்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.

**'எந்நாட் டவரும் இமய வரம்பன்**
**நன்னாட் செய்த நாளணி வேள்வியில்**
**வந்தீ கென்றே வணங்கினர் வேண்டத்**
**தந்தேன் வரமென் றெழுந்த தொருகுரல்.'**

என்ற **இளங்கோவடிகளின்** வாக்கின் மூலம் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் பத்தினித் தெய்வமாகிய கண்ணகியின் வழிபாடு பரவிற்றென்பதை அறியலாம். அது காலப் போக்கில் பிறர் கலப்புக் காரணமாக மாறியிருக்கின்றது. அங்கியங்கடவுள் அவள் ஆணை வழி நல்லாரை விட்டு, அல்லாரைச் சுட்டு, மதுரையைப் பாழ்படுத்திய வரலாறே நெருப்பு மிதிவிழா. அன்றேல், துரோபதிக்கும் தீ மிதித்தற்கும் தொடர்பு என்ன ? அந்தத் துரோபதி பிறந்த நாட்டிலோ, புகுந்து வாழ்ந்த நாட்டிலோ அவருக்குக் கோயிலும் பூசையும் இல்லாத போது இங்குமட்டும் இந்த நிலை எப்படி வந்தது? கண்ணகியைத் துரோபதியாக்கித் தமிழ் நாட்டுப் பெண்ணினத்தைத் தாழ்த்த வந்த ஒரு கொடுமை அது. கற்பிலும், காதலிலும், உரிமையிலும், உயர்நிலையிலும் தருக்கி வாழ்ந்த தமிழ் நாட்டுப் பெண்மைக்கே பலர் கேடு சூழ முயன்றனர். தமிழ் நாடு இன்று தனியாய் இல்லை; சில நூற்றாண்டுகளாகவே அரசியலாலும் பிறவற்றாலும் பரந்த பாரதத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது. ஆகவே, பல நாகரிகங்கள், கொள்கைகள், கருத்துக்கள் இங்கே கால்கொள்ள ஆரம்பித்தன. அவற்றுள் பெண்ணடிமையும் ஒன்று போலும்! விலங்கினும் கீழாகப்

பெண்மையைப் பேசி, மாட்டினை விற்பதுபோல விலைக்கு விற்கும் கொடிய வழக்கம் இங்குக் குடியேறியதைக் காண யார்தான் வருந்தாதிருக்க முடியும்! 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு?' என்று பெண்களே தங்களைத் தாழ்த்திக்கொள்ளும் அளவுக்குத் தாழ்ந்த மனப்பான்மை நாட்டில் தலைவிரித் தாடுகிறதே! பெண்கள் தங்களையே இப்படித் தாழ்த்திக்கொள்ளும் ஒரு கயமை வேறு எங்கேனும் காணக்கூடிய ஒன்றோ?

எங்கோ தமிழ் நாட்டு மூலை முடுக்குக்களில் இரண்டொரு பெண்மணிகள் வீரப்பெண்களாயும், வெற்றிச் செல்வியராயும் விளங்கியிருந்தார்கள் என்பதும், அன்று வந்த 'கும்பினி' ஆட்சியை ஓட்டும் வகையில் உணர்ச்சியாளராய் இருந்தனர் என்பதும் மறுக்க முடியாத உண்மையாயினும், பொதுவாகத் தமிழ் நாட்டுப் பெண் இனம் பெட்டிப்பாம்பென அடக்கப்பட்ட இனமாகி விட்டது என்பது உண்மைதானே? அவர்தம் உரிமை வாழ்வு முடிந்து எத்தனையோ நூற்றாண்டுகளாயினும், அந்த அடிமை வாழ்வின் உச்சநிலையில் அவர்கள் சென்ற நூற்றாண்டின் இறுதியில்—ஏன் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில்—வாழ்ந்தார்கள் என்பதை யார் மறுக்க முடியும்? வையத்தை வாழ வைக்க வந்த தமிழ் நாட்டுப் பெண்ணினம், இத்தகைய இருட்டுலகில் தள்ளப்பட்டிருப்பதை நீக்க வழி இல்லையா? 'உரிமைச் சூரியன் என்று தோன்றுவான்!' என ஏங்கித் தவிக்கும் அந்த மகளிர் குரல் காதில் விழுகின்றது. அவர்தம் வாட்டமும் வருத்தமும் போக்கக் கூடிய ஒரு புத்துலகம் காண வேண்டும் என்ற எண்ணம் நாட்டில் தோன்ற வேண்டும். தோன்றுமா?

ஆ! அதோ தோன்றுகின்றதே ஓர் உதய சூரியன்! பேரொளியோடு—சீர்திருத்த நல்லொளியோடு—பெண்மை இனத்தை வாழவைக்கும் பிழம்பென அதோ தோன்று

கின்றதே! அந்த உருவம் யாது? யாருடைய ஒளி உருவம் அது? ஆகா! பாரதியாரல்லவர் அவர்? ஆம்! அவரே தான். 'சரி; விடிவெள்ளி - அன்றன்று - இளஞாயிறு தோன்றிற்று! இனி அஞ்ச வேண்டுவதில்லை!' என்று பேசும் பெண்டிர்தம் ஒலி இதோ கேட்கின்றதே! ஆகா! வீழ்ந்த பெண்ணினத்தை வீறுகொண்டெழச் செய்த பெருமை இந்த நூற்றாண்டின் தொடக்கத்தே வாழ்ந்த பாரதியாருக்குத்தானே உண்டு? உலகெல்லாம் உள்ள பெண்கள் இனத்தையும், இங்கு உள்ள பெண்கள் இனத்தையும், தமிழ் நாட்டுப்பெண்கள் பிற நாடுகளுக்கு ஓடிக் கூலி என வாழ்வு நடத்துவதையும் கண்டு கண்டு அவர் உள்ளம் கசிகின்றதே! உலகெலாம் வாழ வேண்டும் என்ற உயரிய நோக்கம் கொண்டுள்ள அந்த உணர் வாளரின் வாயிலிருந்துதான் எத்தனை வெடிகள்—சொற் களாக வெடித்து - வெளி வருகின்றன! தமிழ் நாட்டுத் தாழ்ந்த பெண்மை இனம் எப்படி அவரை உணர்வு குலையச் செய்கிறது! அவர் தமது ஆடவர் சமுதாயம் பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டுப் பெண் சமூகத்துக்குச் செய்து வந்த அத்தனைக் கொடுமைகளையும், வஞ்சனை களையும் தாம் ஒருவரே கழுவாயாக நின்று, கருத்தமைந்த கவி பாடி, அக்கவி வழி நாட்டைத் திருத்த முன்னின்ற நன்மையால் துடைத்துவிட்டாரே! பெண்கள் பேச வழி யற்று, வாய் மூடி மௌனிகளாகி மடிந்த அந்த நிலையிலே, அவரது உணர்வுச் சொற்களே அவர்கள் உறக்கத்தையும் சோர்வையும் போக்கின. ஆகா! தமிழ் நாட்டுப் பெண்மை வாழ அவர் என்னென்ன வழி வகுக்கின்றார்! மானம் கெட்ட ஆடவர் சமூகத்தை நோக்கி அவர் கூறும் அறவுரைகள் எவ்வளவு ஏற்ற முடையன!

**'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்**
**றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்!'**

என்பதும்,

'மாட்டை அடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே
வீட்டினில் நம்மிடம் காட்டவந் தார் அதை
வெட்டிவிட் டோமென்று கும்மியடி !'

என்பதும்,

'கற்பு நிலைஎன்று சொல்லவந் தார் இரு
கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத் திப்பெண்ணைக் கட்டிக்கொ டுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம் !'

என்பதும் பெண்கள் உள்ளத்துக்கு எவ்வளவு ஆறுதலாக அமைகின்றன! வீழ்ந்த பெண்கள் விழிப்படைந்து வாழும் நிலை பெற்றுவிட்டதைக் காண மனத்துக்கு எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகின்றது ! ஆகா! 'சாதம் படைக்கவும் செய்திடுவோம், தெய்வ சாதி படைக்கவும் செய்திடுவோம்!' என்ற போதுதான் நாம் நம்மை அறியாமலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே செல்கிறோமே !

'குவளை உண்கண் குய்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்றல் ஒண்ணுதல் முகனே.'

என்ற குறுந்தொகைப் பாட்டு (167) நினைவுக்கு வருகிறது. 'சாதம் படைக்கவும் செய்திடுவோம்,' என்ற அந்த அடி, தாய்மையின் உணர்ச்சியில் நல்லுணவாக்கிக் கணவனுக்கும் மக்களுக்கும் மற்றவர்களுக்கும் படைப்பதிலன்றோ முகிழ்க்கின்றது !

அந்தப் பழந்தமிழ் நாட்டு நிலையை எண்ணி எண்ணிப் பார்க்கின்றார் பாரதியார். பிறர் மனை நோக்காத பேராண்மை அவர் கண்முன் காட்சி தருகின்றது. 'கற்பு நிலை என்று சொல்ல வந்தார் இரு கட்சிக்கும் அஃது

பொதுவில் வைப்போம்,' என்ற சொற்கள் எழுகின்றன. அது மட்டுமா? இந்த ஆடவர் மனம் போன போக்கெல்லாம் போவதுதானே பெண்மை கெடுவதற்குக் காரணமாகின்றது என்பதை அவர் எழுத மறக்கவில்லை.

'ஆண்களெல்லாம் கற்பைவிட்டுத் தவறு செய்தால்
அப்போது பெண்மையுங்கற் பழிந்தி டாதோ?'

என்று கூறும் சொற்கள் ஆடவர் செவியில் ஏறினாலன்றோ நம் நாட்டுப் பெண்மை உயரும்!

தமிழ் நாட்டு மக்கள் காதலை எவ்வளவு துச்சமாக மதிக்கின்றார்கள் என்பதைக் காண அவர் உள்ளம் கொதிக்கின்றது; சொற்கள் புறப்படுகின்றன;

'காதலினால் மானுடர்க்குக் கலவி யுண்டாம்;
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்;
காதலினால் மானுடர்க்குக் கவலை தீரும்;
கானமுண்டாம், சிற்பமுதற் கலைக ளுண்டாம்;
ஆதலினால், காதல்செய்வீர் உலகத் தீரே!
அஃதன்றோ இவ்வுலகத் தலைமை இன்பம்?
காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்;
கவலைபோம்; அதனாலே மரணம் பொய்யாம்.'

என்பதும்,

'நாடகத்தில் காவியத்தில் காத லென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றா மென்பர்;
ஊடகத்தே வீட்டிலுள்ள கிணற்றோ ரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமு கின்றார்
பாடைகட்டி அதைக்கொல்ல வழிசெய் கின்றார்;
பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க
மூடரெலாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி இடரெய்திக் கெடுக்கின் றாரே!'

என்பதும் காதல் வாழ்வின் ஏற்றத்தையும் அதைக் கெடுக்க எண்ணும் கசடர்தம் மன நிலையையும் எடுத்துக்

காட்டவில்லையா! எத்தனை மாறுபாடு! 'காயமே பொய். காதலே கொடுமை. மாதரே பேய்,' என்று இடைக் காலத்தில் பேசிய அந்தத் தமிழ் நாட்டில்தானே இந்தக் கவிஞரும் தோன்றினர்? என் அருமைத் தமிழ் நாடே! உன்னிடந்தான் எத்தனை மாறுபாடு! நல்ல தலைவர்களையும் அறிஞர்களையும் கொண்ட நீ, ஏன் புல்லர்களையும் புல்லுருவிகளையும் தாங்குகிறாயோ? எனக்குத் தெரியவில்லையே! காதலே தலைமை இன்பமென்றும், அதுவே கவலை தீர்க்கும் மருந்தென்றும் கூறும் பாரதியார் எங்கே, 'பெண் கொள்ளலாகாதே!' என்று பேசிய அந்தப் பொல்லா மொழியார் எங்கே!

பாரதியாரின் வாழ்நாளில் காதலிலே பகட்டான வாழ்வும் பிற மேனாட்டு நாகரிகங்களும் நம் நாட்டில் புகுந்து விட்டனவே! எழுமையும் பிரியாத இன்பக் காதல் வாழ்வில் தமிழ் நாடு இயங்குகிறது. 'இம்மைப் பிறப்பில் பிரியலம்,' என்ற தலைவனை நோக்கி, 'மறுமையிற் பிரிவீரோ?' என்ற குறிப்புடன் நோக்கிக் கண்ணீர் விட்ட காரிகையார் வாழ்ந்த ஒரு காதல் பிணைப்பால் கட்டுண்ட நாடன்றோ அருமைத் தமிழ் நாடு? இந்நாட்டில் கண்டதும் காதலும் நின்றதும் விவாக ரத்தும் செய்து கொள்ளும் மேலை நாட்டுப் பொல்லா நிகழ்ச்சி புக வேண்டுமென நினைத்தால், யார்தான் உருப்படுவர்? காதல் கடையில் வாங்கும் கைச்சரக்கா? கண்டவரோடு கைகோத்துத் திரியும் காட்டு மிராண்டிக் கூட்டத்தில் தமிழ் நாட்டுப் பெண்மை என்றும் சேராதே! ஒருவன் ஒருத்தி என்ற வாழ்விலேதானே அவளது பெருந்தன்மையும் பெருமையும் பிணைந்து நின்றன? அந்த வாழ்வெல்லாம் பாரதியாரின் கண்முன் தெரிகின்றது போலும்! மேலை நாட்டு அநாகரிகமும் அவர் கண்முன் காட்சியளிக்கின்றது. அந்தக் கொடுமையில் அருமைத் தமிழ் நாட்டுப் பெண்ணினம் அழியலாகாது என்று அவர்

எண்ணுகின்ருர். எண்ணத்தின் வழிப் பாட்டுப் புறப் படுகின்றது :

'காதலிலே விடுதலையென் ருங்கோர் கொள்கை
கடுகிவளர்ந் திடுமென்பார் யூரோப் பாவில்
மாதரெலாம் தம்முடைய விருப்பின் வண்ணம்
மனிதருடன் வாழ்ந்திடலாம் என்பார் அன்னோர் ;
பேதமின்றி மிருகங்கள் கலத்தல் போலே
பிரியம்வந்தால் கலந்தன்பு பிரிந்து விட்டால்
வேதனையொன் றில்லாதே பிரிந்து சென்று
வேருெருவன் தனைக்கூட வேண்டு மென்பார்.'

'வீரமிலா மனிதர்சொலும் வார்த்தை கண்டீர் !
விடுதலையாம் காதலெனில் பொய்ம்மைக் காதல் ;
சோரரைப்போல் ஆண்மக்கள் புவியின் மீது
சுவைமிக்க பெண்மைநலம் உண்ணு கின்ருர் ;
காரணந்தான் யாதெனிலோ, ஆண்க ளெல்லாம்
களவின்பம் விரும்புகின்ருர் ; கற்பே மேலென்
றீரமின்றி எப்போதும் உபதே சங்கள்
எடுத்தெடுத்துப் பெண்களிடம் இயம்பு வாரே !'

என்ற பாடல்கள் அவை. இப்பாடல்களில் பாரதியாரின் உள்ளம் எவ்வளவு நன்ருக எடுத்துக் காட்டப் பட்டுள்ளது ! புதுமைப் பெண்ணை வாழ்விக்க வந்த பாரதியார் இன்னும் சில நாள் வாழ்ந்திருப்பாராயின், எத்தனை எத்தனை மாறுதல் காண விழைந்திருப்பார் ! பண்டைச் சங்க காலத்தில் வாழ்ந்த பெண்மையின் பெருமையை மீண்டும் மண்ணில் நிலை நிறுத்த அவர் செய்த முயற்சி பயன் தரத் தொடங்கிவிட்டதே ! முழு வெற்றி பெருவிட்டாலும், இன்று பெற்ற—பெற்று வரும் —இந்தப் பெண்மையின் வெற்றிக்கும் சிறப்புக்கும் அந்தப் பாரதியார்தானே விதை தூவினுர் ? என்றென் றும் பெண்மை அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளதன்ருே ?

# இன்றைய நிலை

எத்தனையோ நூற்றாண்டுகளாக வாழ்ந்த பெண்ணினத்தைக் காட்சியிலும் கருத்திலும் கண்ட எனக்கு இன்றைய பெண்கள் சமுதாயம் கண் எதிரே நிற்கின்றதே! உலகெங்கணும் நாகரிகம் நிறைந்துள்ளது என்று பேசுகின்றோம். அநாகரிகக் காட்டுமிராண்டி வழக்கங்களெல்லாம் கண்மூடி மறைந்து விட்டன என்று பலர் எழுதுகின்றனர்! இந்நிலையில் நம் தமிழ்நாட்டிலும், ஏன் உலக அரங்கிலும் கூட, பெண்கள் நிலை பெரிதும் விளக்கமுற்றதாகக் காணவில்லை! புது உலகம் காண விழைந்த பாரதியார் விரும்பிய அத்தகைய எழுச்சி இன்று நாட்டில் இல்லை. 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும், பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்!' என்று பாடினாரே அது எங்கே இன்று நடைபெறுகின்றது? எங்கோ இரண்டொரு பெண்டிர் சில உயர்ந்த பதவியில் உள்ளனர். ஆம். நமது மத்திய ஆட்சிக்குழுவிலே, ஓர் அம்மையார் அமைச்சராய் அமர்ந்துள்ளது போற்றுதலுக்குரியதுதான்! நமது சென்னை ஆட்சி மன்றத்திற்கூடச் சில ஆண்டுகளுக்கு முன் ஓர் அம்மையார் அமைச்சர்

பதவியில் இருந்தார். அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூது வரும் ஒரு பெண்மணிதான்*. இவையெல்லாம் மகிழ்ச்சிக் குரியனவே! என்றாலும், இன்னும் போதிய அளவு பெண்ணினம் முன்னேறவில்லை என்றுதான் எண்ணுகிறேன். அதுவும் நம் நாட்டுப் பெண்கள் நிலை எத்தனையோ வகையில் தாழ்ந்துதான் உள்ளது!

உலகத்தே நாகரிகம் மிகுந்துள்ள நாடுகள் என்று பேசும் அந்தப் பெரு நாடுகளில் கூட ஒன்றும் பெண்கள் இனம் உயர்ந்ததாகக் காணவில்லை. பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையைவிட அதிகம் என்று பேசும் கணக்குப்படி, ஆட்சியிலும் பிற அலுவல் களிலும் எந்த நாட்டிலும் பெண்கள் முன்னேறவில்லை. அமெரிக்கா தொடங்கி இங்கு நம் நாடு வரை எந்த நாட்டிலே பார்த்தாலும் நூற்றுக்கு இரண்டொரு பெண்கள் தாமே சற்று உயர்ந்தவர்களாகக் காணப்படுகிறார்கள்! நம் நாட்டில் ஆயிரத்துக்கு ஒன்று என்றுகூடச் சொல்லலாம். ஆனால், தலைவர்கள் மட்டும் பெண்கள் முன்னேற வேண்டும் என்று பேசுவதில் தவறுவதில்லை.

ஏதோ கிடைத்த சில புள்ளி விவரங்களைக்கொண்டு பார்ப்போம்: அமெரிக்காவில் (U. S. A.) பாராளுமன்றத்தே 435 உறுப்பினரில் 9 பெண்களே இருக்கின்றார்களாம். அந்த நாட்டிலுள்ள ஆண் பெண் ஊழியர்களுக்கு உழைப்பில் வேறுபடுத்தி ஊதியமும் வேறு வகையாகத் தான் கொடுக்கிறார்களாம்! அந்த நாட்டில் கறுப்புப் பெண்களுக்கென ஒரு நீதி, மற்றவர்களுக்கென வேறு நீதியாம்! போர்க்காலத்தே அவருள் நூற்றுக்கு எண்மர் தான் வேலைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டார்களாம். பிறகு அவர்களும் தள்ளப்பட்டார்களாம். ஆண்களுக்கு நூறு என்றால், பெண்களுக்கு அறுபத்தைந்துதான் கூலிக் கணக்காம்.

* 1955-ல்

பல மேலை நாடுகளில் கறுப்புப் பெண்களை மணந்து கொள்ள வெள்ளையரை அனுமதிப்பதில்லை. காதல் நிறத்தால் தடை செய்யப்படுவதுதான் இந்த இருபதாம் நூற்றாண்டில் காணப்படும் எழிலார் நாகரிகம். ஆங்கில நாட்டிலும் அத்தகைய நிலையேதான், கடந்த நூற்று ஐம்பது ஆண்டுகளாக நம்மை ஆண்டுவந்த நாகரிக நாடாகிய இங்கிலாந்து, நாட்டுப் பாராளு மன்றத்தே 640 உறுப்பினரில் 24 பேர்தான் பெண்களாம். சில இடங்களில் மணமான பெண்கள் அலுவலகங்களில் பணிபுரியத் தடைச் சட்டங்கள் சென்ற சில ஆண்டுகளுக்கு முன் வரையில் இருந்தனவாம். ஆங்கில நாட்டிலேகூடப் பணியாளர் கூலித் துறையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடாம்.

இன்னும் சில நாடுகளில் பெண்கள் நடத்தப்படும் நிலை மிகவும் வேடிக்கையாகவும், கேவலமாகவும் இருக்கிறது. சில நாடுகளில் மணமான பெண்கள், தங்கள் பொருள் பற்றியோ, வேறு உரிமை பற்றியோ வழக்காடவோ, அன்றி வேறு செயலாற்றவோ அவர்தம் கணவன்மார் உத்தரவு இன்றிச் செல்லலாகாதாம். தமக்கெனவே சொந்தமான பொருள்களைக்கூடக் கணவர் உத்திரவின்றிச் செலவிடவோ சேர்த்து வைக்கவோ உரிமை பெறாத பெண்கள் வாழ்கின்றார்களாம். இரண்டொரு நாடுகளில் நூற்றுக்கு இரண்டொருவரே படித்த பெண்டிர் இருக்கின்றனர். எங்கோ ஒரு நாட்டிலேதான் - ஜப்பானாக இருக்கலாம் — ஆண்களைவிடப் பெண்கள் அதிகமாகப் படித்திருக்கிறார்கள். சில அரசாங்கங்களில் பரத்தைமையைப் போற்றி வளர்க்கும் கோரக் காட்சியும் இந்த நாகரிக உலகில் நடந்துகொண்டுதான் வருகிறது.

ஏன், எல்லாவற்றிலும் முன்னேற்றமடைந்த 'எந்த வேறுபாடும் எங்களுக்கிடையில் இல்லை,' என்று பேசும் அந்த ரஷ்ய நாட்டிலேதான் என்ன? பெண்கள் நிலை

அதற்குரிய நிலையில் உயர்ந்துள்ளதா என்று பார்த்தால், இல்லை என்றே சொல்லிவிடலாம். ஏதோ இரண்டொரு துறையில் பிறநாடுகளிலும் சற்று முன்னேறி இருக்கிறது என்று எண்ணலாமே தவிர, அதற்குரிய முழுப் பொருப்பும் பெண்ணினத்துக்கு அளிக்கப்படவில்லை என்பது உறுதி. கைத்தொழிற் பெருக்கத்துக்குப் பேர்போன அந்த நாட்டிலே பணியாற்றுபவரில் நூற்றுக்கு முப்பதுக்குக் குறைவான பெண்களே இன்று வேலை செய்கின்றார்களாம். போர்க்காலத்தே பலர் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கலாம். பொறியாளர்களாகவும் பிற பணியாளர்களாகவும் போர்க்காலத்தில் பலர் சேர்க்கப்பட்டதாக அந்த நாட்டுக் கணக்குச் சான்று தருகின்றது. பல்கலைக் கழகங்களிலும் ஆராய்ச்சி நிலையங்களிலும்கூட ஆடவர் பெண்களின் எண்ணிக்கையிலும் மேம்பட்டுத்தானே இருக்கிறார்கள். உலக எணணிக்கையில் ஆடவரினும் பெண்கள் எண்ணிக்கை அதிகம் என்று கணக்குத் தருகிறார்கள். ஆனால், வாழ்க்கை முறையிலோ, அலுவலங்களிலோ, ஆராய்ச்சிக் கூடங்களிலோ, பிறவருவாய் தரும் துறைகளிலோ பெண்கள் நூற்றுக்கு ஒருவர் இருவர் என்றுகூடக் காணமுடியாத நிலைதானே உலகெங்கணும் காண்கின்றோம்! அவற்றிற்கெல்லாம் அடிப்படையாகிய கல்வியே பெண்களுக்கு நேரிய முறையில் தரப்படுவதில்லையே! 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?' என்ற கொள்கை இன்னும் தமிழ் நாட்டு மூலை முடுக்குக்களிலெல்லாம் இருந்துதானே வருகின்றது! ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னே அரசாங்கம் எடுத்த கணக்கின்படி பார்த்தால், பெண்கள் எவ்வளவு தாழ்ந்த நிலையில் உள்ளார்கள் என்பது புலப்படும்.

| கல்வி நிலையங்கள் | | | படிப்பவர் தொகை | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| கல்லூரிகள் | 339 | 46 | 1, 40,088 | 4, 816 |
| பள்ளிகள் | 184, 173 | 30, 475 | 12,669,618 | 18, 89774 |
| அரசியல் அங்கீகாரம் பெருதவை. | 15, 793 | 4, 259 | 479, 742 | 112, 369 |
| | 2,00, 305 | 34, 780 | 1,32,83,448 | 20, 06953 |

இதுதான் பத்தாண்டுக்கு முன் எடுத்த புள்ளிக் கணக்கு. ஒருவேளை இன்று சற்று உயர்ந்திருக்கலாம். நம் நாட்டில் பெண்களைப் பற்றிய கவலையும் கருத்தும் பொதுமக்களுக்கும் அரசாங்கத்துக்கும் அவ்வளவு அதிகமாக இல்லை என்பதை யார் மறுக்கக் கூடும்? அந்தப் பாழாய்ப் போன பரத்தை முறையைத் தமிழ் நாட்டு அரசாங்கம் ஏதோ சட்டத்தின் மூலம் தடை செய்து விட்டது. அது ஒரு பெருமாருதல்தான். இன்றும் சில நாகரிக நாடுகளிற்கூட இந்தப் பரத்தைமை முறை போற்றி வளர்க்கப்படும்போது, வாழையடி வாழையாக வாழ்ந்த நம் நாட்டில் அது மக்களால் சாய்க்கப்பட்டது என்பதைக் காண யார்தான் மகிழாதிருக்க முடியும் !

மற்றும் அரசாங்கத்தார் இப்போது பெண்களது முன்னேற்றம் கருதும் சங்கங்களை ஊர்தோறும் அமைத்து மகளிரின் முன்னேற்ற வளர்ச்சியில் கருத்திருத்துவதாக அறிகின்றேன். சென்னையில் அதற்கென ஒரு தனி நிலையமும் அதன் பல கிளைகளை நாட்டிலும் நிறுவி, த்க்கவரை அமைத்துப் பெண்கள் முன்னேற்றத்துக்கு நம் நாட்டு அரசாங்கம் பாடு படுவதைக் காண உண்மை

யில் உளம் மகிழாதிருக்க முடியவில்லை. அவர்கள் முன்னேற்றத்திற்கெனத் தனி இதழ்கள், அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கெனப் பல பள்ளிக்கூடங்கள், அவர்களைச் சிறந்தவர்களாக்கப் பல ஆசிரியர்கள் ஆக இந்தப் பணி மிகச் சிறிய அளவில் இன்று இருந்தாலும், நாளடைவில் பெரிதாகிவரும் என்று எண்ண இடமிருக்கிறது. நிலையங்களின் தலைவர்களெல்லாம் அமெரிக்கா முதலிய மேலைநாடுகளுக்குச் சென்று, அங்குப் பெண்கள் போற்றப்படும் நிலையை அறிந்து வரவும் ஆரம்பித்துவிட்டனர் என்ருல், தமிழ் நாட்டுப் பெண்கள் நிலை வருங்காலத்தில் சிறக்கும் என்று எண்ணத்தான் தோன்றுகின்றது. என்ருலும், வளர்ச்சி வளர வேண்டும். பெண்கள் சென்னை போன்ற நகரங்களிலும், சிறுநகரங்களிலும் தாமாகவே அறிவிலும் பிறவற்றிலும் வளர்ந்துதான் வந்திருக்கிருர்கள். அந்தக் கிராமங்களைக் கண்டால்தான் உண்மையில் உளமுருகுகின்றது! நாட்டுக்கு நல்லரசு வந்தாலும் அந்தக் காட்டுமிராண்டிகளென வாழும் நாட்டுப்புரமக்களுக்கு ஏது வளர்ச்சியும் வாழ்வும் என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது. தமிழ் நாட்டுத் தாய்மார் கிராமந்தோறும் இன்னும் வாட்ட நிலையிலேயே உள்ளனர். ஆடவர் ஆதிக்கம் அங்குக் குறைந்தபாடில்லை. மணமுறையும் பிறவும் மட்டுப்படவில்லை. பாரதியாரின் விழிப்புணர்ச்சி இன்று நாட்டில் இல்லை; ஏட்டிலேதான் இருக்கிறது. ஏதோ எட்டயபுரத்தில் ஒரு கோயில் கட்டி அவருக்குக் கைம்மாறு செய்துவிட்டோம் என்று திருப்திப் படுகிருர்கள் அவருடைய அடியவர்கள் என்று பேசிக்கொள்கின்றனர் ? ஆனலும், உண்மையில் அவருக்கு நன்றி செலுத்த வேண்டுமானல், அவர்கள் நகரங்களில் வாழ்வதை விடுத்துக் கிராமங்களுக்குச் செல்ல வேண்டும். உல்லாசக்காரர் பவனியை ஒழித்து, இயன்ருல் கட்டைவண்டியில், அல்லாவிட்டால் கால்

நடையில் சென்று கிராமங்களையும், அவற்றின் மக்களையும், சிறப்பாகப் பெண்களையும் கண்டு அவர்களுக்கு உள்ள குறைகளைப் போக்க வேண்டும். எங்கோ உயர்ந்த ஆட்சிப்பீடத்திலும், செல்வ மாளிகையிலும், சென்னையிலும், டில்லியிலும் உட்கார்ந்து கொண்டு, 'பெண் இனம் முன்னேற வேண்டும்!' என்று பிரசாரம் செய்தல் மட்டும் போதாது. எத்தனை ஊர்களுண்டோ, அத்தனைக்கும் செல்ல வேண்டும். எத்தனை வீடுகளுண்டோ அத்தனையிலும் புகுந்து, அவர்தம் தேவையை அறிந்து, ஒல்லும் வகையான் உதவ வேண்டும். அரசாங்கம் மட்டுமன்றி, தொண்டர் என்ற பெயர் வாங்க ஆசைப் படுபவர்களும் அந்த வழியைத்தான் மேற்கொள்ள வேண்டும்.

தனிப்பட்ட ஒரு சிலர் பெண் கல்வியை வளர்ப்பதற்காகவும், தாழ்ந்த பெண்களை உயர்த்துவதற்காகவும் உழைக்க முன் வந்துள்ளனர். அரசாங்கமும் ஆவன செய்வதாகப் பல அலுவலகங்கள் அமைத்துள்ளது. நாட்டு நல்வாழ்வில் அக்கறை உள்ளவர் அனைவரும் ஒன்று கூடினாலன்றி, எங்கள் பெண்கள் சமூகத்தை என்றும் உயர்த்த முடியாது. 'அவர் தம் நிலை மிகத் தாழ்ந்தது; நாயினும் பேயினும் கேடு கெட்டது,' என்று எவனோ பாடிவைத்துப் போனானே, அந்த நிலையில் இல்லாவிட்டாலும், பிற நாட்டாரை நோக்க, பிற இனத்தவரை நோக்க, தமிழ் இனப் பெண் தாழ்த்தப்பட்டே தான் கிடக்கிறாள். அவளை முன்னேற்றத்திற்குக் கொண்டுவர வேண்டிய கடமை தமிழ் நாட்டு அரசாங்கத்திற்கும் பிற பொது மக்களுக்கும் உரிய ஒன்றாகும்.

சென்னை போன்ற நகரங்களில் பெண்கள் முன்னேற்றம் அடைந்துவிட்டார்கள் என்றாலும், அவர்கள் முன்னேற்றம் நாட்டில் உள்ள பெண்ணினம் அனைத்தையும் தழுவி அவர்களையும் உடன் அழைத்துக்கொண்டு

செல்லும் அந்த வகையினதாக அமையவில்லையே! நாகரிகமடைந்த அந்த நாரிமணிகள், கிராமத்து ஏழைப் பெண்கள் வந்தால் ஏளனமாகப் பார்க்கும் அந்த இழி நிலையிலேதானே இருக்கிறார்கள்? தம் போன்ற பெண்ணினத்தார் இப்படி ஒடுக்கப்பட்ட நிலையில் கிராமங்களில் வாழ்கின்றார் என்பதைக் காணப் பதைப்பு உண்டாவதற்குப் பதில் பரிகாசந்தானே உண்டாகின்றது? 'பஸ்'ஸிலும் படக் காட்சிகளிலும் தங்களது நாகரிக நடை உடைகளுடன் தோன்றும் தோற்றத்துக்கிடையில், அவர்கள் போன்ற கிராமப் பெண்கள் வந்தால் நகர மகளிர் அருவருக்கத்தானே செய்கின்றார்கள்? ஏதோ சென்னை நகர வாழ்க்கையையும், சிங்காரப் போக்கையுந்தானே சில பெண்கள் தங்கள் நாகரிகமாகக் கொள்ளுகின்றார்கள்? ஆடவர் ஒரு புறம் பெண்ணினத்தை மட்டம் தட்ட வழி பார்த்துக் கொண்டிருக்கும்போது, படித்த பெண்கள், எனப் பட்டினத்தில் வாழும் மங்கையர், ஏழைக் கிராமப் பெண்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லையே! இந்த நிலையில் நாட்டுப் பெண்கள் வளர்ச்சி அடைந்துள்ளார்கள் என்று எப்படி கூற முடியும்?

பெண்களுக்குச் சொத்து உரிமையும் பிற உரிமைகளும் வேண்டும் என்று பேசுகின்றனர். பாராளுமன்றத்தார்கூட அந்த முறையில் சட்டங்கள் செய்ய முயல்கின்றனர். ஆனால், அந்த முயற்சிக்குத்தான் எத்தனை முட்டுக்கட்டைகள்! ஆண் பெண் என்ற வேறுபாடு எல்லாவற்றிலும் இருந்தே தீரவெண்டுமென வாதிடும் வழக்கர் நாட்டில் எத்தனை பேர்! ஏன், பெண்கள்கூட அச்சட்டம் வேண்டா என்று பேசத்தானே வருகின்றார்கள்? எத்தனையோ கூட்டங்கள் அச்சட்டத்தை எதிர்த்து நடக்கின்றன. ஆடவரைப் போன்று பெண்டிரும் சொத்துரிமை பெற்றால் வரும் இழுக்குத்தான் என்ன?

அதற்குப் பதில் இல்லை. ஆனால், பழமை போற்றிப் பெண்களைப் படுபாதாளத்தில் தள்ள வேண்டும். அது தான் அவர்தம் வாதம். என்றாலும், விரைந்து முன்னேறும் மங்கையர் சமூகம் எல்லா எதிர்ப்புக்களையும் களைந்து பாரதியாரின் கனவை நனவாக்கும் என்னும் உறுதி எனக்குண்டு.

இன்றைக்குத் தமிழ் நாட்டுப் பெண்டிர் சற்றுக் கல்வி வளர்ச்சி பெற்றவராகக் காண்கின்றனர். அதற்குக் காரணம் தமிழ் நாட்டு அரசியலோ, வாழ்க்கை முறையோ அன்று என்று சொல்லிவிடலாம். மேலை நாட்டிலிருந்து ஈண்டுத் தம் சமயத்தைப் பரப்ப வந்த கிறித்தவப் பாதிரிமார்கள், ஊர்தோறும் கல்வி நிலையங்களும், மருந் தகங்களும் உண்டாக்கினார்கள்; மகளிர்க்கெனத் தனிக் கலா சாலைகளும், கல்லூரிகளும் அமைத்தார்கள்; வீடு தோறும் சென்று, பெண்கள் முன்னேற வேண்டிய அற நெறிகளை எடுத்துரைத்தார்கள். ஆடவரே அன்றிப் பெண்டிரும் அப்பணியில் தலை நின்று நம் நாட்டுப் பெண் கள் நிலையை உயர்த்தினார்கள் என்றால் மிகையாகாது. இன்று மேடைமேல் பெருஞ் சொற்பொழிவாளர்களாக வும், அரசியலிலே பங்கு கொள்பவர்களாகவும் உள்ள பெண்களில் பெரும்பாலார் இந்தக் கிறித்தவப் பாதிரி மார்தம் பள்ளிகளில் பயின்று பயன் பெற்றவர்களாகத் தான் இருப்பார்கள். எனவே, தமிழ் நாட்டுப் பெண்கள் சமுதாயம் இந்த அளவுக்கு முன்னேறி வளரக் காரண மாய் இருந்த கிறித்தவ சமயப் போதகர்களுக்குத் தமிழ் நாட்டு மகளிர் சமுதாயம் என்றென்றும் கடமைப் பட்டிருக்கிறது.

மற்றும், 'பிறவாதொழிகை நன்றே ஒரு காலமும் பெண் பிறப்பே,' என்ற பாட்டுப் பிறந்த நாட்டிலே, 'பேய் கொண்டாலும் கொளலாம் பெண் கொள்ள லாகாதே,' என்ற வரட்டு வேதாந்தம் பிறந்த நாட்டிலே,

இன்று பிறந்த பாட்டுக்கள் பெண்கள் நிலையை எவ்வளவோ உயர்த்தி விட்டன.

**'மங்கைய ராகப் பிறப்பதற் கேநல்ல**
**மாதவம் செய்திட வேண்டுமம்மா !—பெண்கள்**
**பங்கயக் கைந்நலம் பார்த்தல்ல வோஇந்தப்**
**பாரில் அறங்கள் வளருதம்மா !**

என்ற அந்த அளவுக்கு நாட்டில் பெண்களை முன்னுக்குக் கொண்டுவரும் புது முயற்சியில் புலவர்கள் பாடுபட வந்துள்ளமை கண்டு பெண்கள் மகிழத்தான் செய்கிறார்கள்! இன்னும் ஒரு புரட்சிக் 'கவிஞர் பெண்களை எவ்வளவு உயர்த்த வேண்டுமோ அந்த அளவுக்கு ஏட்டிலே உயர்த்துகின்றார். நாட்டில் வளர்ந்து வரும் கட்சிகள் அத்தனையும் பெண்களை முன்னுக்குக் கொண்டு வந்தால்தான் நாடு உண்மையில் உயர்வு பெறும் என்று பேசுகின்றன. ஆனால், அவற்றின் வாய்ச் சொல்லெல்லாம் செயலில் மட்டும் நன்கு சிறக்கக் காணவில்லை. செயலில் சிறப்பது உண்மையானால், அவர்கள் உடனே கிராமங்களுக்குச் சென்று, அங்கு உள்ள மக்கள் சமுதாயத்தை மாற்றி அமைத்து, அங்குப் பெண்கள் விடுதலையைக் காண முற்பட வேண்டும்.

அனைத்துக்கும் மேலாகப் பெண்களுக்கு இருக்கும் அந்தப் பரந்த உளப்பான்மை வேறு எந்த ஆடவருக்கும் இல்லையே! ஆடவர் உலகம், சாதி யென்றும் சமய மென்றும் பல்வேறு வகையில் வெறி பிடித்துத் தன் பெயர்க்குப் பின் சாதியையும் சமயத்தையும் குறிக்கும் பட்டங்களையும் பிறவற்றையும் பொருத்தி மகிழ்ந்து, மற்றவர்களுக்குத் தீங்கிழைக்க நினைப்பது போன்று, பெண்ணினம் என்றாவது நினைத்ததுண்டா? எந்தப் பெண்ணுக்காவது தன் பெயருக்குப் பின் சாதியையோ சமயத்தையோ குறிக்கும் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ள

னவா? முதலியாரும், ஐயரும், ஐயங்காரும், நாயுடுவும் பெண்கள் பெயருடன் என்றுவது பொருத்தப்பட்டுள்ள னவா? ஆடவர்தம் பெயருடன் தம் பெயரும் அமைய வேண்டுமென ஆசைப்பட்ட சில பெண்கள் வேண்டு மானால், ஆங்கில முறைப்படி தத்தம் பெயர்களை அமைத் துக்கொள்ளலாம். ஆனால், அதுவும் இந்தக் கண் மூடி நாகரிகத்தால் வந்ததுதானே? நம் தமிழ் நாட்டில் வாழும் பெண்கள் என்றுவது சாதிபற்றிய பெயர் பூண்டது இல்லையே! இன்றைக்குத்தான் என்ன! இந்த வேறு பாட்டுக்கொள்கைகளை வளர்க்கும் ஆடவர் கூட்டுறவில், கொள்ளையில், கொண்டாட்டத்தில் மகளிர் பெரும் பங்கு கொள்வது இல்லையே! ஆம்; பெண்கள் உள்ளம் அனைத்தினும் மேம்பட்டது! உலகம் வாழத் தான் வாழ வேண்டும் என்ற உணர்வினை உடையது; வையத்துக்கே தாய்மை உணர்ச்சியையும் இறைமை உணர்ச்சியையும் வாரி வழங்குவது. அந்த இறை உணர்ச்சியை உலகம் அறிய நாட்கள் பல செல்லும். எல்லாரும் எத்தகைய வேறுபாடும் இன்றி, 'அனைவரும் ஒன்று,' என்ற உணர் வில் மக்களை வாழ வைப்பது பெண் இனந்தான். எவ் வளவுதான் பிற்போக்கு நிலையிலே இருந்தாலும், பெண் இனம் இன்றேல், மாநில வாழ்வு கெடும்; வரலாறு மங்கிப் போகும்; வளமும் பிறவும் வற்றும். எல்லாரும் எல்லாமும் இன்பத் தனி வாழ்வில் இயங்க வேண்டுமாயின், பெண் இனத்தோடு என்றும் ஆணினம் பிரியாது—ஏன்— வேறுபடாது வாழத்தான் வேண்டும். இதைத்தான் சமயத் தலைவர்கள் சத்திகள் உடலிலும், நாவிலும், மார்பிலும் கடவுளர்க்கு அடங்கியதாகக் கற்பனை செய் கின்றார்கள். ஆம், பெண்ணினம் ஆணினத்தோடு உடலுக்கு உடலாய், உயிருக்கு உயிராய், உணர்வுக்கு உணர்வாய், உரையினுக்கு உரையாய், சொல்லிலும் செயலிலும் வேறுபாடற்ற உரிமை நிலையில் என்று ஒன்றி

வாழ்கின்றதோ, அன்றைக்குத்தான் உண்மையில் நாடும் நாமும் உயர்வோம். அது வரையில் வேறு எந்த வகையில் உலகம் முன்னேறி வந்தாலும், நாட்டில் பிற தீமைகளெல்லாம் வளர்ந்தே தீரும். எனவே, பரந்த உலகில் நிறைந்த இன்பத்தையும், ஒற்றுமை உணர் வினையும், உயர்ந்த வாழ்வமைப்பையும் காண விரும் பும் நல்லவர்கள் உலகம், பெண்மை நலத்தை - மாதர் வாழ்வை - ஓங்கி உயரச் செய்ய முதலில் பாடுபடுமாக! அவர்தம் வழி அன்பு உலகம் முகிழ்க்கும்; அமைதி உலகம் பூக்கும். அந்த உலகின் பூங்கொத்துக்களாக அனைவரும் மகிழ்ந்து, மணம் வீசி, நலம் பெற்று, நல் வாழ்வு வாழ்வோமாக!

## ஆசிரியர் அ. மு. பரமசிவானந்தம், M. A., M. Litt.

### அவர்கள் எழுதிய நூல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | இந்திய முதற் சட்டம் | (நாடகம்) | 2 | 50 |
| 2. | சாதி வெறி | ,, | 1 | 00 |
| 3. | வேள் பாரி | ,, | 1 | 00 |
| 4. | பாசம் | (இரு நாடகங்கள்) | 1 | 75 |
| 5. | வாழ்வுப் பாதை | (நாவல்) | 4 | 50 |
| 6. | துன்பச் சுழல் | ,, | 2 | 00 |
| 7. | கறை படிந்த உள்ளம் | (சிறு கதைகள்) | 1 | 37 |
| 8. | கண்டதும் கருத்தும் | (கட்டுரைகள்) | 1 | 00 |
| 9. | மலேயாச் சொற்பொழிவுகள் | ,, | 1 | 50 |
| 10. | கட்டுரைப் பத்து | ,, | 1 | 25 |
| 11. | தமிழன் கண்ட மலேயா | (கடிதங்கள்) | 2 | 00 |
| 12. | சீவகன் கதை | (காப்பியம்) | 2 | 25 |
| 13. | ஆருயிர் மருந்து (மணிமேகலை) | ,, | 1 | 50 |
| 14. | கடவுளர் போற்றும் தெய்வம் (கண்ணகி) | | 1 | 00 |
| 15. | முப்பெருங் காப்பியங்கள் | | 5 | 00 |
| 16. | தமிழ்நாட்டு விழாக்கள் | | 1 | 50 |
| 17. | மனிதன் எங்கு செல்கிறான் | | 1 | 50 |
| 18. | கவிதையும் வாழ்க்கையும் | | 7 | 00 |
| 19. | கங்கைக் கரையில் காவிரித் தமிழ் | | 2 | 50 |
| 20. | வையைத் தமிழ் | | 3 | 50 |
| 21. | தமிழக வரலாறு | | 6 | 00 |
| 22. | தமிழ் உரைநடை | | 3 | 50 |
| 23. | பாட்டும் பயனும் | | 2 | 50 |
| 24. | இளமையின் நினைவுகள் | | 2 | 50 |
| 25. | முதியோர் கல்வி | (நான்கு நூல்கள்) | 3 | 00 |
| 26. | கொய்த மலர்கள் | | 3 | 50 |


## தமிழ்க்கலைப் பதிப்பகம்

சென்னை - 30